ஷேக்ஸ்பியர் வரிசை

என்னிய என்னியாங்கு

AS YOU LIKE IT

பொற்கிழிக் கவிஞர்
அரு. சோமசுந்தரம்

— ஷேக்ஸ்பியரின் —

எண்ணிய எண்ணியாங்கு

(As You Like it)

''பொற்கிழிக்கவிஞர்''
அரு. சோமசுந்தரன், M.A.B.T.

பொன்முடி பதிப்பகம்
காரைக்குடி.

போன் : 2124

பொன்முடி : 29

உரிமை : ஆசிரியர்க்கே
முதற் பதிப்பு : ஏப்ரல், 1970
இரண்டாம் பதிப்பு : மே, 1976
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி, 1984
நான்காம் பதிப்பு , மே, 1991

விலை ரூ. 18-00

Publisheas :
Ponmudi Pathippagam
(Founded on 3—6—1963)
123, Muthupattinam III St,
Karaikudi, P.T.T.Dt 623001
Tamil Nadu. Phone : 2124

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை - 600 014

முதற்பதிப்பின் முன்னுரை

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்றார் பாரதியார். தமிழைத் தமிழைக் கொண்டு மட்டும் வளர்க்காமல், பிறமொழித் திறனும் கொண்டு வளர்ப்பது விரும்பத் தக்கதாகும். அம்முறையில் ஆங்கில இலக்கிய அறிவு பெறுவது தமிழ் உலகிற்குத் தேவையாகும். ஷேக்ஸ்பியர் நூல்கள் ஆங்கில இலக்கிய உலகில் அரசோச்சுகின்றன.

ஷேக்ஸ்பியரின் நூல்களை மொழிபெயர்க்கும் பணியில் ஏற்கெனவே 1) இரண்டாம் ரிச்சர்டு, 2) அந்தோனியும் கிளியோபாட்ராவும், 3) மாக்பெத் முதலிய நூல்களை வெளியிட்டு வெற்றி பெற்றுள்ளேன். இப்பொழுது 4. "எண்ணிய எண்ணியாங்கு" எய்துகிறது. இம்முயற்சி வழி வழி சிறக்க இறையருளையும், தமிழுலகின் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.

காரைக்குடி
1-4-1970

அரு. சோமசுந்தரன்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

1974ஆம் ஆண்டு மே மாதத்தில் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்த பொழுது பேரறிஞர் ஷேக்ஸ்பியரின் இல்லத்தை—காட்சியைக் காணும் பேறு பெற்றேன். அந்த இனிய நினைவோடு இந்த இரண்டாம் பதிப்பினை வெளியிடு கிறேன்.

காரைக்குடி
13-5-76

அரு. சோமசுந்தரன்

மூன்றாம் பதிப்பின் முன்னுரை

எட்டு ஆண்டுகளில் மூன்றாம் பதிப்பு வெளிவருகிறது.

காரைக்குடி
1-2-1984

அரு. சோமசுந்தரன்

நான்காம் பதிப்பின் முன்னுரை

ஏழு ஆண்டுகள் கழிந்து நான்காம் பதிப்பு வெளி வருகிறது.

அரு சோமசுந்தரன்
14-5-1991

நாடக மாந்தர்கள்

1.	பேரரசர்	: தம்பியால் நாடு கடத்தப்பட்டு, ஆர்டன் காட்டில் வசிப்பவர்.
2.	பிரடரிக்	: பேரரசரின் தம்பி, பேரரசரை நாடு கடத்திய வஞ்சகன்.
3.	ஏமியன்ஸ்	: பேரரசரின் பிரபுக்கள்
4.	ஜேக்குவஸ்	
5.	லெபோ	: பிரடரிக்கின் அன்புக்குரிய துணைவர்.
6.	சார்லஸ்	: பிரடரிக்கின் அரசவை மற்போர் வீரன்.
7.	ஆலிவர்	: இறந்துபோன பிரபு
8.	ஜேக்குவஸ்	: சர். ரோலண்டீபாய்சின்
9.	ஆர்லாண்டோ	: புதல்வர்கள்
10.	ஆடம்	:
11.	டென்னிஸ்	: ஆலிவரின் ஏவலர்
12.	டச்ஸ்டோன்	: முட்டாள் (பபூன்)
13.	சர். ஆலிவர் மார்ட்டெக்ஸ்	: பாதிரியார்
14.	கோரின்	:
15.	சில்வியஸ்	: இடையர்கள்
16.	வில்லியம்	:
17.	ரோசலிண்டு	: பேரரசரின் மகன். ஆர்லாண்டோவின் காதலி.
18.	சீலியா	: பிரடரிக்கின் மகள்; ஆலிவரின் காதலி.
19.	பீபி	:
20.	ஆட்ரி	: இடைச்சியர்
21.	ஹைமன்	: காதல் தெய்வம்.

மற்றும் பிரபுக்கள், பணியாட்கள் ஆகியோர்.

எண்ணிய எண்ணியாங்கு

(As you like it)

களம் : 1 காட்சி : 1

இடம் : ஆலிவரின் தோட்டம்

[இங்கிலாந்தை ஆண்டு வந்த பேரரசர் மிகவும் கருணை உள்ளம் படைத்தவர். அவரை அவரது தம்பியாகிய பிரடெரிக் முடிதுறக்கச் செய்து நாட்டை விட்டே ஓட்டி விட்டான். சூழ்ச்சி மிக்க பிரடெரிக் தானே அரசனாக முடிசூட்டிக் கொண்டான். பேரரசர் நாடு துறந்து ஆர்டன் காட்டுக்குத் தன் நண்பர்களுடன் சென்று அமைதியாக வாழ்க்கை நடத்தி வருகிறார். அவரிடம் அன்பு மிகக் கொண்ட நல்லபிரபுக்கள் ஒவ்வொருவராக நாட்டைவிட்டுக் காட்டுக்குச் சென்று அவருடன் கூடி வாழத் தலைப்படு கின்றனர். இங்கிலாந்திலுள்ள பிரபுக்களில் சர் ரோலண்ட்டீ பாய்சு என்பவர் ஒருவர். அவர் மிகவும் சிறந்த பண்புகள் உடையவர். பேரரசரிடம், அளவற்ற அன்புடையவர் பேரரசர் முடிதுறந்த துக்கத்தால் அவர் நோய்வாய்ப் பட்டு உயிர் துறக்கிறார்; உயிர் துறக்கு முன் அவர் தன் மூத்த மகனான ஆலிவரை அழைத்துத் தன் ஜமீனை அவனிடம் ஒப்படைத்துத் தனது மற்ற இரு புதல்வர்களான ஜேக்குவர். ஆர்லாண்டோ ஆகியோரை நன்குகவனித்துக் கொள்ளுமாறு ஆணையிட்டுக் கண் மூடுகிறார். அவர்மறைந்ததும் ஆலிவஸ் பிரபுவாகிறான். அவனோ கொடுமை உள்ளம் படைத்தவன். அவனது தம்பியாகிய ஆர்லாண்டோ சிறந்த வீரன். உயர்ந்த பண்பு நலம் படைத்தவன். அவனது பண்பு களால்அவன் ஜமீன் மக்களால் பெரிதும் நேசிக்கப்படுகிறான்.

இந்தச் செயல் ஆலிவரின் பொறாமைத் தீயை வளர்க்கிறது. எனவே ஆலிவர் தன் ஒரு தம்பியாகிய ஜேக்குவசைப் படிக்க வைத்து மற்றொரு தம்பியாகிய ஆர்லாண்டோவைப் படிக்க வைக்காமல் புறக்கணிக்கிறான். எல்லா வகைகளிலும் ஆர்லாண்டோவுக்குத் தீங்கு செய்கிறான். இந்தச் சூழ்நிலையில் அவர்கள் குடும்பத்தில் ஆடம் என்ற கிழவன் ஒருவன் பல்லாண்டுகளாகப் பணியாளாக வேலை பார்த்து வருகிறான். அவன் மிகவும் நேர்மையானவன். எனவே இவன் ஆர்லாண்டோவுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு மிகவும் துயர் உறுகிறான். ஆர்லாண்டோவுக்கு எவ்வாறேனும் துணை நிற்க முற்படுகிறான். இச்சூழ்நிலையில் நாடகம் தொடங்குகிறது.

[ஆர்லாண்டோ, ஆடம் ஆகிய இருவரும் தோன்றுகின்றனர்]

ஆர்லாண்டோ : ஆடம்! எனக்கு நினைவுக்கு வருகிறது... என் தகப்பனார் எனக்குரிய சிறு (ஆயிரம் கிரவுன்) பங்கைச் சாசனப்படுத்தி என் மூத்த அண்ணன் ஆலிவரின் பாதுகாப்பில் என்னை விட்டுச் சென்றார். என்னை நன்கு வளர்க்கும்படி வேண்டி மறைந்தார். அது பற்றி எனக்கு நீயும் சொல்லியிருக்கிறாய். ஆனால் என் மூத்த அண்ணனோ என் இளைய அண்ணனான ஜேக்குவசைப் பள்ளிக்கு அனுப்பிப் பயில வைக்கிறான். அதனால் ஜேக்குவசின் வளர்ச்சி சிறப்பானதாக இருக்கிறது. ஆனால் என்னைப் பொறுத்த வரை என் அண்ணன் ஆலிவர் என்னை வீட்டிலேயே போட்டுத் துருப்பிடிக்க வைக்கிறான். பசுவைக் கொட்டிலில் அடைப்பதற்கும் என்னை வீட்டில் அடைப்பதற்கும் வித்தியாசம் இல்லை. அவனது குதிரைகள்கூட என்னைவிட நன்றாக வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு நல்ல உணவு உண்டு; பயிற்சி உண்டு; சிறப்பான காவல்

உண்டு. ஆனால் நானோ, அவனது சொந்தத் தம்பி, அவனது காவலின் கீழ் எதையும் பெறவில்லை, உடல் வளர்ச்சியைத் தவிர. மேலும் அவன் எனக்கு எந்த நன்மையும் செய்யாமல், இயற்கை எனக்குத் தந்துள்ள சில நன்மைகளையும் தனது முகமாறுபாட்டால் கைப்பற்ற நினைப்பது போல் தெரிகிறது. அவன் என்னை அவனது மாடுகளோடு உண்ண வைக்கிறான். உடன் பிறந்தானுக்கு உரிய உரிமைகளைத் தடுக்கிறான். அவனிடம்தான் எனது பெருமையும் கல்வியும் அடைபட்டுக் கிடக்கின்றன. அதுதான் ஆடம், என்னை வருத்துகிறது. என் நெஞ்சிலே நிலைத்துள்ள என் தந்தையின் பாசம் என்னை இந்த அடக்கு முறையை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யத் தூண்டுகிறது. அதை நான் நீண்ட நாள் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை. ஆனால் புரட்சியைத் தடுக்க வேறு நல்ல வழியும் எனக்குப் புலப்படவில்லை.

ஆடம் : அதோ தங்கள் அண்ணன், எனது எஜமான் வருகிறார்

ஆர்லாண்டோ : ஆடம், விலகிப் போ. அவன் என்னை எவ்வாறு கலக்குகிறான் என்பதைக் கவனி. (ஆடம் மறைகிறான்.)

[ஆலிவர் வருகிறான்]

ஆலிவர் : (ஆர்லாண்டோவை நோக்கி) ஏய்! இங்கே என்ன செய்து செய்து கொண்டிருக்கிறாய்?

ஆர்லாண்டோ : எதுவும் செய்யவில்லை. எதுவும் செய்ய எனக்குக் கற்பிக்கவும் இல்லை.

ஆலிவர் : அப்படியானால் இங்கு என்ன வேலை?

ஆர்லா : ஏன்?...உங்கள் தகுதியற்ற தம்பி இங்கே சோம்பேறியாக இருக்கிறான்.

ஆலிவர் : ஏதாவது உருப்படியான வேலை செய். உதவாக்கரையாக இருக்காதே.

ஆர்லா : (கோபமாக) அப்படியானால் நான் உங்கள் பன்றியை மேய்க்கட்டுமா! அவற்றுடன் தவிட்டை உண்ணட்டுமா? இத்தகு ஏழ்மை நிலைக்கு நான் ஆளாக என்ன பாவம் செய்தேன்? எந்தச் சொத்தை அழித்தேன்.

ஆலிவர் ; நீ எங்கிருக்கிறாய் என்பது நினைவில் இருக்கட்டும்

ஆர்லா : நன்றாக நினைவிருக்கிறது. இங்கே உங்கள் தோட்டத்தில் இருக்கிறேன்.

ஆலிவர் : யாருக்கு முன்னால் தெரிகிறதா?

ஆர்லாண்டோ : தெரிகிறது. எனக்கு முன்னால் நிற்பவருக்குத் தெரிவதைவிட எனக்கு நன்றாகத் தெரிகிறது. நீங்கள் என் மூத்த அண்ணன் என்பது தெரிகிறது. இரத்தபாசத் தொடர்பால் அது உங்களுக்கும் தெரியும். நீங்கள் முதலில் பிறந்ததால் நாட்டு மரபு உங்களுக்கு நன்மை அளித்திருக்கிறது. ஆனால் அதே மரபு நம் இருவருக்கும் இடையே இருபது பேர் உடன் பிறந்திருப்பினும் எனக்குரிய இரத்தப் பண்புகளை எடுக்க இயலாது. உங்களிடம் இருக்கும் அளவுக்கு என் உள்ளத்திலும் என் தந்தையின் உணர்ச்சி இரு

கிறது. தாங்கள் என் அருகே வருவது அவரது நினைவை ஏற்படுத்துகிறது.

ஆலிவர் : (கோபமாக) என்ன சொன்னாய் மடையா! (அடிக்கக் கையை ஓங்குகிறான்)

ஆர்லாண்டோ : (ஆலிவரின் கையைச் சுலபமாசப் பிடித்து) வருக! வருக! அண்ணா, நீங்கள் இத்துறையில் மிகவும் இளையவர்

ஆலிவர் ; என்ன? என்மீது கை வைக்கிறாயா! அயோக்கிய சிகாமணி!

ஆர்லா : நான் அயோக்கிய சிகாமணி அல்லன்; சர் ரோலண்ட் டீ பாய்சின் இளைய மகன் அவர்தான் என் தந்தை. அத்தகு தந்தையின் புதல்வனைஅயோக்கியன் என்று சொல்பவன் ஒரு படு அயோக்கியன் ஆவான். நீங்கள் என் அண்ணனாக இல்லாதிருந்தால், என்னை இவ்வாறு மொழிந்த உங்கள் நாக்கை இழுக்கும் வரை இந்தக் கையை உங்கள் கழுத்திலிருந்து எடுத்திருக்க மாட்டேன். ...பரவாயில்லை, நீங்கள் உங்களையே திட்டிக் கொண்டு விட்டீர்கள்.

ஆடம் : (வெளித்தோன்றி) எஜமானர்களே! பொறுமையாக இருங்கள். உங்கள் தந்தையாரின் நினைவில் பிணக்கம் நீங்கி இணக்கம் கொள்ளுங்கள்.

ஆலிவர் ; நான் கேட்கிறேன்...நான் போகலாமா?

ஆர்லாண்டோ : உங்களைப் போக விடமாட்டேன் நான் விரும்பும்வரை. நான் சொல்வதை நன்றாகக்கேளுங்கள். நம் தந்தையார் தனது சாசனத்தில் எனக்கு நல்ல கல்வி அளிக்கும்படி உங்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்.

ஆனால் நீங்களோ என்னை ஒரு குடியானவனைப் போலப் பழக்கியிருக்கிறீர்கள். உயர்ந்த பண்புகள் என்னிடம் உருவாகாமல் தடுத்திருக்கிறீர்கள். என் தந்தையின் உணர்ச்சி என் உள்ளத்தில் வளர்கிறது. நான் இனிப் பொறுக்க மாட்டேன். ஆகவே நான் ஒரு பண்பாளனாக வளரத்தக்க பயிற்சிகளை எனக்கு அளியுங்கள். அல்லது எனது தந்தையார் தனது சாசனத்தில் எனக்காக விட்டுச் சென்றிருக்கும் பங்கை எனக்கு அளியுங்கள். அதன் மூலம் நான் வெளியேறி என் அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொள்கிறேன்.

ஆலிவர் : அது தீர்ந்த பிறகு என்ன செய்வாய்? பிச்சை எடுப்பாயா? நல்லது...உள்ளே வா...இனி நீண்ட நாள் உன் தொல்லையை என்னால் பொறுக்கமுடியாது. சாசனப்படியுள்ள உன் பங்கைப் பெற்றுக் கொள். உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைப் போகவிடு...

ஆர்லாண்டோ : இனி உங்களுக்கு நான் தொல்லை கொடுக்க மாட்டேன்...வருகிறேன்.

ஆலிவர் : (ஆடம் கிழவனை நோக்கி) ஏ கிழட்டு நாயே! நீயும் அவனுடன் போ...

ஆடம் : (வருத்தமாக) ''கிழட்டு நாய்''—இதுதான் எனக்குக் கிடைத்த பரிசா? உண்மைதான். நான் உங்கள் சேவையில் என் பற்களை இழந்திருக்கிறேன். எனவே நான் கிழட்டு நாய்தான்! எனது பழைய எஜமானரைக் கடவுள் வாழ்த்தட்டும்! அவராக இருந்திருந்தால் இத்தகு வார்த்தையைச் சொல்லியிருப்பாரா? ஒருகாலும் மாட்டார்... (ஆர்லாண்டோ, ஆடம் இருவரும் செல்கின்றனர்.)

ஆலிவர் : (தனக்குள்) ஓகோ! அப்படியா? என்னையே தாக்கும் அளவுக்கு வளர்கிறாயா? உன் வளர்ச்சியைச் சிதைக்கிறேன். உனக்கு நான் ஆயிரம் கிரவுன் பணமும் தரப்போவதில்லை...வருவது வரட்டும்... (டென்னிஸ் என்னும் பணியாளனைஅழைக்கிறான்)...ஏ டென்னிஸ்!

(டென்னிஸ் வருகிறான்)

டென்னிஸ் : என்னை அழைக்கிறீர்களா?

ஆலிவர் : அரசரின் அரசவை மல்யுத்த வீரர் சார்லஸ் என்னைக் கண்டு பேச வந்திருந்தார் அல்லவா!

டென்னிஸ் : ஆம். வாயிலில் காத்திருக்கிறார். தங்கள் ஆணையை எதிர்பார்த்திருக்கிறார்.

ஆலிவர் : அவரை வரச்சொல்...(டென்னிஸ் செல்கிறான்) ம்... அது ஒரு நல்ல யோசனை! சரியான வழி! நாளை மல்யுத்தம் நடக்கப் போகிறது...

(சார்லஸ் வருகிறான்)

சார்லஸ் : பிரபு! வணக்கம்!

ஆலிவர் : வணக்கம் சார்லஸ்! புதிய அரசவையில் ஏதாவது புதிய செய்தி உண்டோ?

சார்லஸ் : பிரபு! அரசவையில் பழைய செய்தி தவிரப் புதிய செய்தி எதுவுமில்லை. அதுதான்...பேரரசர், பிரடரிக்கால் நாடு கடத்தப்பட்டதும் மூன்று அல்லது நான்கு பிரபுக்கள் தாங்களாகவே ஜமீனைத் துறந்து பேரரசருடன் காட்டுக்குச் சென்றுள்ளனர். புதிய

அரசரான பிரடரிக் அந்தப் பிரபுக்களின் ஜமீனையும் வருவாயையும் பறித்துக் கொண்டு விட்டார். ஆகவே புதிய அரசர் அத்தகு பிரபுக்களுக்கு மகிழ்ச்சியாக விடை கொடுத்துள்ளார்.

ஆலிவர் : பேரரசரின் மகள் ரோசலிண்டும் அவருடன் நாடு கடத்தப்பட்டாளா?

சார்லஸ் : இல்லை இல்லை. புதிய அரசரின் மகள் சீலியா பேரரசரின் மகள் ரோசலிண்டைத் தொட்டிற் பருவம் முதல் இணைபிரியாது நேசித்து வந்திருப்பதால் அவளைப் பிரிய மாட்டாள். ரோசலிண்டை நாடு கடத்தினால் சீலியாவும் நாடு துறப்பாள்; வற்புறுத்தித் தங்க வைத்தால் உயிர் துறப்பாள்! ஆகவே ரோசலிண்டும் இப்பொழுது அரண்மனையில் இருக்கிறாள். தன் சிற்றப்பாவின் முழு அன்புக்கு உரியவளாக இருக்கிறாள். பெண்கள் இருவரும் எப்போதையும்விட இப்பொழுது பேரன்புடையவர்களாகத் திகழ்கிறார்கள்.

ஆலிவர் : பேரரசர் இனி எங்கே வசிப்பார்?

சார்லஸ் : அவர் ஆர்டன் காட்டில் வசிப்பதாகச் சொல்கிறார்கள். மகிழ்ச்சி மிக்க பலர் அவருடன் தங்கியிருக்கிறார்கள். அங்கே இங்கிலாந்தின் பழைய ராபின் ஹுட் போல வாழ்கிறார்கள். நல்ல இளைஞர்கள் பலர் நாள்தோறும் அவரிடம் ஓடுவதாகவும், சொர்க்க பூமியில் சுகமாக வாழ்வது போலக் கவலையின்றிக் காலத்தைப் போக்குவதாகவும் சொல்கின்றனர்.

ஆலிவர் : சரி...புதிய அரசருக்கு முன்னால் நீ நாளை மற்போர் புரிகிறாய் அல்லவா!

சார்லஸ் : ஆம். நான் தங்களை ஒரு காரணத்துக்காகத் தான் சந்திக்க வந்துள்ளேன். தங்கள் தம்பி ஆர்லாண்டோ மாறுவேடத்தில் என்னோடு மற்போர் புரிய வர இருப்பதாக இரகசியச் செய்தி மூலம் அறிந்து கொண்டுள்ளேன். ஐயா! நாளை நான் என் பெருமைக்காகப் போராடுகிறேன். எலும்பு முறியாமல் நாளை என்னிடமிருந்து தப்புபவன் விடுதலை பெற்றதாகத் தான் அர்த்தம். தங்கள் தம்பி மிகவும் இளைஞன்; பச்சைப் பாலகன். அவன் என்னை எதிர்த்து வந்தால் அவனை நான் என் மரியாதைக்காகவாவது முறியடிக்க வேண்டும். உங்கள்மீது உள்ள அன்பின் காரணமாக இதனைச் சொல்ல வந்தேன். ஒன்று மற்போர் முயற்சியில் ஈடுபடாமல் அவனைத் தடுத்து நிறுத்துங்கள். அல்லது அவனுக்கு ஏற்படப் போகும் அவமானத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இப்படி வரும் அவமானம் அவன் தானே தேடிக் கொள்வது; அதுவும் என் விருப்பத்திற்கு எதிரானது.

ஆலிவர் : சார்லஸ்! உன் அன்புக்கு மிக்க நன்றி. அதற்குக் கைம்மாறு உறுதியாக உண்டு. என் தம்பியின் நோக்கத்தை நானே கவனித்தேன். அதிலிருந்து அவனை மாற்ற வேறு வழிகளில் முயன்றேன். ஆனால் அவன் உறுதியாக இருக்கிறான். சார்லஸ்! உனக்கு ஒன்று சொல்கிறேன். பிரான்சிலேயே மிக உறுதி வாய்ந்த இளைஞன் அவன்தான். பேராசை உள்ளமும், பிறர் நலம் கண்டு பொறாமை கொள்ளும் சிந்தையும் உடையவன். அவனது சொந்த அண்ணனாகிய எனக்கு எதிராகவே அவன் சூழ்ச்சி செய்கிறான். ஆகவே உன் விருப்பப்படி செய். அவனது விரலை முறிப்பது போல அவனது கழுத்தை முறி. நீ அதனை நன்றாகக் கவனித்துச் செய்ய வேண்டும். நீ அவனுக்கு ஏதாவது சிறிய அவமானத்தோடு விட்டுவிடுவாயே. ஆனால் அவன் உனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யத் தயங்க

மாட்டான். நஞ்சு மூலமோ அல்லது வேறு கொடிய முறைகளின் மூலமோ உன் உயிரைக் கொள்ளை கொள்ளும் வரை அவன் ஓய மாட்டான். கண்ணீர் விட்டு உறுதியாகச் சொல்கிறேன். அவனைப்போல ஒரு கொடியவன் இந்த உலகத்திலேயே இல்லை. சகோதர பாசம் இல்லாமல் பேசுகிறேன். அவனது நிலை பற்றி நான் கூறுபோட்டுக் கூறுவேனே ஆனால் நான் இரத்தக் கண்ணீர் வடிப்பேன்; நீயும் அச்சத்தால் சோர்வாய்.

சார்லஸ் : நான் தங்களைச் சந்தித்தமைக்கு மிகவும் மகிழ்கிறேன். அவன் நாளை என்னை எதிர்த்து வருவானேயானால் அவனுக்கு உரியதைக் கொடுப்பேன். அவன் உயிரோடு திரும்புவானே ஆனால் நான் இனி மற்போர் புரியேன். கடவுள் அருள் புரிவார்.

ஆலிவர் : வணக்கம் சார்லஸ்! (சார்லஸ் செல்லுகிறான்) இந்த வீரனை நான் நன்கு கலக்கி விட்டேன். இனி என் தம்பிக்கு ஒரு முடிவு ஏற்பட்டுவிடும். என் மனம் அவனை ஏன் இவ்வாறு வெறுக்கிறது என்பது எனக்கே தெரியவில்லை. இருந்தும் அவன் பெருந்தன்மை வாய்ந்தவனாக இருக்கிறான். உயர்ந்த பண்புகளின் உறைவிடமாகவும், அன்புக்கு உரியவனாகவும் விளங்குகிறான். உலகத்தார் இதயங்களில், அதிலும் குறிப்பாக எனது ஜமீன் மக்களின் இதயங்களில் அவன் வாழ்கிறான். அதே இதயங்கள் என்னைத் தூற்றுகின்றன. ஆனால் இந்நிலை நீண்ட நாள் நீடிக்கக் கூடாது. இந்த மற்போர் வீரன் அந்நிலையை மாற்றி விடுவான். இனி நான் செய்யக் கூடியது எதுவுமில்லை அவனைக் கிளப்பி விடுவது தவிர. அதனைச் செய்ய உடனே செல்கிறேன். (போகிறான்)

காட்சி—2

இடம் : அரசரின் அரண்மனை முற்றத்தில் இனிய புல்வெளி

சீலியா : உன்னை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். ரோசலிண்ட்...சகோதரி...மகிழ்ச்சியாக இரு...

ரோசலிண்ட் : அன்புள்ள சீலியா! என் மன நிலையைவிட அதிக மகிழ்ச்சியைத்தான் நான் காட்டுகிறேன். இன்னும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்கிறாயா? நாடு கடத்தப்பட்ட தந்தையை மறக்கும் கலையை எனக்கு நீ கற்பித்தால் ஒழிய மகிழ்ச்சியிலே என்னை நீ திளைக்க வைக்க முடியாது.

சீலியா : நான் உன்னை எவ்வளவு அன்பாக நேசிக்கிறேனோ அந்த அளவு நீ என்னை நேசிக்கவில்லை என்பதை உணர்கிறேன். உன் தந்தை என் தந்தையை நாடு கடத்தி, நான் உன்னோடு இருக்க நேர்ந்திருப்பின், உன் தந்தையை நான் என் தந்தையாக ஏற்றுக் கொண்டிருப்பேன். உன் அன்பு உண்மையாக இருப்பின் அது போல் நீயும் செய்...

ரோச : சரி...உன்னோடு மகிழ்ச்சியில் திளைக்க என் கவலையை மறக்கிறேன்.

சீலியா : என் தந்தைக்கு என்னைத் தவிர வேறு குழந்தை இல்லை. இனி வேறு குழந்தையும் பிறக்கும் நிலை இல்லை. ஆகவே அவர் மறைவுக்குப் பிறகு அவரது சொத்து எனக்கு வரும். அவை அனைத்தையும் அன்பின் காரணமாக நான் உனக்கு வழங்குவேன். ஆகவே இனி நீதான் அவரது வாரிசு ஆவாய். நான் சொல்லுவது

உறுதி! என்மீது ஆணை! நான் அதைச் செய்வதும் உறுதி! அந்த உறுதியை நான் மீறினால் அரக்கியாக மாறுவேன். ஆகவே அன்பு மிக்க ரோஸ்! இனிய ரோஸ்!...மகிழ்ச்சியாக இரு...

ரோச : சகோதரி...இனிமேல் நான் மகிழ்ச்சியாக இருப்பேன். விளையாட்டுக்களில் ஈடுபடுவேன். உன்னை ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். காதலைப் பற்றி உன் கருத்து என்ன?

சீலியா : உன்னை வேண்டிக் கொள்கிறேன். எல்லோருடனும் விளையாடு, ஆனால் எவனையும் காதலிக்காதே.

ரோச : அப்படியானால் இன்று என்ன விளையாடலாம்?

சீலியா : நாம் ஆர அமர இருந்து அதிர்ஷ்டம் என்னும் மங்கையைக் கேலி செய்வோம். அதனால் இனி அவளது அதிர்ஷ்டச் சக்கரம் ஒழுங்காகச் சுற்றி அனைவருக்கும் சமமாக நீதி வழங்கட்டும்.

ரோச : அங்ஙனமே செய்வோம். அதிர்ஷ்டத்தின் நன்மைகள் தவறாகத்தான் அடையப்பட்டிருக்கின்றன அந்த அழகான அந்தகி தன் பரிசுகளை வழங்குவதில் மாபெரும் தவறு செய்து விட்டாள்.

சீலியா : உண்மைதான். அவள் அழகு வைக்கும் இடத்தில் நேர்மையை அழிக்கிறாள். நேர்மை வைக்கும் இடத்தில் அழகை அழிக்கிறாள்.

ரோச : இல்லை. நீ இப்பொழுது அதிர்ஷ்டத்தின் வேலைகளைவிட்டு, இயற்கையின் வேலைகளைத் தொடுகிறாய். உலகத்தின் பரிசுகளில் அதிர்ஷ்டம் ஆட்சி செய்கிறது; இயற்கையின் எழிலில் அன்று.

சீலியா : இல்லை. இயற்கையானது ஓர் அழகிய உருவத்தைப் படைத்திருக்கும் பொழுது, அது அதிர்ஷ்டத்

தின் விளைவால் நெருப்பில் விழாதா? அதிர்ஷ்டத்தைச் சாட நமக்கு இயற்கை அறிவைக் கொடுத்திருக்கும் பொழுது, அதிர்ஷ்டமானது நமது விவாதத்தைத் தடுக்க இந்த மடையனை அனுப்புவதைப் பார்...

(டச்ஸ்டோன் என்னும் முட்டாள்...கோமாளி வருகிறான்.)

ரோச : உண்மைதான்...அதிர்ஷ்டம் இயற்கையைக் கடந்திருக்கிறது...இயற்கையின் இயற்கையான அறிவை அதிர்ஷ்டம் சிதைக்கிறது.

சீலியா : இது அதிர்ஷ்டத்தின் வேலையன்று! இயற்கையின் வேலையாகும். நமது இயற்கையான அறிவு அத்தகு நன்மைகளை அறிய முடியாத அளவுக்கு மந்தமாக இருப்பதை அறிந்து, இந்த இயற்கையான மனிதனை நமது சாணைக் கல்லாக அனுப்பியிருக்கிறது. எப்பொழுதும் முட்டாளின் மந்தம் அறிவாளியின் சாணைக்கல்லாகும்! (டச்ஸ்டோனை நோக்கி) என்ன முட்டாள்! எங்கே இப்படி சுற்றித் திரிகிறாய்?

டச்ஸ்டோன் : அம்மா! உங்கள் தந்தையார் உங்களை அழைக்கிறார்.

சீலியா : நீ என்ன தூதுவனா?

டச்ஸ்டோன் : இல்லை. என் மானத்தின்மீது ஆணை! உங்களை அழைத்துவர நான் ஆணையிடப்பட்டேன்.

ரோச : அந்த ஆணையை நீ எங்கே கற்றுக் கொண்டாய் முட்டாள்?

டச்ஸ்டோன் : வீரன் ஒருவனிடமிருந்து கற்றுக் கொண்டேன். அவன் தன் மானத்தின்மீது ஆணையிட்டுத்

தோசை நல்லது என்றும், கடுகு தீயது என்றும் சொன்னான். நானும் அதே நிலையை ஒப்புக் கொண்டு தோசை தீயது என்றும், கடுகு நல்லது என்றும் மறுத்துக் கூறினேன். ஆனால் அவனது ஆணையின் கருத்தும் பொய்யன்று.

சீலியா : உன் அறிவைக் கொண்டு அதனை எங்ஙனம் மெய்ப்பிப்பாய்?

ரோச : எங்கே உன் அறிவை வெளிப்படுத்து பார்க்கலாம்!

டச் : நீங்கள் இருவரும் இணைந்து நில்லுங்கள். உங்கள் கன்னங்கள் தோய உங்கள் தாடியின்மீது ஆணையிட்டு, "நான் ஒரு கயவன்'' என்று கூறுங்கள் பார்கலாம்.

சீலியா : எங்களுக்குத் தாடியிருப்பின் அதன்மீது ஆணையிட்டுக் கூறுகிறோம் "நீ ஒரு கயவன்.''

டச் : நான் ஒரு கயவனாக இருப்பின் அந்தக் கயமையின் பேரால் கூறுகிறேன். நான் ஒரு கயவன்தான். ஆனால் உங்கள் ஆணையானது, இல்லாததன்மீது கூறப்பட்டிருப்பின் அது சொல்லாததே ஆகும். அது போலவே அந்த வீரனும் தன்னிடம் இல்லாத தன்மானத்தின்மீது ஆணையிட்டுக் கூறினான். அல்லது அவனிடம் அது இருந்திருப்பின் அவன் தோசையையோ கடுகையோ பார்க்குமுன்பு ஆணையிட்டு விட்டதாகக் கொள்ளலாம்.

சீலியா : யார் அந்த வீரன்!

டச் : உங்கள் தந்தையான கிழட்டு பிரடரிக்கின் அன்புக்கு உரியவன் அவன்.

சீலியா : என் தந்தையின் அன்பே அவனை மரியாதை செய்யப் போதுமானதாகும். இனி அவரைப் பற்றிப் பேசாதே. நீ அளவு கடந்த உரிமையை எடுத்துக் கொள்வதற்காக என்றாவது ஒருநாள் சவுக்கடிபடப் போகிறாய்.

டச் : வருந்தத்தக்கது என்ன என்றால், அறிவாளிகள் செய்யும் முட்டாள்தனமான காரியங்களை, முட்டாள்கள் அறிவான முறையில் சொல்லத் தெரியாதது தான்.

சீலியா : நீ சொல்வது உண்மை. முட்டாள்களிடம் உள்ள சிறிய அறிவுச்சுடரை அடக்கியதால், அறிவாளிகளிடம் உள்ள சிறிய மூட்டாள்தனம் மாபெரும் வெளிச்சம் போடுகிறது.

...அதோ லெபோ வருகிறான்.

ரோசா : அவன் ஏதோ செய்தி கொண்டு வருவது போல் தெரிகிறது.

சீலியா : புறா தன் குஞ்சுகளுக்கு உணவு வழங்குவதைப் போல் அவன் நமக்குச் செய்தி வழங்கப் போகிறான்.

ரோசா : அப்படியானால் நாம் செய்தியில் மூழ்கப் போகிறோம்.

சீலியா : எல்லாம் நன்மைக்குத்தான். (பணியாள் லெபோ வருகிறான்.)

சீலியா : லெபோ! என்ன செய்தி?

லெபோ : இனிய இளவரசி! நீங்கள் ஒரு நல்ல விளையாட்டை இழந்து விட்டீர்கள்.

சீலியா : விளையாட்டா? எத்தகைய விளையாட்டு?

லெபோ : எத்தகையதா? அம்மா! எங்ஙனம் நான் விளக்குவேன்?

ரோச : அறிவும் அதிர்ஷ்டமும் விளக்குகின்ற வகையில் விளக்கு.

டச் : அல்லது விதி வகுக்கின்ற முறையில் விளக்கு.

சீலியா : நன்றாகச் சொன்னீர்கள்.

லெபோ : இளவரசிகளே! நீங்கள் என்னை அலற அடிக்கிறீர்கள். நீங்கள் காணத் தவறிய ஒரு நல்ல மற்போர்க் காட்சியை நான் விளக்க நினைத்தேன்.

ரோச : அந்த மற்போரின் தன்மையை விளக்கு.

லெபோ : அதன் தொடக்கத்தைச் சொல்கிறேன். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளித்தால் நீங்கள் அதன் முடிவை நேரில் காணலாம். ஏனெனில் இன்னும் இறுதிப் போர் நடைபெறவில்லை. நீங்கள் இப்பொழுது நிற்கும் இதே இடத்தில் தான் அவர்கள் அந்த இறுதி மற்போரை நடத்த வந்து கொண்டிருக்கிறார்கள்.

சீலியா : நல்லது. தொடக்கமானது மாண்டு மண்ணாகி விட்டது.

லெபோ : மற்போர்க்களம்! கிழவன் ஒருவன் தன் மைந்தர்கள் மூவரோடு வருகிறான்.

சீலியா : இந்தத் தொடக்கத்தை நான் ஒரு பழைய கதை யோடு பொருத்தலாம்.

லெபோ : அந்த மைநதர்கள் மூவரும் அழகான தோற்றமும் வளர்ச்சியும் உடையவர்கள்.

ரோச : அவர்கள் கழுத்தில் அனைவரும் அறியுமாறு விளம்பரம் கட்டியிருந்தார்கள்.

லெபோ : அவர்களில் மூத்தவன் அரசாங்க மற்போர் வீரன் சார்லசுடன் முதலில் போர் செய்தான். ஆனால் ஒரே நொடியில் சார்லஸ் அவனை வீழ்த்தி அவனது எலும்புகளில் மூன்றை முறித்துவிட்டான். இனி அவன் பிழைப்பான் என்ற நம்பிக்கை துளியும் இல்லை. அங்ஙனமே சார்லஸ் இரண்டாமவன், மூன்றாமவனை யும் வீழ்த்தினான். போர்க்களத்தில் அவர்கள் எலும்பு முறிந்து கிடக்கிறார்கள். அவர்களின் வயதான தந்தை அவர்கள்மீது விழுந்து அழுகிறார். அதைக் கண்ட மக்களும் கண்ணீர் வடிக்கின்றனர்.

ரோச : ஐயோ! பாவம்!

டச் : லெபோ! பெண்கள் காணத் தவறிய விளையாட்டு இதில் என்ன இருக்கிறது?

லெபோ : ஏன்? நான் வர்ணித்த இந்த மற்போர்தான் அந்த விளையாட்டு!

டச் : இங்ஙனம் மனிதர்கள் நாள்தோறும் அறிவாளி களாக வளர்கிறார்கள். எலும்பை முறிப்பது பெண்கள்

காணத்தக்க விளையாட்டு என்பதை இப்பொழுதுதான் முதன் முறையாகக் கேள்விப்படுகிறேன்.

சீலியா : நானும் இப்பொழுதுதான் கேள்விப்படுகிறேன். இது உறுதி!

ரோச : இன்னும் வேறு யாராவது எலும்பை முறித்துக் கொள்ள இருக்கிறார்களா? சகோதரி! இந்த மற் போரை நாம் பார்க்கலாமா?

லெபோ : நீங்கள் இங்கே தங்கினால் அதை நிச்சயம் பார்த்துத்தான் தீர வேண்டும். இங்குதான் அந்த மற்போர் நடை பெறப்போகிறது. அவர்கள் அதனை நடத்தத் தயாராக வருகிறார்கள்.

சீலியா : ஆம்...அதோ அவர்கள் வருகிறார்கள். நாம் இப்பொழுது தங்கி அதனைக் காண்போம்.

(முரசு முழங்குகிறது. அரசர் பிரடரிக், பிரபுக்கள், ஆர்லாண்டோ, சார்லஸ் மற்றும் பணியாட்கள் வருகின்றனர்)

பிரடரிக் : ளாருங்கள்......அந்த இளைஞன் நம் வேண்டு கோளை ஏற்று விலகாததால், அவனுக்கு மற்போரில் விளையும் ஆபத்துக்கு அவனே பொறுப்பாளி யாகிறான்.

ரோச : அதோ அவன் தான் மற்போர் நிகழ்த்தப் போகும் அந்த இளைஞனா?

லெபோ : ஆம் அம்மா!

சீலியா : அந்தோ! அவன் மிகவும் இளைஞனாக இருக்கிறானே. ஆனாலும் அவன் வெற்றி வீரன் போல் திகழ்கிறான்.

பிரடரிக் : என்ன? மகளே! சீலியா! ரோசலிண்ட்! நீங்களுமா மற்போர் காண வந்திருக்கிறீர்கள்?

ரோச : ஆம் அரசே! எங்களுக்கு அனுமதி வழங்கினால் அதனைக் காண விரும்புகிறோம்.

பிரடரிக் : இதில் உங்களுக்கு ஒன்றும் மகிழ்ச்சி ஏற்படாது. ஏனெனில் வீரர்கள் இருவருக்கும் இடையே ஏற்றத்தாழ்வு நிறைய இருக்கிறது. "சவால்" விடுக்கும் இந்த இளைஞனின் இளமையைக் கருதி இவனைப் போரிலிருந்து விலகுமாறு வேண்டினேன்! ஆனால் இவன் மறுத்து விட்டான். பெண்களே! நீங்கள் வேண்டுமானால் இவனிடம் சொல்லிப் பாருங்கள். ஒருகால் இவன் உங்கள் வார்த்தைக்கு இணங்கிப் போரிலிருந்து விலகக் கூடும்.

சீலியா : லெபோ! அந்த இளைஞனை இங்கே அழை!

பிரடரிக் : அங்ஙனமே செய்க. நான் விலகிச் செல்கிறேன். (கொஞ்சம் விலகிச் செல்கிறார்.)

லெபோ : சவால் விடுக்கும் இளைஞரே! உம்மை இளவரசியார் அழைக்கிறார்...

ஆர்லாண்டோ : முழு மரியாதையோடும் கடமை உணர்வோடும் அவர்களை நான் காண வருகிறேன்.

ரோச : இளைஞனே! அரசாங்க மற்போர் வீரர் சார்லசுக்கு எதிராக நீங்கள் சவால் விடுத்திருப்பது உண்மையா?

ஆர்லா : இல்லை இளவரசி! அவர்தான் பொதுவாக சவால் விடுபவர். மற்றவர்களைப்போல நானும் எனது இளமை ஆற்றலைப் பரிசோதிக்க வந்துள்ளேன்.

சீலியா : இளைஞனே! உமது வயதிற்கு மீறிய துணிவு உம்மிடம் இருக்கிறது. இந்த சார்லசின் கொடிய ஆற்றல் உமக்குத் தெரிந்திருக்கும், உமக்கு இணையான போரில் ஈடுபடாமல், இந்தப் போரில் ஈடுபடலாமா? ஆகவே உம் பொருட்டு, உமது நன்மைக்காக உம்மை வேண்டுகிறோம். இந்த முயற்சியை விட்டு விடுக.

ரோச : வாலிபரே! அங்ஙனமே செய்க. அதனால் உமது புகழ் ஒன்றும் குறையாது. போரை நிறுத்தும்படி அரசரிடம் நாங்கள் சொல்லி விடுகிறோம்.

ஆர்லா : உங்களை நான் மன்றாடுகிறேன். உங்கள் கடுமையான எண்ணத்தால் என்னைத் தண்டிக்காதீர்கள். இத்தகைய இனிய இளவரசிகளின் வேண்டுகோளை மறுக்கும் குற்றத்திற்காக நான் வருந்துகிறேன். ஆனால் உங்கள் கடைக்கண் அருளும், இனிய வாழ்த்தும் எனக்குத் துணையாக என் முயற்சிக்கு உடன் வரட்டும். நான் தோற்றால், அதனால் வரும்

அவமானம் என்றுமே அதிர்ஷ்டமற்ற என் ஒருவனையே சாரும். நான் செத்தால் விருப்பத்தோடு செத்தவன் ஆவேன்...என் நண்பர்களுக்கு என் சாவின் மூலம் எந்த இழப்பும் ஏற்படாது; ஏனெனில் எனக்கு அழக்கூடிய எந்த நண்பனுமே இல்லை. என் சாவால் இந்த உலகத்திற்கு எந்த நட்டமும் இல்லை; ஏனெனில் இந்த உலகத்தில் நான் ஒரு பொருட்டில்லை; இந்த உலகத்தில் எனது இடத்தை நான் காலி செய்வேனே ஆனால் அந்த இடம் என்னைவிட ஒரு நல்ல முறையில் நிரப்பப் படுவது உறுதி.

ரோச : எனது சிறிய ஆற்றலும் உம்மோடு துணை வருவதாகுக.

சீலியா : அவன் ஆற்றலுடன் சேர்த்து எனது ஆற்றலும் உமக்குத் துணை நிற்கட்டும்!

ரோச : உமக்கு எனது நல்வாழ்த்துக்கள். உமது ஆற்றலைப் பற்றிய எனது எளிய கணக்கீடு பொய்பாகட்டும்!

சீலியா : உமது விருப்பம் வெற்றிகரமாக நிறைவேறட்டும்.

சார்லஸ் : வருக!...தாய்பூமியின் மீது விழத் துடிக்கும் அந்த வீர இளைஞன் எங்கே?

ஆர்லா : தயார்...வீரரே! நான் தயார். ஆனால் எனக்கு இத்தகைய மாபெரும் துடிப்பு எதுவுமில்லை.

பிரடரிக் : (ஆர்லாண்டோவிடம்) நீ போராடலாம் ஆனால் ஒரே ஒரு வீழ்ச்சிதான் அனுமதிப்பேன்.

சார்லஸ் : இல்லை, அரசே! உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். இரண்டாவது வீழ்ச்சிக்கு இவனை நீங்கள் அனுமதிக்க வேண்டியிராது.

ஆர்லா : என்னை நீ பின்னால் கேலி செய்கிறாய். ஆனால் நீ என்னை முன்னால் கேலி செய்திருக்கக் கூடாது. பரவாயில்லை. போருக்கு வா...(இருவரும் மற்போர் நிகழ்த்துகின்றனர். ஆர்லாண்டோ மிக வீரமாகப் போராடுகிறான்)

ரோச : இளைஞனே! ஹெர்க்குலிசின் வேகம் உனக்கு அமையட்டும்!

சீலியா : நான் மட்டும் கண்ணுக்கு மறையக்கூடிய சக்தி பெற்றால், இந்தத் தடியன் சார்லசின் காலை வாரி விடுவேன்.

(போர் மும்முரமாக நடக்கிறது)

ரோச : அருமை! இளைஞனின் வீரம் அருமை!

சீலியா : எனது கண்ணில் இடி இருந்தால் அதனை நான் சார்லசின்மீது அனுப்பி அவனை வீழ்த்துவேன்.

(போரில் சார்லஸ் வீழ்த்தப்படுகிறான். ஆர்லாண்டோ வெற்றி பெறுகிறான். எங்கும் வெற்றி முழக்கம்)

பிரடரிக் : போதும்! போதும்! போர் போதும்!

ஆர்லா : அரசே! உங்களை நான் வேண்டுகிறேன். எனது ஆற்றல் முழுவதையும் இன்னும் நான் காட்டவில்லை.

பிரடரிக் : சார்லஸ்! எப்படியிருக்கிறது?

லெபோ : அரசே! அவரால் பேச முடியாது!

பிரடரிக் : அவனைத் தூக்கிச் செல்லுங்கள்...(சார்லஸ் தூக்கிச் செல்லப்படுகிறான்)...வீர இளைஞனே! உன் பெயர் என்ன?

ஆர்லா : ஆர்லாண்டோ!...பிரபு—சர்ரோலன் டீ பாய்சின் கடைசி மகன்!

பிரடரிக் : (வெறுப்பாக) நீ வேறு யாருடைய மகனாக வாவது இருந்திருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். உன் தந்தை மிகவும் நேர்மையானவர் என்பது உலகத்தின் கருத்து! ஆனால் அவரை இன்னும் என் எதிரியாகவே கருதுகிறேன். நீ வேறு வீட்டுப் பிள்ளையாக இருந்திருப்பின் என் மகிழ்ச்சியை மேலும் அதிகப்படுத்தியிருப்பாய். பரவாயில்லை...உனக்கு வாழ்த்துக்கள்! நீ ஒரு வீர இளைஞன். நீ வேறு ஒரு தகப்பனாரின் மகனாக இருந்திருக்க வேண்டும்...வருகிறேன். (வெறுப்போடு அரசர் பிரடரிக், தன் பணியாட்கள் லெபோ முதலியோர் புடைசூழ வெளியேறுகிறார்.)

சிலியா : சகோதரி...நான் என் தந்தையாக இருந்திருப்பின் இங்ஙனம் அந்த இளைஞனிடம் நடந்து கொண்டிருப்பேனா?

ஆர்லா : சர்ரோலண்டின் மகன், கடைசி மகன் என்பதிலே நான் பெருமைப்படுகிறேன். பிரடரிக்கின் வாரிசாக நான் தத்து எடுத்துக் கொள்ளப்பட்டாலும்கூட அந்தப் பெயரை நான் மாற்ற மாட்டேன்.

ரோச : என் தந்தையார், சர்ரோலண்டைத் தனது உயிரைப்போல நேசித்தார். அவரது உள்ளத்தில் இந்த உலகமே குடியிருந்தது. இந்த இளைஞன் அவரது மகன் என்பதை நான் முன்கூட்டியே அறிந்திருந்தால் இவன் இந்த ஆபத்தில் இறங்கு முன் என் கண்ணீரைக் காட்டித் தடுத்திருப்பேன்.

சீலியா : சகோதரி! நான் அந்த இளைஞனிடம் சென்று நன்றி கூறி, உற்சாகம் ஊட்டுவோம். என் தந்தையின் கடுமையான பொறாமை நடத்தை என் உள்ளத்தைச் சுடுகிறது. வா...(இருவரும் ஆர்லாண்டோவின் அருகில் சென்று) ஐயா...நிங்கள் அருமையாகப் போராடினீர்கள். போரில் நீங்கள் சொன்னதைச் செய்து காட்டியது போலக் காதலிலும் நீங்கள் செய்வீர்களேயானால் உங்கள் காதலி மிகவும் மகிழ்ச்சி அடைவாள்.

ரோச : அன்பரே! (கழுத்துச் சங்கிலியைக் கழற்றிப் பரிசாகக் கொடுத்து) இதனை என் பொருட்டு அணியுங்கள். இன்னும் மிகுதியாகக் கொடுக்க மனமிருந்தும், வழியில்லாத கரம் வழங்கும் இதனைப் பெறுக!... (சீலியாவிடம்) சகோதரி! நாம் போகலாம்.

சீலியா : ஆம்...இளைஞரே! வணக்கம். (செல்கின்றனர்)

ஆர்லா : நான் நன்றி சொல்ல வேண்டாமா? எனது வாழ்வின் நல்ல பகுதிகள் எல்லாம் வீழ்ந்து விட்டன. ஆனால் இங்கே நிற்பது எனது உயிரற்ற பிண்டம்தான்!

ரோச : அவர் நம்மை மீண்டும் அழைக்கிறார்...எனது பெருமையும் எனது அதிர்ஷ்டத்தோடு வீழ்ந்துவிட்டது. அவர் என்ன சொல்கிறார் என்று கேட்கப் போகிறேன். (ஆர்லாண்டோவை அணுகி)...என்னைஅழைத்தீர்களா? ...அன்பரே! நீங்கள் மிக நன்றாகப் போராடினீர்கள். போரில் உங்கள் எதிரியைவிட மிகுதியாக வீழ்த்தி விட்டீர்கள்.

சீலியா : (திரும்பி வந்து) சகோதரி! போகலாமா?

ரோச : போவோம்...அன்பரே! வணக்கம்! (ரோசலிண்டும் சீலியாவும் செல்கின்றனர்.)

ஆர்லா ; என் நாக்கை எந்த உணர்ச்சி கனமாக்கியது? அவள் பேச முனைந்தும்கூட என்னால் பேச முடிய வில்லை...ஓ! ஆர்லாண்டோ!...நீ வீழ்ந்து விட்டாய்! காதல் உன்னை வெற்றி கொள்கிறது. (லெபோ திரும்பி வருகிறான்)

லெபோ : (ஆர்லாண்டோவிடம்) ஐயா! வணக்கம்! நட்பு உணர்ச்சியால் தங்கட்கு ஆலோசனை சொல்கிறேன். தாங்கள் உடனே இவ்விடத்தைவிட்டு வெளியேறுக. தாங்கள் பாராட்டுக்கும் அன்புக்கும் பாத்திரராக இருந்த போதிலும், அரசர் தங்கள் நடவடிக்கைகளைத்

தவறாகக் கருதுகிறார். அரசர் மனம் மாறும் இயல்பு உடையவர். அவர் நிலையைப் பற்றி நான் வர்ணிப்பதை விடத் தாங்கள் சிந்தித்து அறிவதே சிறப்பாகும்.

ஆர்லா : மிக்க நன்றி! ஐயா உங்களை ஒன்று வேண்டுகிறேன். மற்போரின் போது இங்கு இருந்த பெண்கள் இருவரில் அரசரின் மகள் யார் என்பதை அறிய விரும்புகிறேன்.

லெபோ : அவர்கள் பண்புகளிலிருந்து ஆராய்ந்தால் யாருமே அரசருக்கு மகள் இல்லை. ஆனால் உண்மையில் சிறிய பெண்தான் அரசரின் மகள் சீலியா. உயரமாக இருக்கும் மற்றொருத்தி நாடு கடத்தப்பட்ட மன்னரின் மகளான ரோசலிண்ட். மூத்தவரிடமிருந்து நாட்டை அபகரித்த மன்னர் தன் மகளுக்குத் துணையாக மூத்தவரின் மகளை இங்கு இருக்கப் பணித்து விட்டார். அந்தப் பெண்கள் இருவரின் அன்புப் பிணைப்பு இயற்கைச் சகோதரிகளின் அன்பைவிட எல்லையற்றதாகும். ஆனால் உங்கட்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சமீபகாலமாக அரசர் ரோசலிண்டிடம் வெறுப்பைக் கக்குகிறார். அதற்கு உண்மைக் காரணம் ஒன்றுமில்லை. நாட்டு மக்கள் அவளது பண்பறிந்து அவளிடம் பரிவு கொள்வதும், அவளது தந்தைக்காக வருந்துவதும் அவருக்கு ஆத்திரம் ஊட்டுகின்றன. என் உயிருக்கும் அஞ்சாமல் சொல்கிறேன். அவள்மீது அரசருக்குள்ள ஆத்திரம் ஒருநாள் வெடிக்கும் ஐயா! வருகிறேன்...எதிர் காலத்தில் இதைவிட நல்ல இடத்தில் நாம் சந்தித்து அன்பும் நட்பும் கொள்வோம். வணக்கம்.

ஆர்லா : உங்கள் அன்புக்கும் நான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். வணக்கம் (லெபோ சொல்கிறான்) இனி நான் புகையிலிருந்து நெருப்புக்குச் செல்ல வேண் டும். கொடிய மன்னனிடமிருந்து மிகக் கொடிய சகோதரனிடம் செல்ல வேண்டும். ஆனால் இருள் நடுவே ஓர் ஒளி ...தெய்வீக ரோசலிண்ட்! (செல்கிறான்)

காட்சி—3

இடம் : அரண்மனையில் ஓர் அறை

(சீலியாவும் ரோசலிண்டும் வருகின்றனர்.)

சீலியா : சகோதரி! ரோசலிண்ட்! மன்மதன் கருணை பொழியட்டும்! ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?

ரோசலிண்ட் : வீண்மொழி பேச எனக்கு விருப்பமில்லை. நான் ஊமையாகி விட்டேன்.

சீலியா : இல்லை. உன்வார்த்தைகள் விலைமதிப்பற்றவை. உனது சில வார்த்தைகளை என்னை நோக்கி வீசு. வா... உன் அமைதிக்குக் காரணம் காட்டி என்னை முடமாக்கு.

ரோச : அப்படியானால் இரண்டு சகோதரிகள் ஊனமாகி விடுவார்கள். ஒருத்தி காரணத்தோடு முடமாகவும்

மற்றவள் காரணமின்றிப் பைத்தியமாகவும் திகழ்வார்கள்.

சீலியா : நீ வருத்தமாக இருப்பது எல்லாம் உன் தந்தையின் பொருட்டா?

ரோசா : இல்லை. என் பொருட்டு! கடவுளே! இந்த உலகம் எவ்வளவு கொடுமையாக இருக்கிறது. எங்கும் முட்புதர் நிறைந்திருக்கிறது.

சீலியா : சகோதரி! அவை முட்புதர் அல்ல. சாதாரண நெருஞ்சி முள்தான். நாம் தடம்மாறி நடந்தால் அவை உடையில் ஒட்டிக் கொள்வது இயல்பு தானே.

ரோச ; அவை என் உடையில் ஒட்டிக் கொண்டால் உதறி விடுவேன். ஆனால் என் உள்ளத்தில் அல்லவா ஒட்டி இருக்கின்றன.

சீலியா : அப்படியானால் உள்ளத்தை விட்டு உதறு.

ரோச : முயற்சி செய்வேன். ஆனால் அவனை உதற என்னால் முடியவில்லை.

சீலியா : வா வா...உன் அன்பை எதிர்த்துப் போராடு முடியும்.

ரோச : இல்லை...அது என்னைவிடச் சிறந்த மற்போர் வீரனாகத் திகழ்கிறது.

சீலியா : ஓ! உனக்கு என் நல்வாழ்த்துக்கள்! நீ ஒரு முறை முயல்க! கேலி செய்வதை விட்டு இன்

பொழுது உண்மையைப் பேசுவோம். சர்ரோலண்டின் இளைய மகன் ஆர்லாண்டோ மீது இப்படி நீ திடீரென்று காதல் கொள்வது நடக்கக் கூடியதுதானா?

ரோச: என் தந்தையார் அவரது தந்தையாரை மிகவும் நேசித்தார்.

சீலியா: அப்படியானால் நீ அவர் மகனை நேசிக்க வேண்டுமா? இந்த விதிப்படி பார்த்தால் நான் அவனை வெறுக்க வேண்டும். ஏனெனில் என் தந்தை அவன் தந்தையை வெறுக்கிறார் அல்லவா! ஆனாலும் நான் ஆர்லாண்டோவை வெறுக்கவில்லையே.

ரோச: வேண்டாம். சகோதரி! எனக்காக அவரை நீ வெறுக்காதே.

சீலியா: நான் ஏன் வெறுக்கக் கூடாது? அதற்குரிய தகுதி அவனுக்கு இல்லையா?

ரோச: அந்தத் தகுதிகளுக்காக நான் அவரைக் காதலிக்கிறேன். எனக்காக நீ அவரை நேசி...அதோ பார்...... அரசர் வருகிறார்.

சீலியா: அவர் கண்கள் சினத்தால் சிவந்திருக்கின்றன.

(பிரடரிக் அரசர் தன் பிரபுக்களுடன் வருகிறார்)

பிரடரிக்: ரோசலிண்ட்! நம் அரண்மனையை விட்டு வெகு விரைவில் வெளியேறு!

ரோச: நானா? சிற்றப்பா!

பிரடரிக்: நீதான்...பத்து நாட்களுக்குப் பின் நமது அரண்மனையைச் சுற்றி இருபது மைல் வட்டத்திற்குள் நீ தென்பட்டால் அதற்காக மரண தண்டனை அடைய நேரும்.

ரோச: உங்கள் கருணையை வேண்டுகிறேன். நான் செய்த குற்றத்தை அறிய விரும்புகிறேன். எனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் நான் அறிந்தால், நான் பைத்தியமாக இல்லாதிருந்தால், நான் சொல்வது உண்மை...தங்கட்கு நான் எந்த வகையிலும் சிறு துரோகமும் செய்யவில்லை.

பிரடரிக்: அப்படித்தான் எல்லாத் துரோகிகளும் சொல்கிறார்கள். அவர்கள் தங்கள் துரோகத்தை வார்த்தைகளால் தூய்மைப்படுத்தலாம் என்றால் அவர்கள் சத்திய சீலர்கள்தான். நான் உன்னை நம்பவில்லை என்பதே நீ துரோகி என்பதற்குப் போதுமான காரணமாகும்!

ரோச: உங்கள் அவநம்பிக்கை மட்டும் என்னைத் துரோகியாக்கிவிட முடியாது. எந்த வகையில் நான் துரோகி என்பதைச் சொல்லுங்கள்.

பிரடரிக்: நீ உன் தந்தையின் மகள் என்பதே போதும் நீ ஒரு துரோகி என்பதற்கு.

ரோச: அவரது நாட்டைத் தாங்கள் அபகரித்த பொழுதும் நான் அவரது மகள்தானே! அப்பொழுது என்னை ஏன் ஏற்றுக் கொண்டீர்கள்? அவரைத் தாங்கள் நாடு கடத்தியபொழுதும் நான் அவரது மகள் தானே! அப்பொழுது என்னை ஏன் ஆதரித்தீர்கள்? சிற்றப்பா! துரோகம் என்பது வாரிசுரிமை அன்று! அப்படியே அது நடப்புரிமையாக வரும் என்றாலும் அது என்னைப் பாதிக்காது! ஏனெனில் என் தந்தையார் துரோகி அல்லவே. ஆகவே அரசே! என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். எனது ஏழ்மையைத் துரோகம் என்று எடைபோடாதீர்கள்.

சீலியா: அரசே! நான் சொல்வதைக் கேளுங்கள்.

பிரடரிக்: சிலியா! அவளை உன் பொருட்டே இங்கு தங்க அனுமதித்தேன். இல்லாவிட்டால் அவள் தன் தந்தை யுடன் இந்நேரம் அலைந்து கொண்டிருப்பாள்.

சிலியா: அவள் இங்கே தங்க வேண்டுமென்று அப்பொழுது நான் கேட்கவில்லையே. அவளைத் தாங்கள் தங்க வைத்ததற்குக் காரணம் தங்கள் அன்பும் இளகிய உள்ளமுமே ஆகும். அவளைப் பற்றி மதிப்பிட இயலாத சிறுமியாக அப்பொழுது நான் இருந்தேன். ஆனால் இப்பொழுது நான் அவளை அறிகிறேன். அவள் ஒரு துரோகிதான்! நாங்கள் இருவரும் ஒன்றாக உறங்கி, ஒரே சமயத்தில் விழித்து, படித்து, விளையாடி, உண்டு, உறைந்திருக்கிறோம். நாங்கள் எங்கே சென்றாலும் ஜூனோ தெய்வத்தின் இரட்டை அன்னங்களைப்போல இணைந்தும், பிரிக்க முடியாமலும் சென்றிருக்கிறோம்.

பிரடரிக்: அவள் மிகவும் சூழ்ச்சிக்காரி! அவளது அமைதி யும், பொறுமையும், மென்மையும் மக்களிடம் பேசுகின் றன. அதனால் மக்கள் அவள் மீது பரிவு கொள்கின் றனர். நீ ஒரு முட்டாள்! அவள் போய்விட்டால் உன் ஒளியும், பண்பும் சுடர் வீசும்! வாயைத் திறவாதே. நான் அவளுக்கு இட்டுள்ள கட்டளை உறுதியானதும் இறுதியானதும் ஆகும். அவள் நாடு கடத்தப்பட்டுள் ளாள்!

சிலியா: அப்படியானால் அதே ஆணையை எனக்கும் இடுங் கள் அரசே! அவளைப் பிரிந்து என்னால் வாழ முடியாது.

பிரடரிக்: நீ ஒரு முட்டாள்...ரோசலின்ட்! உன்னைத் தயார் செய்து கொள். குறிப்பிட்ட பத்து நாட்களுக்குப் பிறகு நீ இங்கிருப்பாயேயானால் என் ஆணைக்குரிய அதிகாரத்தின்படி நீ சாக நேரிடும். (பிரடரிக் தன் பிரபுக்களோடு வெளியேறுகிறார்.)

சீலியா : ஓ ரோசலிண்ட்! நீ எங்கே போவாய்?...நாம் ஒன்று செய்வோமா!...நாம் நம் தந்தையாரை மாற்றிக் கொள்வோமா? நான் என் தந்தையை உனக்குத் தரு கிறேன்...உன்னை வேண்டுகிறேன். என்னைவிட நீ மிகுதியாக வருந்தாதே.

ரோச : நான் வருந்த எனக்கு மிகுந்த காரணங்கள் இருக்கின்றன.

சீலியா : இல்லை, சகோதரி! உனக்கு மிகுந்த காரணங்கள் இல்லை. உன்னை மன்றாடுகிறேன். மகிழ்ச்சியாக இரு. அரசர் தன் மகளாகிய என்னை நாடு கடத்தியிருக்கிறார் என்று உனக்குத் தெரியவில்லையா?

ரோச: இல்லை. அவர் உன்னை நாடு கடத்தவில்லை.

சீலியா : இல்லையா? அப்படியானால் உன் அன்பு குறை வானதே ஆகும். நீயும் நானும் ஒன்று அல்லவா? நாம் பிரிக்கப்படுவதா? இனிய சகோதரி! நாம் பிரிவதா? இல்லை. எனது தகப்பனார் வேறொரு வாரிசைக் கண்டு பிடிக்கட்டும். ஆகவே நாம் எப்படித் தப்பி ஓடுவது? எங்கே ஓடுவது? என்னென்ன எடுத்துச் செல்வது என்பதை எல்லாம் பற்றித் திட்டமிடுவோம். துக்கத்தை எல்லாம் நீயே தாங்கிக்கொண்டு, என்னைத் தனியே விட்டு விட்டு நீ மட்டும் போய் விடாதே. இது சத்தியம். நீ என்ன சொன்னாலும் நானும் உன்னுடன் வருவேன்.

ரோச: ஏன் வருகிறாய்? நாம் எங்கே செல்வது?

சீலியா: ஆர்டன் காட்டுக்குச் சென்று என் பெரியப்பா வைச் சந்திப்போம்.

ரோச: ஐயோ! அவ்வளவு தூரம் பெண்களாகிய நாம் செல்வது எவ்வளவு ஆபத்தானது தெரியுமா?

சீலியா: நான் ஒரு சாதாரண ஏழைப்பெண்ணின் ஆடையை அணிந்து கொள்கிறேன். நீயும் அங்ஙனமே அணிந்துகொள். நம்மை யாரும் தாக்க மாட்டார்கள். நாம் எளிதாகத் தப்பிச் செல்லலாம்.

ரோச: நான் சற்று உயரமாக இருப்பதால் ஆண் வேடம் தரித்துக் கொள்வது நல்லதில்லையா? இடையில் வாளும், கையில் ஈட்டியுமாக நான் வருவேன். ஆனால் இதயத்தில் பெண்களுக்குரிய அச்சம் திகழும். உலகத்தில் கோழைகள் பலர் தங்கள் பயத்தைக் காட்டாமல் வெளித்தோற்றத்தால் மறைந்து திரிவதைப்போல நாமும் வெளித்தோற்றத்தில் வீரர்களைப் போலத் திகழ்வோம்.

சீலியா: நீ ஆணாக இருந்தால் நான் உன்னை எவ்வாறு அழைப்பது?

ரோச: என்னை கனிமீடு என்று அழை. நான் உன்னை எவ்வாறு அழைப்பது?

ரோச: என்னை ஏலியானா என்று அழை.

ரோச: சகோதரி! உன் தந்தையின் அரசவைக் கோமாளி டச்ஸ்டோனையும் நம்முடன் இரகசியமாக அழைத்துச் சென்றால் என்ன? அவன் நம் பயணத்தின்போது நமக்குத் துணையாக இருப்பான் அல்லவா?

சீலியா: அவனும் நம்முடன் வருவான். அவனைத் தயார் செய்யும் வேலையை என்னிடம் விட்டுவிடு. நாம் போய் நமது ஆபரணங்களையும் செல்வத்தையும் மூட்டை கட்டி வைப்போம. இங்கிருந்து சரியான சமயத்தில் சரியான முறையில் தப்பிச் செல்லக் காத்திருப்போம். நம்மைக் கைப்பற்ற முடியாத

அளவுக்குக் காரியம் செய்வோம். நாம் இப்பொழுது நாடு கடந்து போகவில்லை. உரிமை நிறைந்த இடத்திற்குச் செல்கிறோம். (செல்கின்றனர்.)

களம் 2 காட்சி 1

இடம்: ஆர்டன் காடு

[பேரரசர், ஏமியன்ஸ் பிரபு மற்ற பிரபுக்கள் ஆகியோர் வேட்டுவர் உடையில் தோன்றுகின்றனர்]

பேரரசர்: வனத்தில் என்னோடு வாழ்ந்து வந்திருக்கும் நண்பர்களே! சகோதரர்களே! சலித்துப் போன அரச போக வாழ்வைவிட இந்தக் கானக வாழ்வு களிப்பை பத்தரவில்லையா! பொறுமை மிக்க அரண்மனையைவிட இந்தக் காடு துயரம் குறைந்ததாக இல்லையா? இங்கே நாம் காலமாறுதலை மட்டுமே காணுகிறோம். இந்தக் கால மாறுபாடும் கடவுளுக்குக் கீழ்ப்படிய மறுத்த முதல் மனிதன் ஆடாமவ் வந்த வினை! கொட்டும் தேள் போன்ற குளிர்காற்று என்மீது வீசுகின்ற பொழுது, நான் புன்னகை பூத்து மொழிவது என்ன தெரியுமா? "இது உண்மை! வெறும் புகழ்ச்சியில்லை. எனது பலகீனமான உண்மை நிலையை உணர்த்துகின்ற ஆலோசகர்கள்தான் இவை" என்கின்றேன். கேட்டினும் உண்டு ஓர் உறுதி (நன்மை), நாகம் நச்சு உடையதாக இருப்பினும் அதனிடம் இரத்தினம் இருக்கிறது அல்லவா? அது போலத்தான் துரதிர்ஷ்டத்திலும் ஒரு நன்மை உண்டு. நமது இந்த வாழ்வு மனித நடமாட்டமில்லாத இடத்தில், மரத்தில் தாக்கையும்,

ஓடையில் புத்தகங்களையும், கல்லில் பொன் மொழி களையும், பிறவற்றில் நன்மைகளையும் காண்கிறது. நான் இத்தக் கானல் வாழ்வை மாற்ற மாட்டேன்.

ஏமியன்ஸ் : துரதிர்ஷ்டத்தின் கொடுமைகளை மிக நயமாக வும் இனிமையாகவும் மொழிகின்றீர்கள் அரசே!

பேரரசர் : வாருங்கள். நாம் போய் மான்வேட்டையாடு வோம். பாவம்! இந்த முட்டாள் மான்களை அவற்றின் தாயகமான இந்தக் காட்டிலேயே அம்புகளால் காயப் படுத்துவது என் மனத்தை உறுத்துகிறது.

முதல் பிரபு : ஆம் பிரபு! தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. துயர்மிக்க ஜேக்குவஸ் அதுபற்றித் துன்புறு கிறார். அந்த வகையில் தங்கள் சகோதரர் தங்களுக்குச் செய்த துரோகத்தைவிடத் தாங்கள் மான்களுக்குச் செய்யும் துரோகம் மிகுதி என்று அவர் குற்றம் சாட்டு கிறார். இன்று நானும் ஏமியன்ஸ் பிரபுவும் அவருக்குப் பின்னால் மறைந்து பின் தொடர்ந்தோம். அவர் ஒரு மரத்தின் கீழே நீரோடையின் பக்கம் அமர்ந்தார். அப்பொழுது வேடனால் காயப்படுத்தப்பட்ட ஒரு மான் தன் கூட்டத்தை விட்டுப் பிரிந்து, குருதி சொட்டியவாறு அம்மரத்தடிக்கு வருத்தத்தோடு வந்தது. அரசே! அதன் புலம்பல் ஜேக்குவசின் கண்களில் நீரை வார்த்தது. மானின் கண்ணீர் கலந்ததால் ஓடையில் நீர்ப்பெருக்கு அதிகரித்தது.

பேரரசர் : ஆனால் ஜேக்குவஸ் என்ன சொன்னார்? அவர் அக்காட்சியைப் பொன்மொழியாக வர்ணிக்க வில்லையா?

முதல் பிரபு : வர்ணித்தார்... ஆயிரம் உவமைகளால் அருமையாக வர்ணித்தார். முதலாவதாக அவர்

சொன்னார்... ஏழை மாணவனே! உனது கண்ணீரைப் பஞ்சமற்ற ஆற்றுக்கு வழங்குகிறாய். இக்காட்சி செல்வர்க்குக் கொடையளிக்கும் உலகியலுக்கு ஓர் உதாரணமாகும். உனது நண்பர்களைவிட்டு நீ பிரிந் திருக்கிறாய். அது சரிதான். வறுமையானது நண்பர் களைப் பிரிக்கிறது என்ற வாய்மொழிக்கு அது நல்ல சான்றாகும். இவ்வாறு வர்ணித்த ஜேக்குவஸ் சற்று தொலைவில் நன்றாக மேய்ந்து திரிந்த மான் கூட்டத் தைக் கண்டதும் மேலும் வர்ணிக்கலானார்... 'ஏ! தின்று கொழுத்த மான்களே... ஓடுங்கள். அதுதான் காலத்தின் கோலம்! நிலை கெட்டுப்போன இந்த மானை நீங்கள் ஏன் நின்று பார்க்கிறீர்கள்'' என்றெல் லாம் அவர் கருத்துமழை பொழிந்தார். இங்ஙனமாக அவர் நமது நாடு, நகர், அரசவை வாழ்வு அனைத்தை யும் இணைத்து அரிய உரைகளை ஆற்றினார். நாம் வெறும் கள்ளர்கள், கொடியர்கள், மிருகங்களை அவற்றின் தாயகத்தில் கொல்லும் கயவர்கள் என் றெல்லாம் நம்மைக் கோபத்தோடு வர்ணித்தார்.

பேரரசர் : அவரை இந்தக் கற்பனை நிலையில் தனியே விட்டு விட்டீர்களா?

இரண்டாம் பிரபு : ஆம் அரசே! துன்புற்ற மானைக் கண்டு துடித்தழவும், வர்ணிக்கவும் அவரை விட்டு விட்டு வந்தோம்.

பேரரசர் : அந்த இடத்தைக் காட்டுங்கள். இந்நிலையில் அவரை நான் சந்திக்க விரும்புகிறேன். இத்தகு சந்தர்ப்பத்தில் அவர் கருத்துக் குவியலாகத் திகழ்வார்.

முதல் பிரபு : நான் தங்களை அவரிடம் நேரே அழைத்துச் செல்கிறேன். வருக! (அனைவரும் செல்கின்றனர்)

காட்சி—2

இடம் : அரண்மனையில் ஓர் அறை

[பிரடரிக் அரசர், பிரபுக்கள், ஏவலர்கள், ஆகியோர் தோன்றுகின்றனர். சீலியாவும், ரோசலிண்டும் அரண்மனையை விட்டு ஓடிவிட்ட செய்தி கேட்டு பிரடரிக் சினத்தோடு பேசுகிறார்.]

பிரடரிக் : அவர்களை ஒருவரும் பார்க்கவில்லை என்பது உண்மையாக இருக்க முடியுமா? அது ஒருகாலும் இருக்க முடியாது. நம் அரண்மனையைச் சேர்ந்த யாரோ சில கயவர்களுக்கு இதில் தொடர்பு இருக்கிறது.

முதல் பிரபு : இளவரசியைப் பார்த்ததாக யாரும் சொல்ல வில்லை. அவள் படுக்கச் செல்லும் பொழுது அவளது தோழியர்கள் அவளைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் காலையில் அவளது படுக்கை வெறுமனே இருக்கக் கண் டிருக்கிறார்கள்.

இரண்டாம் பிரபு : அரசே! தாங்கள் அடிக்கடி ரசிக்கும் அரசவை விதூடகனாகிய (முட்டாளாகிய) டக்ஸ் டோனையும் காணவில்லை. தங்கள் மகள் சீலியாவும் ரோசலிண்டும், சார்லசைத் தோற்கடித்த ஆர்லான் டோவைப் பற்றிப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்த ததை ஹெஸ்பீரியா என்னும் தாதி இரகசியமாகக் கேட்டுக் கொண்டிருந்ததாகச் சொல்கிறாள். அவர்கள்

எங்கே சென்றிருந்தாலும் அந்த இளைஞனும் அவர்களுடன் இருக்கவேண்டும் என்று அவன் நம்புகிறான்.

பிரடரிக் : அவனுடைய அண்ணனுக்கு ஆளனுப்புங்கள். அந்த இளைஞனை இங்கே இழுத்து வாருங்கள். அவனைக் காணாவிட்டால் அவனது அண்ணனை இழுத்து வாருங்கள். அவனைக் கொண்டே அந்தக் கயவனைக் கண்டுபிடிக்கச் செய்கிறேன். உடனே இதைச் செய்யுங்கள். ஓடிப்போனவர்களை அழைத்து வரச் சென்றவர்கள், கொஞ்சமும் தயங்க வேண்டாம். தேவையானால் பலாத்கரத்தைப் பயன்படுத்துங்கள்—போங்கள்.

(செல்கிறான்)

காட்சி—3

இடம் : ஆலிவர் வீட்டின் முன்னால்.

[மற்போரில் வெற்றிபெற்ற ஆர்லாண்டோ இரவில் வீட்டுக்குத் திரும்புகிறான். வீட்டின் முன்னால் கிழட்டு வேலைக்காரனான ஆடம் அவனைச் சந்திக்கிறான்.]

ஆர்லாண்டோ : யாரங்கே?

ஆடம் : நான்தான்...சின்னமுதலாளி! அன்யானமுதலாளி! சர்ரோலண்டின் நினைவுச் சின்னமான இனிய முதலாளி இங்கே ஏன் வந்தீர்கள்? எதற்காகப் பண்போடு நடந்து கொள்கிறீர்கள்? மக்கள் ஏன் உங்களை நேசிக்கிறார்கள்? எதற்காக நீங்கள் பெருந்தன்மையாகவும் வீரமாகவும் நடந்து கொள்கிறீர்கள்? அரசரின் மற்போர் வீரனை எதற்காக வென்றீர்கள்? நீங்கள் இங்கு வருமுன்பே உங்கள் புகழோசை விரைந்து வந்து விட்டதே. மனிதர்கள் சிலருக்கு அவர்களது நற்குணங்

களே நச்சுப்பகைவர்களாகத் திகழ்கின்றன என்பது தங்கட்குத் தெரியாதா? உங்கள் உயர் பண்புகள் உங்களுக்குப் பகைமையே செய்கின்றன. உங்கள் பண்புகள் பார்வைக்குப் புனிதமாகத் தோன்றினாலும் உண்மையில் பகைமையே விளைகின்றன. இது என்ன உலகம்! நன்மையே நஞ்சாகும் கலிகாலம்!

ஆர்லான்டோ : என்ன செய்தி? ஏதேதோ பேசுகிறாய்?

ஆடம் : அதிர்ஷ்டமற்ற இளைஞனே! வீட்டிற்குள் வரா தீர்கள். இந்த இல்லத்திற்குள் உங்கள் இனிய பண்பு களின் எதிரி இருக்கிறான். உங்கள் அண்ணன்.. இல்லை... தந்தையின் மகன்... இல்லை...அவரை உங்கள் தந்தை யோடு இணைப்பதே பாவம்... அவர் உங்கள் வெற்றிப் புகழைக் கேட்டு வெறி கொண்டுள்ளார். இன்றிரவு அவர் உங்கள் வீட்டோடு உங்களைத் தீயில் கொளுத்தத் திட்டமிட்டுள்ளார். அதில் அவர் தோற்றால், வேறு வகையில் உங்களை வீழ்த்த முயல்வார். அவரது திட்டங் களைப்பற்றி ஒட்டுக் கேட்டுத் தெரிந்து கொண்டேன். இது வீடன்று; கசாப்புக்கடை! இதில் நுழைய அஞ்சுங்கள். இதை விலக்குங்கள். இதற்குள் காலடி வைக்காதீர்கள்.

ஆர்லா : ஆடம்! அப்படியானால் என்னை எங்கே செல்லச் சொல்கிறாய்?

ஆடம் : எங்கே சென்றாலும் சரி, ஆனால் இங்கே நுழையாதீர்கள்.

ஆர்லா : என்ன? அப்படியானால் என்னை எங்காவது சென்று சோற்றுக்குப் பிச்சை எடுக்கச் சொல்கிறாயா?

அல்லது பாதையில் வாளேந்தி நின்று வழிப்பறி செய்யச் சொல்கிறாயா? அதைத்தான் நான் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் என்ன செய்வது என்றே எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நான் அதைச் செய்யப் போவதில்லை. அதற்குப்பதிலாக வெறிபிடித்த என் அண்ணனுக்கு நான் இரையாக வீழ்வேன்.

ஆடம் : அங்ஙனம் செய்யாதீர்கள். என்னிடம் 125 பவுன் இருக்கின்றது. இத்தனை ஆண்டுகளாக உங்கள் தந்தை யாரிடம் பணியாற்றிச் சேமித்த சொத்து அது! என் கடைசிக் காலத்துக்காக நான் திரட்டி வைத்திருந்த சேமிப்பு அது! அதைத் தருகிறேன். எடுத்துக்கொள் ளுங்கள். சிட்டுக்குருவிகளுக்கும் காகத்துக்கும் இரை கொடுப்பவன் இறைவன். என் வயதைப்பற்றிக் கவலைப்படாதீர்கள். இதோ அந்தப் பவுன்கள் இருக்கின்றன. அனைத்தையும் தங்களுக்குத்தருகிறேன்; நான் உங்கள் பணியாளாக இருக்கிறேன். நான் தோற்றத்தில் கிழவனாக இருப்பினும் ஆற்றலில் இளைஞனே! வாலிபத்தில் நான் மது அருந்தியதில்லை. கேளிக்கைகளில் ஈடுபட்டதில்லை. ஆகவே எனது முதிர்ந்த வயது கார்காலம் போன்றது. பனி படிந்திருந் தாலும் அன்பு நிறைந்தது. நானும் உங்களுடன் வருகிறேன். உங்களுடன் நானும் சேர்ந்து ஒரு வாலிப னைப்போல் வேலை செய்கிறேன்.

ஆர்லா : கருணை நிறைந்த ஆடம்! பழைய உலகத்தின் நிரந்தர ஊழியத்தின் பெருமைப் பண்பு உன்னிடம் ஒளி விடுகிறது. அக்காலத்தின் ஊழியத்தை ஊழியத் துக்காக அன்றிச் சேவைக்காகச் செய்த தன்மை பிரதி பலிக்கிறது. நீ இக்கால மனிதனே இல்லை. இக்காலத் தில் ஊழிய உயர்வு கருதாமல் யாரும் ஊழியம் செய்யவோ, வேர்வை சிந்தவோ மாட்டார்கள். உயர்வு கிடைத்ததும் வேலை செய்வதை நிறுத்தி

விடுவார்கள். ஆனால் நீ அப்படிலல்ல. ஏ ஏழை மனிதனே! நீ பட்ட மரத்துக்கு நீரூற்றுகிறாய். கிளை களைக் கத்தரிக்கிறாய். உன் உழைப்புக்குத் தக்க பலன் களைத் தரமுடியாத மரம் அது! பரவாயில்லை. உன் விருப்பப்படி வா...நாம் இருவரும் ஒன்றாகவே செல் வோம். நீ இளமையில் சேமித்த பணம் தீருமுன் நாம் திருப்தியாக வாழ ஒரு வழி கண்டு பிடிப்போம்.

ஆடம் : முதலாளி; புறப்படுங்கள். நான் உங்களை இறுதி வரை உண்மையாகவும் நேர்மையாகவும் பின்பற்று வேன். எனது பதினேழாவது வயது முதல் எண்பது வயதான இன்றுவரை இந்த வீட்டில் நான் வசித்தேன். ஆனால் இனி நான் இங்கு வசிக்கப் போவதில்லை. பதினேழாவது வயதில் பலர் தங்கள் அதிர்ஷ்டத்தைத் தேடிக் கொள்கிறார்கள். ஆனால் எண்பதாவது வயதில் தேடுவது மிகவும் காலம் கடந்ததாகும். இருந்தாலும் எனது முதலாளிக்குச் சேவை செய்யாமல் கடனாளியாக நான் சாகவிரும்பவில்லை. முதலாளியின் சேவையில் நான் செத்தால் அதுவே நல்ல சாவு! அத்தகைய சாவை ஈடுகட்ட எந்த அதிர்ஷ்டத்தாலும் முடியாது. (இரு வரும் வீட்டை விட்டு இரவில் வெளியேறி ஆர்டன் காட்டை நோக்கிச் செல்கின்றனர்.)

காட்சி—4

இடம் : ஆர்டன் காடு

[ஆடவன் உடையில் ரோசலிண்டும், ஆட்டுக்காரி உடையில் சிலியாவும், சாதாரண உடையில் டச்ஸ் டோனும் வருகின்றனர்.]

ரோசலிண்ட் : கடவுளே! நான் மிகவும் களைத்துப் போய் இருக்கிறேன்.

டச்ஸ்டோன் ; என் கால்கள் மட்டும் களைத்திராவிட்டால் நான் களைக்க மாட்டேன்.

ரோச : ஆணுடையில் இருக்கும் நான் அழுது புலம்பி அந்த உடைக்கு இழுக்கு ஏற்படக் கூடாது. பலகீன மானவர்களைத்தான் நான் சமாதானப் படுத்த வேண்டும். வேட்டியானது சேலையைவிடத் துணிவு காட்ட வேண்டும். ஆகவே...ஏலியானா! தைரியமாக இரு...

சீலியா : உன்னை மன்றாடுகிறேன். பொறுத்துக் கொள். என்னால் இனி ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது.

டச்ஸ்டோன் : (சீலியாவிடம்) என்னைப் பொறுத்தவரை நான் உன்னைப் பொறுத்துக் கொள்ள முடியுமே தவிர, உன்னைத் தூக்கிச்செல்ல முடியாது. அப்படியே தூக்கிச் சென்றாலும் உன்னிடம் ஒரு காசும் இல்லையாதலால் நான் சிலுவையைத் தூக்கிச் செல்லும் வாய்ப்பும் இல்லாதவன் ஆவேன். (அக்காலக் காசுகளில் சிலுவை அடையாளம் உண்டு.)

ரோச : இதோ நாம் ஆர்டன் காட்டுக்கு வந்து விட்டோம்.

டச் : அப்படியா? நான் இப்பொழுது ஆர்டன் காட்டிலா இருக்கிறேன்? நான் ஒரு பெரிய முட்டாள்! நான் வீட்டில் இருந்த பொழுது நல்ல இடத்தில் இருந்தேன்.

ஆனால்...பரவாயில்லை!...பிரயாணிகள் கண்டதைக் கொண்டு திருப்தி அடைய வேண்டியதுதான்!

ரோச: அப்படியே செய்! டச்ஸ்டோன்! அதோ பார்... யார் வருகிறது என்று...ஓர் இளைஞனும் ஒரு கிழவனும் தனியே பேசிக் கொண்டு வருகிறார்கள்...

(ஆட்டு இடையர்களாகிய கோரின், சில்வியஸ் ஆகிய இருவரும் வருகின்றனர். கோரின் ஒரு கிழவன், சில்வியஸ் ஓர் இளைஞன். அவன் பீபி என்ற இடைக் குல மங்கையைக் காதலிக்கிறான். கோரின், சில்வியஸ் ஆகிய இருவரின் உரையாடல் அக்காதல் பற்றியதே.)

கோரின்: அவள் உன்னை இன்னும் திட்டச்செய்ய அது தான் நல்ல வழி.

சில்வியஸ்: ஓ! கோரின்! நான் அவளை எவ்வளவு தூரம் நேசிக்கிறேன் என்று உனக்குத் தெரியுமா?

கோரின்: ஓரளவு நான் ஊகிக்கிறேன். ஏனெனில் இதற்கு முன்னால் நான் காதலித்திருக்கிறேன்.

சில்வியஸ்: இல்லை கோரின்! நீ கிழவன் ஆகிவிட்டதால் காதலைப்பற்றி உன்னால் ஊகிக்க முடியாது. உன் இளமைக் காலத்தில் நீ காதல் செய்திருந்தாலும், இரவு முழுவதும் பெருமூச்சு விட்டிருந்தாலும், உன்னுடைய காதல் என்னுடையதைப் போலவே இருந்திருந்தாலும்—ஒரு காலும் அப்படி இருக்க

முடியாது. தவறி, இருந்திருந்தாலும் அதனால் எல்லாம் நீ காதலைப் பற்றி உணர முடியாது. நீ உன் காதலை வெளிப்படுத்தும் வேடிக்கையான காரியங்கள் எதிலாவது நீ ஈடுபட்டதுண்டா?

கோரின் : ஆயிரம் காரியங்களில் ஈடுபட்டிருப்பேன். ஆனால் அவையெல்லாம் மறந்து போய்விட்டன.

சில்வியஸ் : அப்படியானால் நீ மனமாரக் காதலித்திருக்க முடியாது. அத்தகைய சில்லறைக் காரியங்களில் ஒன்றைக் கூட நீ நினைவுகூர முடியாவிட்டால் காதலித்திருக்கவே முடியாது. நான் இப்பொழுது இருப்பதைப் போல் நீ வீற்றிருந்து, கேட்பவர்கள் காது புளிக்கக் காதலியைப் புகழ்ந்திராவிட்டால், நீ காதலித்திருக்கவே முடியாது. நீ பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென்று பேச்சை முறித்துவிட்டு, என்னைப் போல ஓடியிராவிட்டால் நீ காதலிருக்கவே முடியாது. ஓ! பீபி!! பீபி! பீபி! (ஓடுகிறான்).

ரோச : ஐயோ! பாவம்! ஏழை இடையன்! உன் துயரத்தில் என் துயரத்தைக் காண்கிறேன்.

டச் : நானும் என் துயரத்தைக் காண்கிறேன். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது...நான் ஒருத்தியைக் (ஜன்ஸ்மைல்) காதலித்த பொழுது எனது கத்தியை ஒரு கல்லிலே உடைத்து அந்தக் கல்லை எனது எதிரி

யாகப் பாவித்தேன். அவள் கைப்பட்ட கப்பையும், விரல்பட்ட பசுவின் காம்புகளையும், நான் அன்போடு முத்தமிட்டேன். இரண்டு மணிகளை அவளிடமிருந்து பெற்று, அவற்றையே காதலித்து, பிறகு அவற்றை அவளிடம் கொடுத்து, என் பொருட்டு அவற்றை அணிந்து கொள்ள வேண்டினேன். இத்தகு வினோத விளையாட்டுக்களில் நம்மைப் போன்ற உண்மைக் காதலர்கள் ஈடுபடுவது இயற்கை. அதுபோலக் காதலில் ஈடுபடும் அனைத்தும் முட்டாள்தனம் செய்வது இயற்கை!

ரோச : நீ உன்னைவிட மிக அறிவாகப் பேசுகிறாய்.

டச் : இல்லை. என்னுடைய பொன்மொழிகள் உண்மை யாவதை நான் அறிந்தால் அல்லது, எனது அறிவு மொழிகளை நான் நம்பமாட்டேன்.

ரோச : இந்த இடைக்குல இளைஞனின் காதல் என் காதலைப் போலவே இருக்கிறது.

டச் : என் காதலைப் போலவும்தான் இருக்கிறது. ஆனால் என் காதல் கிழிந்த காதல்! கிழட்டுக் காதல்!

சீலியா : உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன். உங்களில் யாராவது ஒருவர் அந்த மனிதனிடம் சென்று நமக்கு அவன் தங்கத்துக்கு (பவுனுக்கு) உணவு தருவானா என்று கேளுங்கள். நான் கிட்டத்தட்டச் சாவு மயக்கத்தில் கிடக்கிறேன்.

டச் : (கோரினை நோக்கி இறைந்து பேசுகிறான்) ஏ...! முட்டாள்!

ரோச : சத்தம் போடாதே! முட்டாள்! அவன் உன்னைப் போல் முட்டாள் இல்லை.

கோரின் : என்னை அழைப்பது யார்?

டச் : உன்னைவிட உயர்ந்தவர்கள்...

கோரின் : இல்லாவிட்டால் அவர்கள் மிகவும் துன்புற நேரும்.

ரோச : (டச்ஸ்டோனிடம்) சத்தம் போடாதே! நான் சொல்கிறேன்...

(கோரினிடம்) நண்பரே! வணக்கம்!

கோரின் : ஐயா! உங்கள் அனைவருக்கும் வணக்கம்!

ரோச : இடையரே! உம்மை வேண்டுகிறேன். அன்போ அல்லது தங்கமோ இந்தப் பாலைவனத்தில் எங்களுக்கு உணவும் உறைவிடமும் பெற்றுத் தருமா? இதோ ஒரு பெண் பிரயாணத்தால் மிகவும் களைத்து உணவின்றி வாடுகிறாள்.

கோரின் : ஐயா! அவளுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். அவளது பசியைத் தீர்க்கும் ஆற்றல் எனக்கு முன்பு இருந்தது! ஆனால் இப்பொழுது நான் ஒரு முதலாளியிடம் வேலை செய்யும் இடையன். இதோ புல்மேயும் ஆடுகள் எனக்குச் சொந்தமல்ல. எனது முதலாளி ஒரு மோசமானவர். விருந்தோம்பி அமரத்துவம் அடைவதைப் பற்றி அவர் கவலைப்படுவ

தில்லை. மேலும் அவரது வீடு, மந்தை, புல்வெளி ஆகிய வற்றை அவர் விற்க விரும்புகிறார். அவர் ஊரில் இன்மையால் வீட்டில் நீங்கள் உண்ணத்தக்க பொருள் எதுவும் இல்லை. அதனாலும் பரவாயில்லை. வாருங் கள். உங்களை நான் வரவேற்கிறேன்.

ரோச : என்ன நிபந்தனையின் பேரில் அவை விற்கப்படும்?

கோரின் : சற்று நேரத்திற்கு முன்பு நீங்கள் இங்கே பார்த்த இளைஞன் (சில்வியஸ்) எதையும் விலைக்கு வாங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

ரோச : உன்னை வேண்டுகிறேன்... எங்களுக்காக அந்த வீடு, மந்தை, புல்வெளி ஆகியவற்றை விலைக்கு வாங்கு. பணம் தருகிறோம்.

சீலியா : உனது சம்பளத்தை நாங்கள் உயர்த்துகிறோம். இந்த இடம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. இங்கே காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம்.

கோரின் : இவை உறுதியாக விற்பனைக்கு உரியன. என்னு டன் வாருங்கள். இந்த மண், இலாபம், வாழ்க்கை முறை ஆகியவற்றை நீங்கள் விரும்பினால் நான் உங்க ளிடம் ஊழியம் செய்யத் தயாராய் இருக்கிறேன். உங்கள் பணத்தைக் கொண்டு இவற்றை உடனே விலைக்கு வாங்கத் தயாராயிருக்கிறேன். வாருங்கள். (அனைவரும் செல்கின்றனர்)

காட்சி—5

இடம் : காடு

[ஏமியன்ஸ் பிரபு, ஜேக்குவஸ் பிரபு மற்றும் பலர் வருகின்றனர்.]

ஏமியன்ஸ் : (பாடுதல்)

"மரத்தின்கீழே மகிழ்ந்து என்னோடு
பறவையைப்போலப் பாடிட வாரீர்!
இந்தக் காட்டில் குளிரினைத் தவிர
எந்தப் பகையும் இல்லவே இல்லை!"

ஜேக்குவஸ் : பாடு! இன்னும் கொஞ்சம் பாடு!

ஏமியன்ஸ் : ஜேக்குவஸ்! பாட்டு உன்னை இன்னும் புண் படுத்தும்.

ஜேக்குவஸ் : அதற்காக நன்றி செலுத்துகிறேன். பாடு! மேலும் பாடு. கீரியானது முட்டைகளைப் பருகுவது போல நான் பாட்டிலிருந்து சோக ரசத்தைப் பருகு கிறேன்.

ஏமியன்ஸ் : என் தொண்டை கனமானது! என் பாட்டு சுவையூட்டாது.

ஜேக்குவஸ் : சுவையைப் பற்றிக் கவலையில்லை. பாடு... மேலும் பல பல்லவிகள் பாடு...

ஏமியன்ஸ் : எந்தப் பல்லவி பிடிக்கும்? ஜேக்குவஸ்!

ஜேக்குவஸ் : பெயரைப் பற்றிக் கவலையில்லை...பாடு—

ஏமியன்ஸ் : எனக்காக அன்று! உனக்காகப் பாடுகிறேன்.

ஜேக்குவஸ் : நல்லது. நான் மனிதன் யாருக்காவது நன்றி செலுத்தினால் உனக்கு நன்றி செலுத்துவேன். எனக்கு யாராவது நன்றி செலுத்தினால் நான் அவனுக்கு ஒரு அணா நன்கொடை தந்தது போலவும், அவன் எனக்குப் பிச்சைக்கார நன்றி செலுத்துவது போலவும் எண்ணிக் கொள்வேன். வா... பாடு... மற்றவர்கள் அமைதியாக இருங்கள்...

ஏமியன்ஸ் : சரி நான், பாட்டை முடிக்கிறேன். நண்பர் களே! உடனே உணவருந்த ஏற்பாடு செய்யுங்கள். பேரரசர் இந்த மரத்தடியிலேயே உணவுண்பார். ஜேக்குவஸ்! பேரரசர் இன்று முழுதும் உங்களைக் காணத் துடித்தார்.

ஜேக்குவஸ் : இன்று முழுவதும் நான் அவரைத் தவிர்த்து வந்தேன். அவர் என்னோடு விவாதிப்பதில் மிகவும் விருப்பம் உடையவராய் இருக்கிறார். அவரைப் போலவே நானும் பல செய்திகளை அறிந்திருக்கிறேன். ஆனால் நான் அவற்றைப் பெருமையாகக் காட்டிக் கொள்வதில்லை. வாருங்கள். பாடுவோம்...வாருங்கள்.

பாடல்

(அனைவரும் பாடுகின்றனர்)

பேராசை இன்றித் திறந்தவெளி வேண்டி
வாழ விரும்புவோர் வந்திடு வீரே!
உண்ணும் உணவைத் தானே தேடி
மனத்தின் நிறைவோ டுண்போர் வாரீர்!
இந்தக் காட்டில் குளிரினைத் தவிர
எந்தப் பகையும் இல்லவே இல்லை!

ஜேக்குவஸ் ; நான் நேற்றுத் தீட்டிய பாடல் ஒன்று இதே சந்தம் உடையது—தருகிறேன்.

ஏமியன்ஸ் : நான் அதனைப் பாடுகிறேன்.

ஜேக்குவஸ் ; அந்தப் பாடல் கேளுங்கள்...

பாடல்

இங்கே வந்தால் எவனும் கழுதை!
சொத்தும் சுகமும் சுற்றி எறிந்து
உறுதி உளத்தோ டுரமாய் வந்தால்
டக்டேம் டக்டேம் டக்டேம்
இந்தக் காட்டில் அவனைப் போல
விந்தை முட்டாள் பலரைக் காண்பன்!
அவனோ என்னை அண்டி வந்தால்

ஏமியன்ஸ் : "டக்டேம்" என்றால் என்ன?

ஜேக்குவஸ் : அது ஒரு கிரேக்கப் பெயர். முட்டாள்களை மொத்தமாகக் குறிக்கும் ஒரு சொல். முடிந்தால் நான் உறங்கச் செல்வேன். முடியாவிட்டால் முந்திப் பிறந்தவர்களுக்காக (அண்ணன்மார்களுக்காக) வசைமொழி புகலப் போகிறேன். (பேரரசர் தன் தம்பியிடம் நாட்டை இழந்த அறியாமைக்காக ஜேக்குவஸ் அவர் மீது சினம் கொள்ளுதல்.)

ஏமியன்ஸ் : நான் போய்ப் பேரரசரை அழைத்துவரப் போகிறேன். அவருக்காக உணவு தயாராகி விட்டது.

(செல்லுதல்)

காட்சி—6

இடம் : காட்டின் மற்றொரு பகுதி.

(ஆர்லாண்டோ, ஆடம் இருவரும் வருகின்றனர்)

ஆடம் : அன்பு முதலாளி! இனி என்னால் ஓர் அடிகூட நடக்க முடியாது. பசியால் நான் சாகிறேன். நான் இங்கே மாண்டு என் புதைகுழியை அளக்கிறேன். விடை பெறுகிறேன் முதலாளி!

ஆர்லாண்டோ : வேண்டாம்! ஆடம்! உனக்கு மனத் துணிவு மிகுதியில்லையா? சற்றுநேரம் பிழைத்திரு; ஓய்வுகொள்; உற்சாகம் பெறு. இந்தக் காட்டில் ஏதாவது மிருகம் அகப்பட்டால் ஒன்று நான் அதற்கு உணவாவேன். அல்லது அதனை உனக்கு உணவாகக் கொண்டு வருவேன். உன் ஆற்றலை மறந்து மரணத்தைக் கற்பனை செய்கிறாய். என் பொருட்டுப் புத்துயிர் கொள். சாவைச் சற்றுத் தொலைவில் நிறுத்தி வை. விரைவில் நான் திரும்பி, உனக்கு ஏதாவது உணவினை நான் கொண்டுவரத் தவறினால் அப்பொழுது உனக்குச் சாக அனுமதி தருவேன். ஆனால் நான் திரும்பி வருமுன் நீ செத்தால் என் உழைப்பே வீணாகி விடும். நல்லது. உற்சாகமாக இருக்கிறாய். விரைவில் வந்து சேர்கிறேன். ஆனால் நீ திறந்த வெளியில் கிடக்கிறாய். வா! உன்னை ஏதாவது தங்குமிடத்துக்குத் தூக்கிச் செல்கிறேன். இந்தக் காட்டில் ஏதாவது உயிர்ப் பிராணி இருக்குமேயானால் நீ பசியால் சாகக் கூடாது...உற்சாகமாக இரு...ஆடம்! வருகிறேன். (செல்கிறான்)

காட்சி—7

இடம் : காடு

(விருந்து பரிமாற மேஜை தயாராக இருக்கிறது. பேரரசர், ஏமியன்ஸ், மற்றும் பிரபுக்கள் பலர் சட்ட விரோதிகள் போல் வருகின்றனர்.)

பேரரசர் : (ஜேக்குவசைப் பற்றி) அவர் ஒரு வாயில்லாப் பிராணியாக (விலங்காக) மாறியிருப்பதாக நினைக் கிறேன். ஏனென்றால் அவரை நான் மனிதனாகவே காணவில்லை.

முதல்பிரபு : அரசே! அவர் எங்கோ போய் விட்டார். சற்றுநேரம் முன் இங்கே பாட்டுக் கேட்டு மகிழ்ச்சியாக இருந்தார்.

பேரரசர் : அவர் முரண்படும் பொழுது இசை உருவாய் மாறுகிறார். அந்த இசையால் நாம் விரைவில் கிரகச் சுழற்சி இசையில் ஒரு மாற்றத்தைக் காணலாம். போங்கள். அவரைக் கண்டுபிடியுங்கள். அவருடன் நான் பேச விரும்புவதாகச் சொல்லுங்கள்.

(ஜேக்குவஸ் தானே வருதல்)

முதல்பிரபு : அரசே! அதோ... ஜேக்குவஸ் தானே வருகிறார்...அவரைக் கண்டுபிடிக்கும் வேலை எனக்குக் குறைந்தது.

பேரரசர் : நண்பரே! இது என்ன வாழ்க்கை! உங்கள் வருகைக்காக நண்பர்கள் காத்துக் கிடக்கின்றனர். ...என்ன ம கி ழ் ச் சி யா க இருப்பதுபோல் காண் கிறீர்களே!

ஜேக்குவஸ் : ...முட்டாள்...ஒரு முட்டாள்!...நான் ஒரு முட்டாளைக் காட்டில் சந்தித்தேன். விநோதமான ஆடை அணிந்திருந்தான்! துயரமான உலகம்! நான் சொல்வது முற்றிலும் உண்மை. நான் ஒரு முட்டாளைச் (விதூடனை) சந்தித்தேன். அவன் ஞாயிற்று ஒளியில் மகிழ்ந்திருந்தான். அதிர்ஷ்ட மங்கையை வைது கொண் டிருந்தான். அவனைப் பார்த்து நான் "முட்டாள்! வணக்கம்" என்று சொன்னேன். அதற்கு அவன், "இல்லை ஐயா! எனக்கு அதிர்ஷ்டம் வரும்வரை என்னை முட்டாள் என்று அழைக்காதீர்கள்" என்று சொன்னான். பிறகு அவன் தன் பையிலிருந்து ஒரு கடிகாரத்தை எடுத்து மணியைப் பார்த்தான். "இப்பொழுது மணி பத்து. இப்படி நாம் இந்த உலகம் எப்படி உருள்கிறது என்பதை உணர இன்னும் ஒரு மணி சென்றால் பதினொன்று; இவ்வாறு மணிக்கு மணி நாம் முதிர் கிறோம். பிறகு மணிக்கு மணி நாம் தேய்கிறோம். இது தான் நம் கதை" என்றான். அந்த மூட்டாளின் காலம் பற்றிய இந்த நீதிக் கருத்தைக் கேட்டதும் நான் வயிறு குலுங்கச் சிரித்தேன். ஒரு முட்டாள் இவ்வளவு ஆழமாகச் சிந்திப்பதை அறிந்ததும் இடைவிடாமல் ஒரு மணி நேரம் சிரித்தேன். சரியான முட்டாள்! தகுதியான முட்டாள்! அணிவதற்கு முட்டாள் உடைதான் தகுந்தது.

பேரரசர் : அவன் எத்தகைய முட்டாள்?

ஜேக்குவஸ் : சரியான முட்டாள்! அரசவையில் பணி யாற்றியவன். அவன் சொல்கிறான்... பெண்கள் இளமையும் அழகும் உடையவர்களாக இருப்பின் அவர்களுக்கு அதை அறியும் ஆற்றல் உண்டென்று சொல்கிறான். கடற்பிரயாணம் சென்று திரும்பியபின் கப்பலில் மீதி உள்ள ரொட்டி எவ்வாறு காய்

திருக்குமோ, அது போல் அவனது மூளையும் காய்ந் திருக்கிறது. அவன் விந்தையான இடங்களைக் கண் டிருக்கிறான். அதைப் பற்றி வியப்பாக மொழி...... ம்...நானும் ஒரு முட்டாளாக இருந்தால்......அந்த விநோதமான உடையைப் பெற நான் பேராசைப் படுகிறேன்.

பேரரசர் : அந்த ஆடையில் உனக்கும் ஒன்று உண்டு.

ஜேக்குவஸ் : அதுதான் என் விருப்பம்! ஆனால் நீங்கள் என் அறிவை ஏற்றுக் கொள்ள வேண்டும்; காற்றானது நினைத்த இடத்தில் வீசுவதைப் போல நான் விரும்பி யோரை விமரிசிக்க எனக்கு உரிமை வேண்டும்? முட்டாள்களுக்கு அந்த உரிமை உண்டு. என்னால் மிகுதியாகத் தாக்கப்பட்டவர்கள் மிகுதியாகச் சிரிக்க வேண்டும். அவர்கள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? கோபுரம் தெரியும் பாதை போல அது வெளிப்படை! முட்டாளானவன் யாரை மறைமுகமாகத் தாக்கு கிறானோ அதைத் தெரியாதவன் போலவே நடிப்பான். இல்லாவிட்டால் அவன் பார்வையாலேயே அது வெளிப் பட்டுவிடும். எனக்கு அந்த விநோத ஆடையைக் கொடுங்கள். என் மனத்தைத் திறந்து பேச எனக்கு அனுமதி தாருங்கள். நான் வழங்கும் மருந்தைப் பொறுமையாக ஏற்குமேயானால், மாசடைந்த இந்த உலகத்தின் மாசைத் துடைக்கிறேன்.

பேரரசர் : நீ என்ன செய்ய வேண்டும் என்று சொல் கிறேன்.

ஜேக்குவஸ் : நான் நன்மையே செய்ய முடியுமா?

பேரரசர் : பிறரைத் தாக்குவதன் மூலம் பெரும் பிழை செய்கிறாய். நீ ஒரு சுதந்திரப் பறவையானதால்

உணர்ச்சியுள்ள கொடுக்குப் போன்றவன். தீயன எல்லாம் நின் சுதந்திர வேட்கையால் நீ உணர்ந்துள்ள தால், உலகிற்கு அவற்றை வெளிப்படுத்தி விடுவாய்.

ஜேக்குவஸ் : ஆணவத்தைத் தாக்கிப் பேசினால் அது தன்னைக் குறிப்பதாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. அது ஒரு பறந்த கடல் போன்றதல்லவா? பெண்ணொருத்தி ராஜபோக ஆடம்பர ஆடை உடுத்தியிருக்கிறாள் என்று நான் கூறினால், அதனைத் தனக்குரிய குற்றச்சாட்டாக எந்தப் பெண்ணாவது எடுத்துக் கொள்ளலாமா? அப்படியானால் அந்தக் குற்றம் அடுத்திருக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் தானே! உதாரணமாக, சாதாரணமானவர்கள் ஆடம்பரமாக இருக்கக் கூடாது என்று நான் சொன் னால் அதைத் தனக்குரிய குற்றச்சாட்டாக எடுத்துக் கொண்டு ஒருவன் "உன் செலவில் நான் ஆடம்பரமாக இல்லை" என்று பதில் அளித்தால், அவன் அக்குற்றச் சாட்டை மெய்ப்பிப்பதாகத்தானே அர்த்தம். இம் மாதிரி இடங்களில் நான் எவ்வகையில் பிறரைத் தாக்கி யுள்ளேன்? நான் சொல்வது அவனுக்குப் பொருத்தமாக இருப்பின் அவன் அதனை ஏற்பதன் மூலம் தனக்குத் தானே இழிவு தேடிக் கொள்கிறான். அவன் ஏற்கா திருந்தால் என் குற்றச்சாட்டு காட்டுவாத்துப் போலத் தானே பறந்து மறைந்துவிடும் அன்றோ! அதோ... யார் வருகிறது!

(ஆர்லாண்டோ உணவு தேடி உருவிய வாளோடு வருகிறான்)

ஆர்லாண்டோ : நிறுத்துங்கள்...எதையும் உண்ணா தீர்கள்...

ஜேக்குவஸ் : ஏன்? நான் இன்னும் எதையும் உண்ண வில்லையே...

ஆர்லாண்டோ : தேவை பூர்த்தியாகும் வரை யாரும் உண்ணக் கூடாது.

ஜேக்குவஸ் : இந்த அநாகரிக ஆசாமி எந்த இனத்தைச் சேர்ந்தவன்?

பேரரசர் : ஏ மனிதா! நீ துயரத்தால் இவ்வளவு துணிவு பெற்றிருக்கிறாயா? அல்லது இயற்கையிலேயே நீ நாகரிகக் குறைவானவனா?

ஆர்லாண்டோ : நீங்கள் முதலில் சொன்னது முற்றிலும் உண்மை. துயரத்தின் முள் என் நாகரிக நடத்தையைத் துண்டித்து விட்டது. இருப்பினும் நான் நாகரிகச் சூழ்நிலையில் வளர்ந்தவன்தான்; நல்ல பண்புகளை அறிந்தவன் தான்; நில்லுங்கள்...நான் சொல்லுகிறேன். எனது தேவைகள் நிறைவேறு முன் யாராவது இந்தப் பழங்களைத் தொட்டால் சாவது உறுதி.

ஜேக்குவஸ் : உனது தேவை நிறைவேறாவிட்டால் சாவேன்.

பேரரசர் : உனக்கு என்ன வேண்டும்? உனது நாகரிக நடத்தை உனது பலாத்காரத்தை விடப் பயனளிக்கும்.

ஆர்லா : நான் பசியால் சாகிறேன். எனக்கு உணவு தேவை.

பேரரசர் : உட்கார்ந்து உண். உன்னை நாங்கள் வரவேற் கிறோம்.

ஆர்லா : பெருந்தன்மையோடு பேசுகிறீர்கள். என்னை மன்னியுங்கள். உங்களை வேண்டிக் கொள்கிறேன்,

இங்கிருப்பவர்கள் எல்லாம் காட்டுமிராண்டிகள் என்ற கருத்தில் அநாகரிகமாக நடந்து கொண்டு விட்டேன். நீங்கள் யாவராக இருந்தாலும், இந்தக் காய்ந்த காட்டில் காலத்தை வீணாகக் கழிக்கிறீர்கள். நீங்கள் எப்பொழுதாவது நல்ல காலத்தைக் கண்டிருந்தால், மாதா கோவில் மணியைக் கேட்டிருந்தால், நல்லவர்களின் விருந்தில் பங்கு கொண்டிருந்தால், உங்கள் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரைத் துடைத்திருந்தால், இரக்கம் என்பதை உணர்ந்திருந்தால், எனது அன்பான வார்த்தைகள் எனது தேவையை உங்கள் மூலம் நிறைவேற்றட்டும். நீங்கள் நல்லவர்கள் என்ற நம்பிக்கையால் நான் வெட்கம் கொண்டு, என் கத்தியை உறையில் இடுகிறேன்.

பேரரசர் : உண்மையிலேயே நாங்கள் நல்ல காலத்தைக் கண்டவர்கள். மாதா கோயில் மணியைக் கேட்டவர்கள் நல்லவர்களின் விருந்தை உண்டவர்கள். கண்ணீரைத் துடைத்தவர்கள். ஆகவே அன்பாக அமர்! உனக்கு நாங்கள் என்ன உதவி செய்ய வேண்டும்? சொல்.

ஆர்லா : அப்படியானால் உணவு உண்பதைச் சற்று நேரம் நிறுத்துங்கள். அதற்குள் நான் ஒரு பெண்மான் தன் குட்டியைத் தேடிச் செல்வது போலச் சென்று, ஒருவனுக்கு உணவூட்ட விரும்புகிறேன்...அங்கே ஓர் ஏழைக் கிழவன் வெறும் அன்பால் என்னைத் தொடர்ந்து வந்து வீழ்ந்து கிடக்கிறான். முதுமையாலும், பசியாலும் தாக்குண்டு கிடக்கும் அவன் தேவை நிறைவேறினால் ஒழிய நான் ஒன்றையும் தொட மாட்டேன்.

பேரரசர் : போய் அவனை அழைத்து வா. அதுவரை நாங்கள் எதையும் உண்ண மாட்டோம்.

ஆர்லா : மிக்க நன்றி, கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும். இதோ வருகிறேன்.

(செல்கிறான்)

பேரரசர் : நாம் மட்டும்தான் துயரத்தில் ஆழ்ந்து கிடக்கிறோம் என்பதில்லை. இந்தப் பரந்து விரிந்த உலகமாகிய நாடக மேடையில் நாம் நடிக்கும் காட்சியைவிட மிகத் துயரமான காட்சிகளும் உள்ளன.

ஜெக்குவஸ் : இந்த உலகமே ஒரு நாடக மேடை. அத்தனை ஆடவரும் பெண்டிரும் அதில் நடிக்கும் நடிகர்கள். அனைவரும் பிறப்பு இறப்பு என்ற வழியில் வந்து செல்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் பல பாகங்களை ஏற்று நடிக்கிறான். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் ஏழு கட்டங்கள் உள்ளன. முதல் கட்டம் குழந்தைப் பருவம். தாயின் கரத்தில் அழுது பாலுண்ணும் நிலை, இரண்டாவதாகப் பாலகன் பருவம். ஒளி திகழும் முகத்தோடு, புத்தகப்பையைத் தூக்கிக் கொண்டு நத்தைபோல் நகர்ந்து பள்ளி செல்ல அழும் நிலை. மூன்றாவதாகக் காதல் பருவம். ஊதுலை போல உயிர்த்து, காதலியின் அழகை வர்ணித்துப் பாடும் நிலை. நான்காவதாக வீரப்பருவம். சபதங்கள் கூறி மானத்தை மதித்து வீரம் காட்ட விரைந்து, புகழெனின் பீரங்கிக்கு முன்னால் மார்பு காட்டும் நிலை. ஐந்தாவதாக நீதிப் பருவம். தலையில் அலங்காரமும், முகத்தில் தாடியும், கண்ணில் தெளிவும், நாவில் பொன் மொழிகளுமாகத் திகழும் நிலை. ஆறாவதாகக் கிழப் பருவம். காலில் செருப்பும், முகத்தில் மூக்குக் கண்ணாடியும், முதுகில் பையுமாகக் கால் தளர நாக்குழற நிற்கும் நிலை. கடைசியாகச் சாவுப் பருவம். சரித்திரத்தின் முடிவாக மீண்டும் குழந்தை நிலையை அடைந்து, பல்

இழந்து, சுவை இழந்து, பார்வை இழந்து, எல்லாம் இழந்து துவளும் நிலை (ஆர்லாண்டோ, ஆடமை அழைத்துக் கொண்டு மீண்டு வருகிறான்.)

பேரரசர் : வருக! அவரைக் கீழே இறக்கி வைத்து உணவூட்டுக!

ஆர்லா : அவர் சார்பில் நன்றி செலுத்துகிறேன்.

ஆடம் : என்னால் நன்றி கூறவும் இயலாத நிலை.

பேரரசர் : வருக! உண்ணுங்கள். உங்கள் நிலைபற்றிக் கேள்விகள் கேட்டுத் துன்புறுத்த மாட்டேன். நண்பர்களே!—சற்று நேரம் பாடுங்கள்.

பாடல்

ஏமியன்ஸ் : வீசு! வீசு! காற்றே வீசு!
மனிதனைப் போல நீ அவ்வளவு
நன்றி கெட்ட நடத்தை இல்லை.
உனது பல்லோ கூர்மை இல்லை.
ஏனென்றல் அது தெரிய வில்லை.
ஆனாலும் நீ வீசும் போது
இனிமையாக இருப்ப தில்லை!
சரி கம பத நிச!
பலரின் நட்பு நடிப்பே ஆகும்!
பலரின் அன்பு சூழ்ச்சி ஆகும்!
இருந்தும் இந்த வாழ்க்கை என்ன?

என்றும் இன்ப வாழ்க்கை தானே!
வீசு! வீசு! காற்றே வீசு!
செய்த நன்மையை மறந்தோர் போல
உனது குளிரோ உரைக்க வில்லை.
நன்றி கெட்ட நண்பரைப் போல
உனது கொடுக்கில் நஞ்சே இல்லை!
சரி கம பத நிச.

பேரரசர் : (ஆர்லாண்டோவிடம்) நீ இரகசியமாகச் சொன்னதுபோல நீ சர்ரோலண்டின் மகனாக இருப்பது உண்மையானால், உன் முகத்தில் அவரது சாயலை நான் காண்பது உண்மையானால், உன்னை இங்கே நான் அன்பாக வரவேற்கிறேன். நான்தான் உன் தந்தையால் பெரிதும் நேசிக்கப்பட்ட பேரரசர்! உனது நிலையைப்பற்றி எனது குகைக்குச் சென்றபின் வர்ணி!... (ஆடமிடம்) முதியவரே! உமக்கும் நல்வரவு... வாருங்கள்...செல்வோம்...உங்கள் மீதிக் கதையைச் சொல்லி முடியுங்கள்.

(அனைவரும் செல்கின்றனர்)

களம் 3 காட்சி 3

இடம் : அரண்மனையில் ஓர் அறை

[பிரடரிக் அரசர், பிரபுக்கள், ஆலிவர் ஆகியோர் வருகின்றனர்]

பிரடரிக் : இன்னும் அவனைப் (ஆர்லாண்டோவைப்) பார்க்கவில்லையா? இருக்க முடியாது. எனக்குக் கருணை என்பது இருந்திராவிட்டால் ஓடிப்போன

வனுக்காக உயிரோடு இருக்கும் உன்னைப் பழி வாங்கி இருப்பேன். ஆனால் கவனி. உன் தம்பி எங்கே போயிருந்தாலும் தேடிக் கண்டுபிடி! வெளிச்சம் போட்டுத் தேடு. அவனை உயிரோடோ,பிணமாகவோ கொண்டு வா. பன்னிரண்டு மாதத்திற்குள் அவனைக் கொண்டு வராவிட்டால், நம் எல்லைக்குள் திரும்பி வராதே. உனது சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும். உன் தம்பி வாயாலேயே அவனது நடத்தையில் உனக்குப் பங்கு இல்லை என்ற செய்தி தெரிய வேண்டும். அப்பொழுது நீ தப்புவாய்.

ஆலிவர் : (பயத்துடன்) அரசே! என் உள்ளத்தைத் திறந்து பேசுகிறேன். அது உங்களுக்குத் தெரியும். என் வாழ்வில் நான் என் தம்பியை நேசித்ததே இல்லை.

பிரடரிக் : அப்படியானால் நீ மிகவும் மோசமானவன்... நல்லது. காவலர்களே! இவனை வெளியேற்றுங்கள். இவனது வீடு, வாசல், நிலபுலம் எல்லாவற்றையும் விரைந்து மேற்கொண்டு இவனை விரட்டி அடியுங்கள். (போகிறார்)

காட்சி—2

இடம் : காடு

(ஆர்லாண்டோ கையில் ஒரு தாளுடன் வருகிறான்)

ஆர்லாண்டோ : (ரோசலிண்டைப் பற்றி எழுதிய கவிதை உள்ள தாளை மரங்களில் மாட்டி, பட்டைகளில் தீட்டி மகிழ்கின்றான்) கவிதைகளே! அங்கேயே திகழுங்கள். என் அன்பின் அடையாளமாக விளங்குங்கள்! ஏ நிலவே! உனது கற்புக் கண்களால் வானத்திலிருந்து

எனது உயிரைக் கொள்ளை கொண்டுள்ள ரோசலிண்டின் பெயரைப் பார்! ஓ! ரோசலிண்ட்! இந்த மரங்கள் தான் என் புத்தகங்கள்! அதன் கிளைகளில் என் கருத்துக்களைப் பொறிப்பேன். இந்தக் காட்டில் காணும் ஒவ்வொரு கண்ணும் உனது பண்புகளை எங்கும் காணட்டும். ஓடு! ஓடு! ஆர்லாண்டோ! ஒவ்வொரு மரத்திலும் அழகும், கற்பும் வாய்ந்த, வர்ணிக்க இயலாத அவளது சிறப்பு பற்றி வரை. (ஓடுகிறான்)

(கோரின், டச்ஸ்டோன் ஆகிய இருவரும் வருகின்றனர்)

கோரின் : எசமான் டச்ஸ்டோன்! இந்த இடையர் வாழ்க்கை எப்படியிருக்கிறது?

டச்ஸ்டோன் : உண்மைதான்! இடையா! அதைப் பொறுத்தவரை அது நல்ல வாழ்க்கைதான்! ஆனால் அது ஒரு இடையர் வாழ்க்கை என்ற அளவில் உபயோகமற்றது. அது தனிமையானது என்பதால் அதனை நான் விரும்புகிறேன். ஆனால் அது ஒற்றையானது என்பதால் அது ஒரு மட்டமான வாழ்க்கை. அது வயல் தழுவிய வாழ்க்கை என்பதால் இனிமையானது; ஆனால் அது அரண்மனையை விட்டு விலகியது என்பதால் அது எனக்குப் பொருத்தமானது; ஆனால் அதில் பல வகைகள் இன்மையால் என் விருப்பத்துக்கு விரோதமானது, ஆயனே! உனக்கு ஏதாவது தத்துவங்கள் தெரியுமா?

கோரின் : தெரியாது. ஆனால் வியாதியுடையவன் துயரப் படுகிறான். பணத்தை விரும்புபவன் திருப்தி இழக்கிறான். மழையானது குளிர்விக்கும் நெருப்பானது சுடும். புல்வெளியானது ஆட்டைப் பருக்க வைக்கும் இரவானது சூரியன் மறைந்ததால் வருகிறது; இயற்கை அறிவும், நூல் அறிவும் இல்லாதவன் மட்டமான குடும்பத்தில் பிறந்தவன் ஆவான். இதுதான் நமது தத்துவம்!

டச்: நீதான் உண்மையான தத்துவஞானி! இடையா! நீ எப்பொழுதாவது அரண்மனையில் இருந்திருக்கிறாயா?

கோரின்: இல்லை.

டச்: அப்படியானால் நீ ஒரு முட்டாள்.

சோரின்: இல்லை...நான் நினைக்கிறேன்.

டச்: உண்மையிலேயே நீ ஒரு முட்டாள்தான். ஒரு பக்கம் மட்டும் வெந்த முட்டை போன்றவன் நீ.

கோரின்: அரண்மனையில் இல்லாததனாலா? அதுதான் உங்கள் கரரணமா?

டச்: ஆம். நீ அரண்மனையில் இல்லாததால், நாகரிகத்தை அறியாததால் நீ கெட்டவன். கெட்டதால் நீ ஒரு பாவி! பாவியாவது முட்டாள்தனம்! ஆகவே இடையா! நீ ஓர் ஆபத்தான நிலையில் இருக்கிறாய்.

கோரின்: இல்லவே இல்லை. டச்ஸ்டோன்! பட்டிக்காட்டு நாகரிகம் அரண்மனைவாசிகளுக்கு எவ்வளவு அநாகரிகமோ அவ்வளவு அநாகரிகம் அரண்மனைப் பழக்க வழக்கங்கள் பட்டிகாட்டு வாசிகளுக்கு என்பதை உணருங்கள். நீங்கள் அரண்மனையில் ஒருவரை ஒருவர் கைகூப்பி வணங்குவதில்லை. ஆனால் கையில் முத்தமிட்டு வணங்குவதாகக் கூறி இருக்கிறீர்கள். இடையர்கள் அரண்மனைவாசிகளாக இருந்தால் இதனை அசுத்தமென்று கருதுவார்கள்.

டச்: உதாரணம்... இன்னும் உதாரணம் கொடு.

கோரின்: ஏன்? நாம் இன்னும் வெண் ஆடுகளையும் அவற்றின் தோல்களையும் உபயோகிக்கிறோம் அல்லவா?

டச்: ஏன், அரண்மனைவாசிகளின் கைகளில் ஈரம் இல்லையா?...வேறொரு நல்ல உதாரணம் கொடு.

கோரின்: நம் கைகள் கடுமையானவை.

டச்: உனது உதடுகள் அவற்றை விரைவில் உணரும். நாங்கள் தாரைத் தொட நீங்கள் விரும்புவீர்களா? ஆனால் அரண்மனை வாசிகளின் கைகளில் புனுகு மணம் வீசும்.

டச்: புனுகு என்பது தாரைவிட மிக மோசமானது. ஏனென்றால் அது ஒரு பூனையின் கழிவாகும். வேறொரு நல்ல உதாரணம் கொடு.

கோரின்: உங்கள் அறிவு என்னைவிடப் பரந்ததாகும். என்னை விடுங்கள், நான் ஓய்வு கொள்ளப் போகிறேன்.

டச்: முட்டாள்! ஓய்வு கொள்ளப் போகிறாயா? கடவுள் உனக்கு அருள் புரியட்டும். நீ அனுபவம் அற்றவன்.

கோரின்: ஐயா! நான் ஓர் உண்மையான ஊழியன்; நான் உண்பதையும், உடுத்துவதையும் நானே சம்பாதிக்கிறேன். ஒருவரின் வெறுப்புக்கும் நான் ஆளானதில்லை. ஒருவரின் இன்பத்தையும் கண்டு,

நான் பொறாமைப்பட்டதில்லை. பிறர் நன்மை கண்டு மகிழ்கிறேன். பிறர் தீமையைப் பற்றிப் புகார் செய்வதில்லை. எனக்கு மிக்க நிறைவு எதில் என்றால் எனது ஆடுகள் மேய்வதிலும், குட்டிகள் பால் குடிப்பதிலுமே ஆகும்.

டச்: வெள்ளாடுகளையும், செம்மறி ஆடுகளையும் ஒன்றாக மேய்த்து உன் உணவைத் தேடிக் கொள்கிறாய். அது ஒரு சிறிய பாவம்! பொருத்தமற்ற ஆடுகள் இணைகின்றன. இந்தப் பாவத்துக்காக நீ நரகத்தில் வீழ்வாய். அதிலிருந்தும் நீ தப்பினால் நரகமும் உன்னை விரும்பவில்லை என்றுதான் பொருள்.

கோரின்: அதோ எஜமான் கனீமீடு வருகிறார். (ரோசலிண்டு ஆண் உடையில் கனீமீடு என்ற பெயரில் வருகிறாள். அவள்கையில் ஒரு தாள் இருக்கிறது. அதனைப் படித்தவாறு வருகிறாள்.)

கவிதை

ரோசலிண்ட்: கிழக்கு முதல் மேற்கு வரை
ரோசலிண்ட் போல் ஒரு வைரம் இல்லை
வானில் உலவும் வனிதை அவள்!
உலகம் போற்றும் உத்தமி ரோசலிண்ட்!
அழகுப் படங்கள் அனைத்தும் அவள் முன்
கரிய படமே! அழகே ரோசலிண்ட்!
எந்த முகமும் இதயம் தன்னில்
பதிய வில்லை பாவை தவிர

டச்: எட்டு ஆண்டுகள் சாப்பாடு, தூக்கநேரம் தவிர மற்ற நேரங்கள் எல்லாம் உங்களோடு சேர்ந்து நானும் இசைப்பேன். தயிர்க்காரிகள் கூட்டம் சந்தைக்குச்

செல்லும் நடையில் இப்பாட்டின் ஓசை அமைந்துள்ளது.

ரோச: போ முட்டாள்!

டச்: உதாரணமாக, (பாடல்)

"ஆண்மான் ஒன்று பெண்மானை விரும்பினால்
அது விரும்புவது ரோசலிண்டே!
பூனை ஒன்று பெண்ணை விரும்பினால்
ரோச லிண்டும் அங்ஙனமே செய்வாள்!
குளிர்கால ஆடை கோடுகள் உடையது
ரோசலிண்டும் மெல்லிய ஆடை!
அறுவடை செய்து கட்டிய தெல்லாம்
எடுத்துச் செல்லும் வண்டி ரோசலிண்ட்!
இனிய பருப்பின் ஓடோ கடுமை!
இனிய பருப்பே எழில்சால் ரோசலிண்ட்!
இனிய ரோஜா முள்ளின் நடுவே
காதல் கண்டனன் ரோசலிண்ட் அறிக!

இது ஒரு பொய்யானபாடல்! இதனால் நீங்கள் ஏன் உணர்ச்சி வசப்படுகிறீர்கள்?

ரோச: பேசாதே முட்டாள்! இவற்றை நான் ஒரு மரத்தில் கண்டேன்.

டச்: உண்மைதான். அந்த மரம் மட்டமான கனியைத் தருகிறது.

ரோச: வெம்பிப் பழுக்கும் மரத்தோடு உன்னை நான் ஒப்பிடுகிறேன். முந்திப் பழுக்கும் அந்த மரத்தின கனிகள்

வெம்பியனவாக இருப்பது போல, முந்திரிக்கொட்டை யாக இருக்கும் உன் பேச்சும் வெம்பிய தன்மையினதே!

டச்: நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லி விட்டீர்கள். ஆனால் நீங்கள் சொன்னது சரியோ, தவறோ, காடு அதைத் தீர்மானிக்கட்டும்.

(சீலியா ஒரு தாளோடு வருகிறாள்)

ரோச: அமைதி! அதோ என் தங்கை எதையோ படித்துக் கொண்டு வருகிறாள்...

சீலியா: (படித்தல்) கவிதை:

இது ஏன் காடாய் உள்ளது?
மக்கள் இன்மையா? இல்லவே இல்லை.
மரத்துக் கெல்லாம் நாக்கினை வைப்பேன்
நகர வாழ்வினை அவைகள் பேசும்!
வாழ்க்கை என்பது கையின் அகலம்
என்னும் அளவில் சிறிய யாத்திரை!
நண்பர்கள் என்போர் ஏமாற்றுவார்கள்.
ஆனால் நானோ கிளையில் எல்லாம்
ரோசலிண்ட் என்றே எழுதி முடிப்பேன்
சொர்க்கம் தந்த பண்புச் செல்வம்!
உலகோர் காண ஒருத்தி ரோசலிண்ட்!
சொர்க்கம் இட்ட ஆணை யாலே
உன்னத உருவாய் அமர்ந்தாள் உலகில்!
ஹெலனின் கன்னம், (இதயம் அல்ல)
கிளியோ பாட்ரா இனிய தோற்றம்,
அட்லான் டாவின் அரிய நாணம்

ஹூக்ரேஷ்யாவின் உயர்ந்த கற்பு
எல்லாம் சேர்ந்த தெய்வப் பிறவி
விலைமதிப் பில்லாப் பெண்ணே ரோசலிண்ட்!
வாழ்வேன் சாவேன் அவளின் அடிமையாய்!

ரோச: பாரதியாரின் பாடலைப் போல உனது பாடலும் நீளமாகவும் சலிப்பாகவும் அல்லவா உள்ளது? பாதிரி யார் தம்முன் இருப்போரைப் பொறுமையாகக் கேட்க வும் என்று கூடக் கூறாமல் படிப்பதைப் போலப் படிக்கிறாய்.

சீலியா: ஓகோ! இங்கேதான் இருக்கிறீர்களா? இடையா! டச்ஸ்டோன்! நீங்கள் இருவரும் சற்று விலகிச் செல்லுங்கள்.

டச்: வா இடையா! நாம் வெற்றிகரமாகப் பின் வாங்கு வோம் (கோரின், டச்ஸ்டோன் இருவரும் செல் கின்றனர்)

சீலியா: இந்தப் பாடல்களைக் கேட்டாயா?

ரோச: கேட்டேன், இன்னும் அதிகமாகவும் பார்த்தேன். பாடலின் உச்ச் அடிகளையும் தாண்டிய கவிதைகளைக் கூடப் பார்த்தேன்.

சீலியா: அதனால் பரவாயில்லை. அடிகள் பாடலைத் தாங்கியிருக்கட்டும்.

ரோச: ஆனால் அடிகள் பழுதுபட்டு நொண்டியாயிருந்தன.

சீலியா: ஆனால் உன் பெயர் [இந்த மரங்களில் எவ்வாறு தீட்டப்பட்டது என்பது ஆச்சரியமாக இல்லையா?

ரோச : நீ வருவதற்கு முன்பே நான் ஆச்சரியப்பட்டு விட்டேன். இதோ பார்...ஒரு பனைமரத்தில் நான் கண்டு எடுத்ததைப் பார்... பித்தகோரஸ் கருத்துப்படி நான் ஓர் அயர்லாந்து எலியாகப் பிறந்ததி லிருந்து இன்று வரை இவ்வளவு அழகாகப் பாடப் பட்டதில்லை.

சிலியா : யார் இவ்வாறு செய்திருப்பார் என்று தெரி கிறதா?

ரோச : அவன் ஒரு மனிதனா?

சிலியா : ஒரு நாள் நீ பரிசு வழங்கினாயே கழுத்துச் சங்கிலி...அதற்கு உரியவன்தான்...என்ன வெட்கப் படுகிறாய்?

ரோச : உன்னை வேண்டுகிறேன். யார் அவர்?

சிலியா : கடவுளே! நண்பர்கள் சந்திப்பது பெரிய காரியம். ஆனால் மலைகள் பூகம்பத்தால் பிளந்து விலகி ஒன்று கூடலாம் இல்லையா?

ரோச : இல்லை...யார் அவர்?

சிலியா : அது முடியுமா?

ரோச : மன்றாடிக் கேட்கிறேன்...யார் அவர்?

சிலியா : அருமை! அருமை! மிக அருமை!

ரோச ; சகோதரி! நான் வேட்டி சட்டை அணிந் திருப்பதால் என்னை இன்னும் ஆடவன் என்றே

நினைக்கிறாயா? சற்று நீ தாமதித்தாலும் தென்கடற் கண்டுபிடிப்புகளைப்போல் ஏராளமான கற்பனை செய்து விடுவேன். யார் அவர் என்று விரைந்து சொல். குறுகலான வாயுடைய ஒரு குடுவையிலி ருந்து விரைவாகவோ அல்லது வராமலோ இருக்கும் மதுவைப்போல, நீயும் திக்காமல் விரைவில் அந்த மனிதனை வெளிப்படுத்து. உன் வாயை அடைத்திருந் கும் மூடியை எடு. செய்தியை நான் பருக வேண்டும். அவன் தெய்வப் பிறவியா? அவன் எத்தகைய தன்மை யன்? அவன் குல்லாய் அணியத்தக்க தலை உடையனா? அல்லது தாடி இல்லா முகத்தினனா?

சீலியா : இல்லை...ஆனால் அவன் சிறிது தாடி உடையவன்.

ரோச : ஏன்? கடவுள் இன்னும் வளரச் செய்வார். அவன் மட்டும் நன்றி உடையவனாக இருந்தால். அவன் யாரென்று எனக்கு நீ உரைத்தால் அவனது தாடி வளரும்வரை நான் காத்திருக்கத் தயார்.

சீலியா : அவன்தான் ஆர்லாண்டோ..மல்வீரன் சார் லசையும், மங்கையாகிய உன் இதயத்தையும் ஒரே சமயத்தில் வென்றவன்.

ரோச : இல்லை, கேலி செய்கிறாய். உண்மையைச் சொல்.

சீலியா : உண்மைதான் சகோதரி! அது அவன்தான்!

ரோசா : ஆர்லாண்டோவா?

சீலியா : ஆம். ஆர்லாண்டோ தான்.

ரோச : கடவுளே! இனி இந்த ஆண் உடைகளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்தேன்? நீ அவரைப் பார்த்தபொழுது அவர் என்ன செய்தார். என்ன சொன்னார்? எப்படி இருந்தார்? எங்கே போனார்? இங்கே எதற்காக வந்தார்? என்னைப் பற்றி ஏதாவது கேட்டாரா? எங்கே தங்கி இருக்கிறார்? உன்னிடமிருந்து எப்படிப் பிரிந்து சென்றார்? அவரை இனி எப்பொழுது காண்பாய்?... எல்லாவற்றுக்கும் ஒரே வார்த்தையில் பதில் சொல்...

சீலியா : முதலில் நீ எனக்கு கார்காண்டஸ் என்னும் அரக்கனின் வாயைக் கடன் வாங்கித் தா. ஏனென்றால் என் போன்றவர்களின் வாய்க்கு உனக்குரிய விடை மிகப் பெரியதாகும். உனது கேள்விகளுக்கு ஆம் என்றோ, இல்லை என்றோ பதில் சொல்வது மிகப் பெரிய செயலாகும்.

ரோச : ஆனால் நான் இந்தக் காட்டில் ஆண் உடையில் இருக்கிறேன் என்பது அவருக்குத் தெரியுமா? அவர் மற்போர் நிகழ்த்திய நாளன்று இருந்தது போல் மகிழ்ச்சியாக இருக்கிறாரா?

சீலியா : சூரியனின் கிரணத்தில் உள்ள அணுக்களை எண்ணுவது போலக் காதலரின் வினாக்களுக்கு விடை பகர்வதும் இயலாததாகும். நான் அவரை எங்ஙனம் கண்டேன் என்பதைச் சொல்கிறேன். அதிலிருந்து நீ என் கருத்தை உருவாக்கிக் கொள்ளலாம். மரத்தின் கீழே விழுந்த பழம் போல அவர் வீற்றிருக்கக் கண்டேன்.

ரோச : அத்தகைய பழத்தைச் சிதறிய அந்த மரத்தைக் கற்பக மரமென்று சொல்லலாம்.

சீலியா : என்னைப் பேசவிடு...

ரோச : சரி...தொடர்ந்து பேசு...

சீலியா : காயம்பட்ட வீரனைப்போல அவர் அங்கே படுத்துக் கிடந்தார்.

ரோச ; அந்தக் காட்சியைக் காண்பது வருத்தத்திற்குரியது என்றாலும், அந்த மண்ணுக்கு அது மகத்தான பேறே ஆகும்.

சீலியா : உன் நாக்கை அடக்கு; இடை இடையே தேவையின்றி அது குறுக்கிடுகிறது...அவர் ஒரு வேட்டைக்காரன் போல் திகழ்ந்தார்.

ரோச : ஐயோ! அவர் என் இதயத்தைக் கொல்ல வருகிறார்.

சீலியா : நான் என் பாட்டை முடிக்குமுன் நீ உன் பாட்டுக்கு இராகத்தைக் கொடுக்கிறாய்.

ரோச : நான் ஒரு பெண் என்று உனக்குத் தெரியாதா? நான் சிந்திக்கும் பொழுது பேச வேண்டும்...அன்பே பேசு...

சீலியா : முடியாது...மெல்ல...அதோ...அவர் வருகிறார்... இல்லையா?

ரோச : ஆம்...அவரே தான்...மறைந்து கொண்டு கவனிப்போம்...(சீலியாவும் ரோசலிண்டும் மறைந்து கொள்கின்றனர்)

[ஆர்லாண்டோ, ஜேக்குவஸ் ஆகிய இருவரும் வருகின்றனர்]

ஜேக்குவஸ் : உங்கள் தோழமைக்கு நன்றி. ஆனால் நான் தனியாகவே இருக்க விரும்புவேன்.

ஆர்லாண்டோ : நானும்தான்... ஆனால் உங்கள் நட்புக்காக நன்றி செலுத்துகிறேன்.

ஜேக்குவஸ் : கடவுள் உங்கட்கு அருள் புரியட்டும்! நாம் முடிந்தவரை குறைவாகவே சந்திபோம்.

ஆர்லா : நாம் புதியவர்களாகவே இருந்தால் அது இன்னும் நன்றாக இருக்கும்.

ஜேக்குவஸ் : உங்களை நான் வேண்டுகிறேன். காதற் கவிதைகளை எழுதி மரத்தின் கிளைகளைக் கெடுக்காதீர்கள்.

ஆர்லா : உங்களை நான் வேண்டுகிறேன். கருணையின்றிப் படித்து என் கவிதைகளைக் கெடுக்காதீர்கள்.

ஜேக்குவஸ் : ரோசலிண்ட் உங்கள் காதலியா?

ஆர்லா : ஆம்...

ஜேக்குவஸ் : அவள் பெயரை நான் விரும்பவில்லை.

ஆர்லா : அவளுக்குப் பெயர் வைத்தபொழுது உங்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று யாரும் நினைக்கவில்லை.

ஜேக்குவஸ் : அவள் எத்தகைய தோற்றம் உடையவள்?

ஆர்லா : என் இதயம் அளவு உயர்ந்தவள்?

ஜேக்குவஸ் : நீங்கள் நல்ல பதில்களைச் சொல்கிறீர்கள். நீங்கள் பொற்கொல்லர் மனையவிரோடு பழகியது உண்டா? மோதிரத்தில் பொறிக்கப்பட்டுள்ளவற்றைப் படித்து அவர்கள் பதில் செல்வார்கள். அது போல் நீங்கள் சொல்கிறீர்கள்?

ஆர்லா : இல்லை திரைச்சிலைகளில் எழுதியிருப்பது போல் நான் பதில் செல்கிறேன். நீங்கள் கேள்வி கேட்க எங்கே கற்றீர்களோ அங்கிருந்து நானும் பதில் சொல்லக் கற்றேன்.

ஜேக்குவஸ் : உங்களிடம் திடீர் விடைகள் தயாராக இருக்கின்றன. அர்லாண்டா என்னும் பெரிய ஓட்டக் காரியின் காலிலிருந்து உங்கள் விடைகள் தயாரிக்கப் படுகின்றன என்று நினைக்கிறேன். நீங்கள் என்னோடு சற்று உட்காருகிறீர்களா? இந்த உலகமும், நமது துயரமும் ஆகிய நமது மனைவியரைப் பற்றி நாம் வாய் குளிரத் திட்டுவோம்.

ஆர்லா : இந்த உலகத்தில் நான் என்னைத் தவிர வேறு யாரையும் திட்டமிட்டேன். ஏனென்றால் எனது குற்றங்களைப் பற்றி நான் நன்கு அறிவேன்.

ஜேக்குவஸ் : நீங்கள் செய்த மிக மோசமான குற்றம் காதலித்தது.

ஆர்லா : அந்தக் குற்றத்தை உங்கள் உயர்ந்த பண்புக்காக நான் மாற்ற மாட்டேன். உங்களால் நான் மிகவும் சலிப்படைந்திருக்கிறேன்.

ஜேக்குவஸ் : உண்மையைச் சொல்கிறேன். நான் ஒரு முட்டாளைத் தேடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது உங்களைக் கண்டேன்...

ஆர்லா : அவன் ஓடையில் மூழ்கிவிட்டான். ஓடையில் போய்ப் பாருங்கள்; அவனைக் காணலாம்.

ஜேக்குவஸ் : ஓடையில் பார்த்தால் என் உருவம்தானே தெரியும்.

ஆர்லா : அதுதான் முட்டாள்! பூஜ்யம்!

ஜேக்குவஸ் : இனி உங்களோடு நான் தங்க மாட்டேன். வணக்கம். காதல் சின்னமே! வருகிறேன்.

ஆர்லா : நீங்கள் புறப்படுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி. வணக்கம். சோகச் சின்னமே! சென்று வாருங்கள்.

(ஜேக்குவஸ் செல்கிறான்)

ரோச : (சீலியாவிடம் தனியே) நான் அவனிடம் ஒரு காட்டான் மாதிரிப் பேசப் போகிறேன்—ஏ காட்டு ஆசாமி...நான் அழைப்பது கேட்கிறதா?

ஆர்லா : கேட்கிறது...என்ன வேண்டும்?

ரோச : உங்களை வேண்டுகிறேன். இப்பொழுது மணி என்ன?

ஆர்லா : இப்பொழுது என்ன நேரம் என்று கேட்க வேண்டும்? காட்டில் கடிகாரம் கிடையாது.

ரோச : அப்படியானால் காட்டில் உண்மையான காதலர் கிடையாது. இருந்தால் ஒவ்வொரு நிமிடமும் பெரு மூச்சு விட்டு, ஒவ்வொரு மணியும் அது ஊளறலாக வளர்ந்து, சோம்பேறி மணியை அது கடிகாரம் போலக் காட்டும்!

ஆர்லா : அது ஏன் விரைவான மணியாக இருக்கக் கூடாது? நான் சொல்வது சரியாக இல்லையா?

ரோச : இல்லை ஐயா...மணி என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக நகர்கிறது. யாருக்கு அது ஓடு கிறது? யாருக்கு அது பறக்கிறது? யாருக்கு அது நிற்கிறது என்பதைப் பற்றி உங்களுக்கு நான் சொல்கிறேன்.

ஆர்லா : உங்களை வேண்டுகிறேன். யாருக்கு அது நகர்கிறது?

ரோச : ஒரு பெண்ணுக்கு அவள் திருமணம் நிச்சயமான தினத்திலிருந்து திருமணம் நடக்கும் நாள் வரை அது நகர்கிறது. அந்த இடைவேளை ஏழுநாளாக இருப்பின் அது ஏழு ஆண்டாகத் தெரியும்.

ஆர்லா : யாருக்கு அது ஓடுகிறது?

ரோச : இலத்தீன் மொழி தெரியாத பாதிரியார்-வியாதி யில்லாத ஒரு பணக்காரன்-இவர்களுக்கு இடையே மணி ஓடுகிறது. ஏனென்றால் ஒருவர் நன்கு தூங்குவார்; காரணம் அவரால்-படிக்க முடியாது. இன்னொருவர் மகிழ்ச்சியாக இருப்பார்! காரணம் அவருக்கு வலி இராது. உடலை வருத்தும் படிப்பு ஒருவருக்கு இல்லை! மனத்தை வருத்தும் வறுமை இன்னொருவருக்கு இல்லை. எனவே இவர்கள் இருவருக்கும் இடையே மணி ஓடுகிறது.

ஆர்லா : யாருக்கு மணி பறக்கிறது?

ரோச : தூக்கு மேடையை நோக்கிச் செல்லும் குற்ற வாளிக்கு அது பறக்கிறது. அவன் மெதுவாக நடந் தாலும் தூக்கு மேடை விரைந்து வருவதாக அவன் நினைக்கிறான்.

ஆர்லா : யாருக்கு மணி நிற்கிறது?

ரோச : விடுமுறையில் இருக்கும் வழக்கறிஞர்களுக்கு அது நிற்கிறது. ஏனென்றால் அவர்கள் பருவ விடு முறைகளுக்கு இடையிலேதான் தூங்குகிறார்கள். அப்பொழுது அவர்கள் மணி எவ்வாறு நகர்கிறது என்பதை உணர மாட்டார்கள். எனவே விடுமுறை நாளில் மணி நிற்பதாகவே அவர்களுக்குத் தோன்று கிறது.

ஆர்லா : அழகான இளைஞனே! நீ எங்கே வசிக்கிறாய்?

ரோச : எனது சகோதரியாகிய இந்த இடைச்சியுடன் இந்தக் காட்டின் எல்லையில் வசிக்கிறேன்.

ஆர்லா : நீ இந்தப் பகுதியைச் சேர்ந்தவனா?

ரோச : முயல் பிறந்த இடத்தில் வசிப்பது போல நானும் இங்கே வசிக்கிறேன்.

ஆர்லா : உனது உச்சரிப்பு காட்டிலிருப்போரின் உச்சரிப்பை விட உயர்ந்ததாக இருக்கிறது.

ரோச : பலர் அவ்வாறுதான் சொல்கிறார்கள். ஆனால் உண்மையாக எனது மாமா ஒருவர் எனக்குப் பேசக் கற்றுக் கொடுத்தார். அவர் தன் இளமையில் உள் நாட்டில் வசித்திருக்கிறார். அங்கே அவர் காதலில் ஈடுபட்டதால் நாகரீகம் கூடத் தெரியும். காதலுக்கு எதிராக அவர் பலமுறை பேச நான் கேட்டிருக்கிறேன். அவர் பெண் இனத்தைத் திட்டிப் பேசியதைக் கேட்டு வருந்த நான் பெண்ணாகப் பிறவாததால், கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

ஆர்லா : பெண்களுக்கு எதிராக அவர் பேசிய முக்கிய மான குற்றச்சாட்டுகள் யாவை என்று உனக்குத் தெரியுமா?

ரோச : எதுவுமே முக்கியமானதன்று. சில்லறை நாணயம் போல் அது ஒவ்வொன்றும் தனியாக வருகையில் சிறிதே. ஆனால் அடுத்தடுத்து குற்றச்சாட்டுகள் வருகையில் அவை இராட்சச உருவெடுத்தன.

ஆர்லா : உன்னை வேண்டுகிறேன். அவற்றில் சிலவற்றை நினைவுபடுத்திக் கூறு.

ரோச : முடியாது. எனது அந்த மருந்தை நோயாளிகளுக்கு அன்றி வேறு யாருக்கும் வழங்க முடியாது. இந்தக் காட்டில் ஒரு மனிதன் நாடகமாடுகிறான். அவன் எங்களது இளைய மரங்களில் எல்லாம் ''ரோசலிண்ட்'' என்று கிளைதோறும் செதுக்குகிறான். கவிதைகளைத் தொங்க விடுகிறான். ரோசலிண்டின் பெயரைத் தெய்வீகமாக்குகிறான். அவனை நான் சந்தித்தால், அவனுக்கு நல்ல அறிவுரை வழங்க என்னால் முடியும். ஏனென்றால் அவன் காதல் நோயால் வாடுகிறான்.

ஆர்லா : அவ்வாறு காதலால் வாடுபவன் நான்தான். உன்னை வேண்டுகிறேன். எனக்கு உனது மருந்தை வழங்கு.

ரோச : எனது மாமாவால் வர்ணிக்கப்பட்ட காதற்குறிகள் உங்களிடம் எதுவும் இல்லையே. காதலில் ஈடுபட்டுள்ள ஒரு மனிதனை எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது என்பதைப் பற்றி என் மாமா எனக்குச் சொல்லியிருக்கிறார். நீங்கள் காதற் கைதி அல்ல...

ஆர்லா : அவர் சொன்ன அடையாளங்கள் யாவை?

ரோச : மெலிந்த கன்னம், குழிவிழுந்த கண்கள், தணியாத ஆர்வம், வளர்ந்த தாடி, சரியாக அணியாத காலுறை, பொத்தான் போடாத சட்டை, கட்டாத காலணி, இவை எல்லாம் உங்களிடம் இல்லையே...நீங்கள் நன்கு ஆடை அணிந்துள்ளீர்கள். உங்களையே காதலிப்பது போல இருக்கிறீர்கள்...

ஆர்லா : இளைஞனே! நான் காதலிக்கிறேன் என்பதை நீ நம்புமாறு செய்கிறேன்.

ரோச : நம்புகிறேன்! மரங்களில் எல்லாம் கவிதைகளைத் தொங்க விட்டிருப்பது நீங்கள் தானா?

ஆர்லா : ஆம்...அந்தத் துரதிஷ்டசாலி நான்தான்...

ரோச : உங்கள் கவிதைகள் கூறுகின்ற அளவுக்கு நீங்கள் உண்மையிலேயே காதலிக்கிறீர்களா?

ஆர்லா : கவிதையோ அல்லது காரணமோ எனது காதலின் அளவை விளக்க முடியாது.

ரோச : காதல் என்பது ஒரு பைத்தியக்காரத்தனம்! நான் உங்கட்குச் சொல்கிறேன். அதற்கு ஓர் இருட்டறையும் சவுக்கும் தேவை. பைத்தியத்தை அடக்குவதற்குத் தேவைப்படுவதுபோல... ஆனால் காதலை அடக்க ஏன் அவற்றைக் கையாள்வது இல்லை என்றால் பைத்தியம் என்பது சாதாரணம். ஆனால் சவுக்கால் அடிப்பவர்கள் கூடக் காதலிக்கலாம் அல்லவா!... அதனால் காதலைக் குணப்படுத்தச் சவுக்கைக் கையாள்வதில்லை. ஆனால் அறிவுரை மூலம் காதலைக் குணப்படுத்துவேன்.

ஆர்லா : எப்பொழுதாவது அதுபோன்ற காதல் நோயை நீ குணப்படுத்தி உள்ளாயா?

ரோச : ஆம். ஒருவரைக் குணப்படுத்தி உள்ளேன்; இந்த வழியில் அதாவது அவர் என்னைத் தன் காதலியாகக் கற்பனை செய்து கொண்டு நடப்பார். நானும் ஒவ்வொரு நாளும் காதலியாக நடிப்பேன். உணர்ச்சிகளை வெளிப்படுத்துவோம். சிரிப்பேன்! அழுவேன்! நடிப்பேன்; நகைப்பேன்...இவ்வாறு நான் அவரைக் குணப்படுத்தினேன்.

ஆர்லா : இளைஞனே! என்னை நீ குணப்படுத்த முடியாது.

ரோச : நான் உங்களைக் குணப்படுத்த முடியும். ஆனால் நீங்கள் என்னை ரோசலிண்ட் என்று அழைக்க வேண்டும். தினந்தோறும் என் குடிலுக்கு வந்து என்னைக் காதலிக்க வேண்டும்...

ஆர்லா : சரி...என் காதலின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். அவ்வாறே செய்கிறேன். உன் குடில் எங்கே இருக்கிறது?

ரோச : என்னோடு வாருங்கள். அதனைக் காட்டுகிறேன்... அது சரி...நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்? என்னோடு வருகிறீர்களா?

ஆர்லா : மனமார வருகிறேன்...இளைஞனே!

ரோச : இல்லை, என்னை ரோசலிண்ட் என்று அழைக்க வேண்டும். வாருங்கள்...சகோதரி...போகலாமா?

(மூவரும் செல்கின்றனர்)

காட்சி—3

இடம் ; காட்டின் மற்றொரு பகுதி.

[டச்ஸ்டோன், ஆட்ரி ஆகிய இருவரும் முதலில் வருகின்றனர். பிறகு ஜேக்குவஸ் வருகிறார்]

டச்ஸ்டோன் : விரைந்து வா ஆட்ரி! உனது வெள்ளாடுகளை நான் ஓட்டி வருகிறேன். ஆட்ரி; எப்படி ஆட்ரி?

எனது எளிமைப் பண்புகள் உனக்குத் திருப்தி அளிக்கின்றனவா?

ஆட்ரி : உங்கள் பண்புகளா? பண்பு என்றால் என்ன?

டச் : ஓவிட் என்பவன் கோத் என்னும் மக்களுக்கு இடையே நின்றது போல, நான் உனக்கும் உன் வெள்ளாடுகளுக்கும் இடையே ஒரு மாபெரும் கவிஞனாக நிற்கிறேன்.

ஜேக்குவஸ் : (தனியே) ஜோவ் என்னும் கடவுள் குடிசையில் தங்கியது போல, அறிவானது இந்த இடையனிடம் தங்கியிருக்கிறது.

டச் : ஒரு மனிதனின் கவிதைகள் அறிவின்மையால் மக்களால் உணரப்படாதிருப்பது, மோசமான விடுதியில் தங்கியிருப்பவனுக்கு மிகுதியான வாடகை கேட்பதை விடக் கொடுமையாகும்.

ஆட்ரி : கவிதை என்றால் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. அது சொல்லிலும் செயலிலும் நேர்மையானதா? அது உண்மையானதா?

டச் : இல்லை... உண்மையாக... உண்மையான கவிதை என்பது உயர்ந்த நடிப்பாகும். காதலர்கள் கவிதை எழுதும் பழக்கம் உடையவர்கள். அவர்கள் கவிதையில் சத்தியம் செய்தால் அந்தச் சத்தியம்கூட நடிப்பே ஆகும்.

ஆட்ரி : அப்படியானால் கடவுள் என்னைக் கவித்துவமாகப் படைத்திருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

டச் : ஆம், நீ நேர்மையானவள் என்று சத்தியம் செய்கிறாய். நீ ஒரு கவிஞராக இருந்தால் நீ நடிப்பதாக நான் நம்புவேன்.

ஆட்ரி : நீங்கள் என்னை நேர்மையானவள் என்று நம்ப முடியாதா?

ஜேக்குவஸ் : (தனியே) காரியவாதியான முட்டாள்!

ஆட்ரி : சரி...நான் அழகில்லை. ஆகவே கடவுள் என்னை நேர்மையானவளாகப் படைக்க வேண்டும்.

டச் : ஆம். நேர்மையை அழகற்ற ஒருத்தியிடம் வைப்பது சுவையான மாமிசத்தை ஒரு ஆபாசமான பாத்திரத்தில் வைப்பதற்கு ஒப்பாகும்.

ஆட்ரி : நான் அழகற்றவள்! அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன். ஆனால் நான் ஆபாசமானவள் அல்ல.

டச் : நல்லது, உனது அழகின்மைக்குக் கடவுள் புகழப் படட்டும். ஆபாசத்தன்மை இனிமேல் வரலாம். அது அதன் தன்மைப்படியே இருக்கட்டும். நான் உன்னை மணந்து கொள்கிறேன். அதற்காக நான் அடுத்த கிராமத்திலுள்ள ஆலிவர் மார்ட்டெக்ஸ்ட் என்னும்

பாதிரியாரைச் சந்தித்தேன். அவர் நம் திருமணத்தை நடத்துவதற்காக இங்கே வந்து என்னைச் சந்திப்பதாக உறுதி கூறியிருக்கிறார்.

ஜேக்குவஸ் : (தனியே) இந்த சந்திப்பைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைவேன்.

ஆட்ரி : நல்லது, கடவுள் நமக்கு மகிழ்ச்சி அளிக்கட்டும்!

டச் : அப்படியே ஆகுக! ஒரு மனிதன் கோழையாக இருந்தால் அவன் இந்த முயற்சியில் தயங்குவான். ஏனெனில் நமக்கு இங்கே காட்டைத் தவிரக் கோயில் இல்லை. மான்களைத் தவிர மனிதர்கள் இல்லை. என்ன? துணிவு கொள். மான்கள் வெறுக்கத்தக்கனவாக இருந்தாலும், அவை தேவைதான். பலர் தம்மிடம் கணக்கறியாச் செல்வம் குவித்து வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. சரி...பலர் தம்மிடம் கணக்கறியாக் கொம்புகள் பெற்றிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அது அவர் தம் மனைவியரால் வந்த சீதனப் பொருளாகும் (மனைவியர் கற்பில்லாவிட்டால் கணவருக்குக் கொம்பு முளைக்கும் என்று முன்பு நம்பினர்) அது அவர் தம் சொந்தப் பொருள் அன்று. கொம்புகள்?... அதுவும் தான். அது ஏழைகளுக்கு மட்டும்தானா? இல்லை. அது செல்வர்களுக்கும் உண்டு. அப்படியானால் பிரமச்சாரி பேறுபெற்றவனா? இல்லை. நகரமானது எப்படி ஒரு தனிக்கிராமத்தைவிடச் சிறந்ததோ, அதைப்

போலக் கொம்புடைய இல்லற மனிதன் கொம்பற்ற தனி மனிதனைவிடச் சிறந்தவன் ஆவான். தற்பாது காப்பு எப்படித் திறமை இன்மையைவிடச் சிறந்ததோ அதைப்போலக் கொம்புடைமை ஆனது இன்மையை விடச் சிறந்ததாகும்...அதோ...அதோ ஆலிவர் பாதிரி யார் வருகிறார்...(சர் ஆலிவர் மார்ட் டெக்ஸ்ட் பாதிரி யார் வருகிறார்) பாதிரியார் அவர்களே! சரியாகச் சந்தித்தீர்கள். எங்களுக்கு இந்த மரத்தின் கீழ்த் திருமணம் நடத்தி வைக்கிறீர்களா? அல்லது உங்கள் ஆலயத்திற்கு நாங்களும் வரவேண்டுமா?

சர் ஆலிவர் : இங்கே பெண்ணைக் கன்னிகாதானம் செய்ய யாரும் இல்லையா?

டச் : அவளைத் தானமாக நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

சர் ஆலிவர் : அவளைத் தானமாக யாராவது கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் திருமணம் சட்டப்படி செல்லாது.

ஜேக்குவஸ் : (முன்னால் வந்து)...தொடருங்கள்...காரியம் தொடரட்டும்...நான் அவளைக் கொடுக்கிறேன்,

டச் : நல்ல ஐயா! இங்கே எப்படி வந்தீர்கள்? நல்ல சமயத் தில் வந்தீர்கள். உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி.

ஜேக்குவஸ் : நீங்கள் திருமணம் செய்து கொள்ளப் போகிறீர்களா?

டச் : காளைக்கு நுகத்தடிபோல, குதிரைக்குக் கடிவாளம் போல, இராசாளிப் பறவைக்கு மணிபோல, மனிதனுக்கு ஆசை உள்ளது.

ஜேக்குவஸ் : நாகரிகமாக வளர்ந்த நீ இப்படி ஒரு பிச்சைக்காரனைப் போலத் திருமணம் புரிவதா? ஆலயத்திற்குச் செல்; திருமணம் என்றால் என்ன என்பதை விளக்கக் கூடிய பாதிரியைப் பார். இந்த ஆள் ஒரு பாதிரியாரே அல்ல. இவர் பலகைகளைச் சேர்ப்பதுபோல உங்களைச் சேர்ப்பார். அவ்வளவுதான். அப்பொழுது உங்களில் ஒருவர் சுருங்கிய பலகை ஆவீர்கள். பிறகு பச்சை மரம் போலப் பிளப்பீர்கள்.

டச் : (தனியே) நான் அதைப்பற்றி நினைக்கவில்லை. ஆனால் வேறொருவர் மூலம் அன்றி இவர் மூலமே திருமணம் செய்து கொள்வதுதான் நல்லது. ஏனென்றால் இவர் எனக்கு நல்லவிதமாகத் திருமணம் செய்விக்கப் போவதில்லை. அதனால் என் மனைவியை நான் பிறகு விட்டு ஓட சுலபமான காரணம் கிடைத்தது போலாகும்.

ஜேக்குவஸ் : என்னுடன் வா...உனக்கு ஆலோசனைகள் கூறுகிறேன்.

டச் : வா...இனிய ஆட்ரி!...நாம் திருமணம் செய்து கொள்ள வேண்டும். வணக்கம்! இனிய ஐயா!

ஆலிவர்!...நீங்கள் செல்லலாம்...உங்களால் எங்கள் திருமணம் நடக்க வேண்டியதில்லை...நீங்கள் செல்லலாம்... (ஜேக்குவஸ், டச்ஸ்டோன், ஆட்ரி ஆகிய மூவரும் செல்கின்றனர்.)

சர் ஆலிவர் : அதைப்பற்றிக் கவலையில்லை. மிக மட்டமான மனிதன்கூடத் தனது கேள்வியால் எனது தொழிலைத் தொலைத்துவிட முடியாது.

[செல்கிறார்]

காட்சி—4

இடம் : காட்டின் மற்றொரு பகுதி. ஒரு குடிசைக்கு முன்னால்.

(ரோசலிண்ட், சீலியா ஆகிய இருவரும் வருகின்றனர்.)

ரோசலிண்ட் : இனி என்னிடம் பேசாதே. நான் அழுவேன்.

சீலியா : அழு...உன்னை வேண்டுகிறேன்...ஆனால் அழுவது என்பது ஆண்மையல்ல.

ரோச : ஆனால் அழுவதற்கு ஏற்ற காரணம் எனக்கு இல்லையா?

சீலியா : இருக்கிறது...எனவே அழு.

ரோச : அவரது தலைமயிர் நிறமே மாறியிருக்கிறது.

சீலியா : ஜூடாஸ் என்பவரின் நிறத்தைவிடச் செம் பட்டையாக இருக்கிறது. அவரது முத்தங்கள் ஜூடா சின் (ஏசுவைக் காட்டிக் கொடுத்த துரோகியின்) முத்தங்கள் போன்றவை.

ரோச : இல்லை. அவரது தலைமயிர் நிறம்...நல்ல நிறமாக இருக்கிறது.

சீலியா : அருமையான நிறமாக இருக்கிறது.

ரோச : அவரது முத்தமும் புனித ரொட்டியைப் போலப் புனிதமானது.

சீலியா : காதல் தெய்வமான டயானாவின் உதடுகள் போன்ற இதழ்களை அவர் விலைக்கு வாங்கியிருக் கிறார். சந்நியாசினிகூட அவ்வாறு புனிதமாக முத்த மிட மாட்டாள். கற்பின் குளிர்ச்சி அதில் இருக்கிறது.

ரோச : ஆனால் அவர் இன்று காலை இங்கு வருவதாகச் சொன்னவர் ஏன் இன்னும் வரவில்லை?

சீலியா : இல்லை, உறுதியாக அவர் வார்த்தையில் உண்மை இல்லை.

ரோச : அப்படியா நீ நினைக்கிறாய்?

சீலியா : ஆம், அவர் ஒரு பணப்பைத் திருடரோ, அல்லது குதிரைத் திருடரோஅல்ல. ஆனால் காதலைப் பொறுத்த வரை அவரது வார்த்தைகள் பொருளற்றவை! புழு தின்ற பழம் போன்றவை.

ரோசா : காதலில் உண்மையானவர் இல்லையா!

சீலியா : ஆம். அவர் காதலாக இருக்கும் பொழுது உண்மையானவர்; ஆனால் இப்பொழுது அவர் காதலாக இல்லை என நினைக்கிறேன்.

ரோச : ஆனால் அவர் காதலிப்பதாக உறுதியான மொழிகளால் சத்தியம் செய்ததை நீ கேட்டாயே!

சீலியா : கேட்டேன். அது இறந்த காலம். ஆனால் இப்பொழுது அல்லவே...மேலும் ஒரு காதலனின் சத்தியம் ஒரு குடிகாரனின் சத்தியத்தைவிடப் பலம் வாய்ந்ததன்று இருவரும் பொய்ச் சத்தியம் செய்யத் தயார்...அது உன் தந்தையாகிய பேரரசருக்குத் துணையாக இருக்கிறார்.

ரோச : நான் பேரரசரை நேற்றுச் சந்தித்துப் பல வினாக்கள் கேட்டேன். அவர் என்னை "உன்னைப் பெற்றவர் யார்?" என்று கேட்டார். அதற்கு நான் "உங்களைப் போன்று நல்லவரே" என்று கூறினேன். அவர் சிரித்து மகிழ்ந்து என்னைப் போகவிட்டார். ஆனால் தந்தையாரைப் பற்றிப் பேசி இனி என்ன பயன்? ஆர்லாண்டோவைப் போன்ற காதலன் இருக்கும் பொழுது...

சீலியா : அவர் ஒரு சிறந்த வீரர்! அவர் இனிய கவிதைகளை எழுதுகிறார். வீரவார்த்தைகளைப் பேசுகிறார். வீரமாக அவற்றைத் தகர்க்கிறார். காதலில் மோதி உடைகிறார். திறமை அற்ற ஈட்டி வீரன்போல் முறைதவறி மோதுகிறார். ஆனால் இளமை தவழ்

கிறது; குற்றம் ஒளிர்கிறது... அதோ... யார் வருகிறது?

(கோரின் வருகிறான்)

கோரின் : அம்மா! ஐயா! நீங்கள் அடிக்கடி அந்த இடையனின் (சில்வியஸ்) காதற்புகாரைப் பற்றி வினவியிருக்கிறீர்கள் அல்லவா? அந்த இடைச்சி அவனது காதலை மதிக்கவில்லை.

சீலியா : அவனுக்கு என்ன இப்பொழுது?

கோரின் : அந்தக் காட்சியை இப்பொழுது நீங்கள் காண விரும்பினால் என்னோடு வாருங்கள்... காட்டுகிறேன்.

ரோச : அப்படியா... வா... நாம் போவோம்... காதற் காட்சி காதலால் நலிபவர்களுக்கு நல்ல உணவாகும். எங்களை அங்கு அழைத்துச்செல். அவர்கள் நாடகத்தில் நான் ஒரு முக்கிய பங்கு ஏற்கப் போகிறேன்.

(போகின்றனர்)

காட்சி—5

இடம் : காட்டின் மற்றொரு பகுதி.

(சில்வியஸ், பீபி ஆகிய இருவரும் வருகின்றனர்)

சில்வியஸ் : இனிய பீபி! என்னைத் திட்டாதே. திட்டாதே. பீபி! நீ என்னை நேசிக்கவில்லை என்று சொல்,

பரவாயில்லை. ஆனால் அதனை வெறுப்பாகச் சொல்லாதே. குற்றவாளிகளைத் தூக்கில் போடும் சண்டாளன்கூட முதலில் அவர்களது மன்னிப்பைக் கேட்டு, அதன் பிறகே கொலைத் தண்டனையை நிறைவேற்றுகிறான். இரத்தம் சிந்தும் அந்தத் தொழிலாளியைவிட நீ கொடுமை நிறைந்தவளா? இரக்கம் அற்றவளா? (ரோசலிண்ட், சீலியா, கோரின் ஆகிய மூவரும் பின்புறமாக வருகின்றனர்.)

பீபி : நான் உங்களது சண்டாளியாக இருக்க மாட்டேன். நான் ஓடுகிறேன்; அப்பொழுது உங்களை நான் புண் படுத்த மாட்டேன் அல்லவா. என் கண்கள் கொல்வதாக நீங்கள் கூறுகிறீர்கள். சிறு தூசிக்கும் இமைகளை மூடக் கூடிய மெல்லிய கண்களைக் கொடுமையானவை என்றும், கொலை செய்பவை என்றும் கூறுகிறீர்கள். நான் இப்பொழுது உங்கள்மீது மனமாரப் பாய்கிறேன். அப்பொழுது என் கண்கள் உங்களைக் காயப்படுத்து மானால் அவை உங்களைக் கொல்லட்டும்... மயக்கம் போடுவதைப் போல் நடியுங்கள்... ஏன் இப்பொழுது கீழே விழுங்கள். முடியாவிட்டால், வெட்கம்! வெட்கம். என் கண்கள் சொல்கின்றன என்று பொய் கூறாதீர்கள். என் கண்கள் உங்கள் மேல் ஏற்படுத்தியுள்ள காயத்தைக் காட்டுங்கள். குண்டூசியால் கீறினால் கூடத் தழும்பு ஏற்படும். முட்செடியில் கைவைத்தால் கூடக் குத்திய தழும்பு கொஞ்ச நேரம் இருக்கும். ஆனால் நான் இப்பொழுது உங்கள்மீது ஏவியுள்ள என் பார்வை உங்களைக் காயப்படுத்தாது. மேலும் புண்படுத்தும் ஆற்றல் கண்களுக்கு இல்லை என்பது உறுதி!

சில்வியஸ் : ஓ! பீபி! நீ எப்பொழுதாவது, யாரையாவது காதலித்தால் அப்பொழுது காதல் என்னும் அம்பினால் ஏற்படும் கண்ணுக்குத் தெரியாத காயத்தை நீ உணருவாய்.

பீபி : அதுவரை நீங்கள் என் அருகில் வராதீர்கள். அந்த நேரம் வரும்பொழுது நீங்கள் எனக்காக இரக்கப்பட வேண்டாம். கேலி செய்யுங்கள். அதுவரை நானும் உங்களுக்காக இரக்கப்படப் போவதில்லை.

ரோச : (முன்னால் வந்து) என்ன போராட்டம்? (பீபியிடம்) உன்னைக் கேட்கிறேன். பாவம். இந்த ஏழை மனிதனைப் புண்படுத்தும் நீ எந்த அழகியின் மகள்? உன்னிடம் அழகில்லை என்பதற்காக ஆணவமும் அரக்கத் தன்மையும் உள்ளனவா? (பீபி ரோசலிண்ட் மீது காதல் கொண்டு உற்று நோக்குகிறாள்) இதற்கு என்ன அர்த்தம்? ஏன் என்னை இவ்வாறு பார்க்கிறாய்? உன்னிடத்தில் இயற்கையின் சேட்டையை உணர்கிறேன். கடவுளே! என் கண்களையும் நீ அழகெனும் வலையில் வீழ்த்துகிறாய். நம்பாதே. ஆணவப் பெண்ணே! அதனை நம்பாதே. உனது கரிய புருவமும், கருங்கூந்தலும், நீலக் கண்களும், அமுதக் கன்னமும் என்னை வீழ்த்தி உன்னை வணங்கச் செய்ய மாட்டா. (சில்வியசிடம்) ஏ முட்டாள் இடையனே; எதற்காக இவளைப் பின் தொடருகிறாய்? ஏன் அழுது பெருமூச்சு

விடுகிறாய்? இந்தச் சாதாரணப் பெண்ணைவிட நீ ஆயிரம் மடங்கு ஆற்றல் நிறைந்த மனிதன்! உன்னைப் போன்ற முட்டாள்கள்தான் இந்த உலகத்தில் அழகற்ற குழந்தைகளைப் படைக்கிறார்கள். அவளல்ல; நீதான் அவளை வீணாகப் புகழ்கிறாய். அதனால் அவள் தன் வரம்புமீறித் தன்னைப் பேரழகியாகக் கற்பனை செய்து கொள்கிறாள். (பீபியிடம்) ஆனால், பெண்ணே! உன்னை நன்றாக உணர்ந்து கொள். நல்ல ஒரு மனிதனின் காதல் கிடைத்ததற்காக மண்டியிட்டுக் கடவுளுக்கு நன்றி செலுத்து. உன் காதில் நம் அன்பின் பொருட்டு ஓர் இரகசியம் சொல்ல விரும்புகிறேன். அவன் விருப்பப்படி திருமணத்துக்கு உடன்படு. இல்லா விட்டால் உனக்கு வேறு வாய்ப்பே கிடைக்காது. அவனிடம் மன்றாடு; அவனை நேசி. அவனுக்குத் தலையசை. பரிகாசம் செய்யும்பொழுது அழகின்மை மிகப் பெரிய ஆபாசமாகும்! (சில்வியசிடம்) ஆகவே, இடையனே! இவளை உன்னுடன் அழைத்துச் செல். வாழ்த்துக்கள்!

பீபி : (ரோசலிண்டிடம் காதல் கொண்டு பேசுகிறாள்) இனிய இளைஞனே! உங்களை மன்றாடுகிறேன். ஆண்டு முழுதும் தொடர்ந்து என்னைத் திட்டுங்கள். உங்கள் வசவு இந்த இடையனின் காதல் மொழிகளைவிட இனிக்கிறது.

ரோச : அவன் உன் ஆணவத்தைக் காதலிக்கிறான். நீ என் கோபத்தைக் காதலிக்கிறாய். அப்படியானால் அவனை நீ வெறுப்போடு பார்க்கவும், நான் உன்னிடம் கசப்

பாகப் பேசவும், முயலுவோம். ஏன் என்னை அப்படிப் பார்க்கிறாய்?

பீபி : நான் உங்களைக் காதலிக்கிறேன்.

ரோச : உன்னை வேண்டிக் கொள்கிறேன். என்னைக் காதலிக்காதே. குடித்தவன் பேசும் சபதத்தைவிட நான் பொய்யானவன். மேலும் நான் உன்னை விரும்ப வில்லை. எனது வீட்டை நீ அறிய விரும்பினால்... பக்கத்தில் இருக்கும் ஆலிவ் மரத்தோப்பின் அருகில் இருக்கிறது. (சீலியாவிடம்) சகோதரி போகலாமா? இடையனே! இவளை நன்றாகக் காதலி! (சீலியா விடம்) சகோதரி... வா... (பீபியிடம்) பெண்ணே! இவனை அன்பாகக் கவனி... ஆணவம் கொள்ளாதே. இந்த உலகமே உன்னைக் கவனித்தாலும் இவனைத் தவிர வேறு யாரும் உன்னை அழகி என்று எண்ணி ஏமாறமாட்டார்கள். வா... போகலாம். (ரோசலிண்ட், சீலியா, கோரின் மூவரும் போகின்றனர்.)

பீபி : ''கண்டதும் காதல்'' என்ற பழமொழி உண்மை யானதை இப்பொழுது நான் கண்டேன்.

சில்வியஸ் : இனிய பீபி.

பீபி : ம்... என்ன சொல்கிறீர்கள் சில்வியஸ்.

சில்வியஸ் : அன்பே! பீபி! என் மீது கருணை காட்டு.

பீபி : உங்களுக்காக நான் வருத்தப்படுகிறேன்.

சில்வியஸ் : எங்கெல்லாம் வருத்தம் இருக்கிறதோ அங்கெல்லாம் மருந்தும் உண்டு. நீ என் துயர் கண்டு

அன்பால் வருந்தினால், உன் அன்பினாலேயே என் துயரமும், உன் வருத்தமும் நீங்கி விடுமே.

பீபி : உங்களுக்கு என் அன்பு உண்டு போதுமா?

சில்வியஸ் : நான் உன்னையே அடைய விரும்புகிறேன்.

பீபி : அது பேராசை ஆகும். சில்வியஸ்! உங்களை ஒரு காலத்தில் நான் வெறுத்தேன். அதற்காக இப்பொழுது உங்களைக் காதலிக்கத் தொடங்கி விட்டேன் என்று எண்ண வேண்டாம். உங்களுக்குக் காதலைப்பற்றி நன்றாகப் பேசத் தெரியாததால், சற்று முன்புவரை வெறுத்த உங்கள் தொடர்பைப் பொறுத்துக் கொள்கிறேன். உங்களுக்கு ஒரு வேலையும் கொடுக்க விரும்புகிறேன். ஆனால் அதற்காக என்னிடம் நீங்கள் வேறு எதையும் எதிர்பார்க்கக் கூடாது. எனக்குச் சேவை செய்த திருப்தி மட்டும் உங்களுக்கு உண்டு.

சில்வியஸ் : என் காதல் புனிதமானதும் முழுமையானதும் ஆகும். உன் அன்பென்னும் அறுவடையின் பெரும் பகுதியில் சிறுபகுதி எனக்குக் கிடைத்துள்ளது...பரவாயில்லை...இடையிடையே உன் புன்னகையை உதிர்! அதனைக் கொண்ட நான் உயிர் வாழ்கிறேன்.

பீபி : சற்றுமுன் என்னிடம் பேசிய அந்த இளைஞனை உங்களுக்குத் தெரியுமா?

சில்வியஸ் : நன்றாகத் தெரியாது. ஆனால் அவனை அடிக்கடி சந்தித்திருக்கிறேன். அவன் அந்தக் கிழக் குடியானவனின் குடிசையையும், மந்தையையும் விலைக்கு வாங்கியிருக்கிறான்.

பீபி : நான் அவனைப் பற்றிக் கேட்பதற்காக அவனைக் காதலிக்கிறேன் என்ற நினைக்காதீர்கள். அவன் ஒரு சிறு பையன்! ஆனாலும் நன்றாகப் பேசுகிறான். அதற்காக யார் அவன் வார்த்தையைப் பொருட்படுத்து கிறார்கள்! இருந்தாலும் அவன் பேசும் பொழுது கேட்போரை அது கவர்கிறது. அவன் ஓர் அழகான இளைஞன். அதற்காகப் பேரழகன் இல்லை. ஆனால் அவன் ஆணவம் பிடித்தவன். ஆனால் அதுவும் அவனுக்கு அழகாகத்தான் இருக்கிறது. பருவத்தில் அவன் அழகனாய் வளர்வான். அவனுக்கு அழகூட்டுவது அவனது நிறமே. அவனது நாக்கால் காயம் ஏற்படும் முன்னே அவனது கண்கள் விரைந்து குணப்படுத்து கின்றன. அவன் மிக உயரமல்ல. ஆனாலும் அவனது வயதுக்கேற்ற உயரம்! அவனது கால்களும் அவ்வாறே... ஆனாலும் அழகாக இருக்கின்றன. அவனது இதழ்கள் சிவந்து எழில் கூட்டுகின்றன. அவனது கன்னச் சிவப்பைவிட இதழ்ச் சிவப்பு மிகுதி! கன்னமோ வெண் சிவப்பு, இதழோ ஒளிச்சிவப்பு! வேறு எந்தப் பெண்ணே னும் அவனை என்னைப் போல் சந்தித்திருந்தால் அவள் இந்நேரம் அவனைக் காதலித்திருப்பாள். ஆனால் என்னைப் பொறுத்தவரை நான் அவனைக் காதலிக்க வும் இல்லை! வெறுக்கவும் இல்லை. ஆனால் அவனைக்

காதலிப்பதைவிட வெறுக்கத் தகுந்த காரணம் எனக்கு இருக்கிறது. அவன் என்னைத் திட்ட என்ன உரிமை அவனுக்கு இருந்தது? அவன் என் கண்கள் கருப்பு என்றும், கூந்தல் கருப்பு என்றும் என்னைத்திட்டினான். அது எனக்கு நினைவுக்கு வருகிறது. அவனைப் பதிலுக்குத் திட்டாததற்காக நான் ஆச்சரியப்படுகிறேன். பரவாயில்லை. விடுபட்டது எல்லாம் விலக்கப் பட்டதாக அர்த்தமில்லை. அவன்மீது வசைமாரி பொழிந்து ஒரு கடிதம் வரையப்போகிறேன். நீங்கள் அதை எடுத்துச் செல்கிறீர்களா என்ன? எடுத்துச் செல்கிறீர்களா...? சில்வியஸ்!

சில்வியஸ் : பீபி! மனமார எடுத்துச் செல்கிறேன்.

பீபி : உடனே அதனை எழுதுகிறேன். கருத்து என் மூளையிலும் இதயத்திலும் உள்ளது. அவனை வெறுத்துச் சுடுமொழி எழுதுகிறேன்...வாருங்கள் சில்வியஸ்! (இருவரும் செல்கின்றனர்)

களம் 4 காட்சி—1

(ரோசலிண்ட், சீலியா, ஜேக்குவஸ் ஆகியோர் வருகின்றனர்)

ஜேக்குவஸ் : உன்னை வேண்டுகிறேன்; எழில் மிக்க இளைஞனே! உன்னோடு நான் நெருங்கிய தொடர்பு கொள்ள விழைகிறேன்.

ரோச : நீங்கள் ஒரு கவலைமிக்க மனிதன் என்று எல்லோரும் கூறுகிறார்களே.

ஜேக்குவஸ் : ஆம் அப்படித்தான். சிரிப்பதைவிட அதனை நான் மிகவும் விரும்புகிறேன்.

ரோச : இந்த இரு உணர்ச்சிகளின் எல்லையில் இருப்பவர்கள் வெறுக்கத்தக்கவர்கள். அவர்கள் குடிகாரர்களை விடப் பொது இடங்களில் விமரிசனத்துக்கு உள்ளாகிறார்கள்.

ஜேக்குவஸ் : ஏன்? வருத்தமாக இருந்து மவுனம் காப்பது நல்லதல்லவா?

ஜேக்குவஸ் : தன்னைவிட வேறொருவன் பேரறிஞனாக ஆகிவிடக் கூடாதே என்று கவலை கொள்ளும் அறிஞனின் கவலையோ, தன்னைவிடப் பிறன் கனிவு பெறக் கூடாது என்று முயலும் பாடகனின் கவலையோ, பிறரைவிட மேலானவராக இருக்க முயலும் அரசவை அதிகாரியின் கவலையோ, பேராசையால் தோற்ற போர் வீரனின் கவலையோ, சட்டத்தைப் புரட்டுபவன் போல் நடிக்கும் வழக்கறிஞனின் கவலையோ, பிறரைக் கவரும் பெண்ணின் கவலையோ, இவை அனைத்தும் கலந்த காதலரின் கவலையோ எனக்கு இல்லை. ஆனால் எனது கவலை எனக்கே உரியதாகும். பலவற்றிலிருந்து பிழிந்து தனித்தனிக் காரணங்களாகக் கலந்து பயணங்களால் வளர்ந்து என்னை ஆட்கொண்டிருப்பதே எனது கவலை.

ரோச : பயணியா? அப்படியானால் நீங்கள் கவலைப்படத் தக்க காரணம் இருக்கிறது. நீங்கள் வேற்று

நிலத்தைக் காண்பதற்காக நிலத்தை விற்றிருப்பீர்கள் என்று அஞ்சுகிறேன். அப்படியானால் அவ்வளவு மிகுதியாகப் பார்வையிட்டு ஒன்றுமில்லாமல் இருப்பது, ஞானக்கண்கள் பெற்று வெற்றுக் கைகளைப் பெற்றிருப்பதற்குச் சமமாகும்.

ஜேக்குவஸ் : ஆம்...நான் எனக்கு உரிய அனுபவத்தைப் பெற்றிருக்கிறேன்.

ரோச : உங்கள் அனுபவம் உங்களைக் கவலையில் ஆழ்த்துகிறது. ஆனால் நானாக இருந்தால் எனக்கு கவலையூட்ட அனுபவத்தைப் பெறுவதைவிட, களிப்பூட்ட ஒரு கோமாளியைப் பெறுவேன்...அதற்காகப் பிரயாணம் வேறா? (ஆர்லாண்டோ வருகிறான்)

ஆர்லாண்டோ : அன்பான ரோசலிண்ட்! நல்வாழ்த்துக்கள்!

ஜேக்குவஸ் : வணக்கம்! கடவுள் காப்பாராக! நீங்கள் வசன கவிதையில் பேசுங்கள். நான் வருகிறேன்.

(ஜேக்குவசை நோக்கி)

ரோச : நல்லது. பயணப் பிரபுவே! கவனியுங்கள்... நீங்கள் மழலை மொழியும், வியப்பான உடையும் கொண்டுள்ளீர்கள். தாய்நாட்டின் தன்மைகளைக் கேலி செய்கிறீர்கள். தாயகப் பற்றில்லை. இந்த இனத் தோற்றம் தந்தமைக்காக இறைவனைப் பழிக்கிறீர்கள்.

இவ்வாறெல்லாம் இல்லாவிட்டால் நீங்கள் வெனிஸ் நகரம் சென்று இயற்கை அழகை ரசித்திருப்பீர்கள் என்று நான் நம்ப மாட்டேன்...(ஆர்லாண்டோவை நோக்கி) வாருங்கள். வாருங்கள் ஆர்லாண்டோ!... இவ்வளவு நேரமாக நீங்கள் எங்கு சென்றிருந்தீர்கள்? நீங்கள் ஒரு காதலர்! இது போன்று தாமதமாக வரும் குற்றத்தை இனி ஒருமுறை நீங்கள் செய்தால், இனி என் முன் வராதீர்கள்?

ஆர்லாண்டோ : அழகே! ரோசலிண்ட்! நான் குறிப்பிட்டதைவிட ஒரு மணி நேரத்திற்குள் வந்து விட்டேன் அல்லவா?

ரோச : காதலில் ஒரு மணி நேரம் கடப்பதா? ஒரு நிமிடத்தை ஆயிரத்தில் ஒரு பகுதியாகப் பிரித்து, அதில் ஒரு பகுதியை மேலும் ஆயிரத்தில் ஒரு பகுதியாகப் பிரித்து, அந்தச் சிறுபகுதி நேரம்கூட ஒருவன் காதலில் பிசகினால் காதல் தெய்வம் அவன் கழுத்தில் அறையும். ஆனால் நான் அவன் காதலே பொய் என்பேன்.

ஆர்லா : என்னை மன்னித்துவிடு ரோசலிண்ட்!

ரோச : முடியாது...தளர்நடையிட்டு வருகிறீர்கள். இனி என் கண்முன் வராதீர்கள். உங்களுக்குப் பதில் ஒரு நத்தையால் காதலிக்கப்படுவது நல்லது.

ஆர்லா : நத்தையா?

ரோச : ஆம். நத்தைதான்! அது தாமதமாக வந்தாலும் அது தன் வீட்டைத் தன் தலைமீது தூக்கி வருகிறது. அது ஒரு பெண்ணுக்கு நல்ல சொத்தல்லவா?

ஆர்லா : என் ரோசலிண்ட் மிகவும் பண்பானவள்.

ரோச : நான்தான் உங்கள் ரோசலிண்ட்!

சிலியா : உன்னை அவ்வாறு அழைப்பது அவருக்குப் பிடிக்கிறது. ஆனால் அவர் உன்னைவிட அழகான ஒரு ரோசலிண்டைப் பெற்றிருக்கிறார்.

ரோச : வாருங்கள்... காதலியுங்கள்... எனக்கு இன்று விடுமுறை...நான் உங்கள் ரோசலிண்ட்! இன்று நீங்கள் எனக்கு என்ன வார்த்தைகள் வழங்குவீர்கள்?

ஆர்லா : நான் பேசும் முன் முத்தம் வழங்குவேன்.

ரோச : இல்லை. முதலில் பேசுங்கள். செய்தி குறையும் பொழுது முத்தமிட முயலுங்கள்; பெரிய பேச்சாளர்கள் எல்லாம் பேசத்தக்க பொருள் இல்லாத பொழுது உமிழ் நீரைத் துப்புவார்கள். காதலர்கள் பேசத்தக்க செய்தி குறைந்த பொழுது முத்தமிடுவார்கள்.

ஆர்லா : முத்தம் மறுக்கப் பட்டால்...?

ரோச : அப்பொழுது அவள் உங்களை முத்தத்திற்காக மன்றாட வைக்கிறாள். அப்பொழுது ஒரு புதிய செய்தி தொடங்குகிறது.

ஆர்லா : தன் காதலிக்கு முன் நிற்கும் பொழுது எவனாவது பேசப் பொருளின்றித் தடைப்படுவானா?

ரோச : அதைத்தான் நீங்கள் இப்பொழுது செய்ய வேண்டும்.

ஆர்லா : அப்படியானால் என் காதலி?

ரோச : நான் உங்கள் ரோசலிண்ட் இல்லையா?

ஆர்லா : நீதான் ரோசலிண்ட் என்று சொல்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஏனென்றால் அவளைப் பற்றிப் பேசுகிறேன் அல்லவா?

ரோச : நல்லது...அவள் பெயரால் சொல்கிறேன்...உங்களை நான் ஏற்க மாட்டேன்.

ஆர்லா : அப்படியானால் நான் சாகிறேன்.

ரோச : இல்லை. வேறு பெயரால் சாவுங்கள். இந்த ஏழை உலகம் ஆறாயிரம் ஆண்டு வயதுடையது. இதுவரை எந்த ஒரு மனிதனும் தன் காதலின் பொருட்டுத் தன் பெயரால் செத்ததில்லை. டிராய்லஸ் என்னும் காதலன் கிரேக்கனான அக்கிலிசின்ஈட்டிகளால்கொல்லப் பட்டான். அவன் ஒரு காதல் சின்னம்! லீண்டர் பல்லாண்டுகள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவன் தன் காதலியான ஹீரோவைச் சந்திக்க நள்ளிருளில் ஹெஸ்லபாண்ட் என்னும் நீரோட்டத்தைக் கடந்து சென்றதால் அதில் மூழ்கி இறந்தான். அவன் சாவுக்குக் காரணம் ஹீரோதான் என்று அக்கால முட்டாள் சரித்திராசிரியர்கள் சொன்னார்கள். ஆனால் இவை

எல்லாம் பொய். மனிதர்கள் காலத்திற்குக் காலம் செத்திருக்கிறார்கள். புழுக்கள் அவர்களைத் தின்றிருக்கின்றன. ஆனால் அவர்கள் காதலுக்காகச் சாகவில்லை.

ஆர்லா : ஆனால் எனது ரோசலிண்ட் இத்தகைய மனநிலை உடையவள் அல்லள். அவளது முகச் சுளிப்பே என்னைக் கொன்றுவிடும்.

ரோச : இந்தக் கை ஒரு ஈயையும் கொல்லாது. ஆனால் வாருங்கள்...இப்பொழுது நான் உங்கள் ரோசலிண்ட்! உங்களுக்கு என்ன வேண்டும்? கேளுங்கள், தருகிறேன்.

ஆர்லா : அப்படியானால் என்னைக் காதலி ரோசலிண்ட்.

ரோச : சரி...காதலிக்கவா? நானா? வெள்ளிக்கிழமை சனிக்கிழமை மட்டுமா? எல்லா நாளுமா? சரி காதலிக்கிறேன்.

ஆர்லா : என்னை ஏற்றுக் கொள்வாயா?

ரோச : அதுபோல் இருபதை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆர்லா : ஆ! என்ன சொன்னாய்?

ரோச : நீங்கள் நல்லவர் இல்லையா?

ஆர்லா : நல்லவன் தான்.

ரோச : நன்மையில் இருபது மடங்கை விரும்பக் கூடாதா? (சீலியாவிடம்) ... வா... சகோதரி... நீதான் பாதிரி

யார் எங்களுக்குத்திருமணம் செய்துவை ஆர்லாண்டோ உங்கள் கையை நீட்டுங்கள். (சீலியாவிடம்) சகோதரி என்ன சொல்கிறாய்?

ஆர்லா : (சீலியாவிடம்) உன்னை வேண்டுகிறேன். எங்களுக்குத் திருமணம் செய்து வை.

சீலியா : திருமணச் சடங்கு வார்த்தைகள் சொல்ல எனக்கு வரவில்லை.

ரோச : நீ தொடங்க வேண்டும்...''ஆர்லாண்டோ... நீங்கள்...''

சீலியா : சரி ''ஆர்லாண்டோ. நீங்கள் இந்தரோசலிண்டை மனைவியாக ஏற்றுக் கொள்கிறீர்களா?''

ஆர்லா : ஆம். ஏற்றுக் கொள்கிறேன்.

ரோச : எப்பொழுது?

ஆர்லா : இப்பொழுது. இவள் திருமணம் செய்து வைக்கும் அதே வேகத்தில்...

ரோச ; அப்படியானால் நீங்கள் சொல்ல வேண்டும்... ''ரோசலிண்ட்! நான் உன்னை மனைவியாக ஏற்றுக் கொள்கிறேன்.''

ஆர்லா : ரோசலிண்ட்! நான் உன்னை மனைவியாகஏற்றுக் கொள்கிறேன்.

ரோச : என்னை யார் தர நீங்கள் மனைவியாக ஏற்றீர்கள் என்று உங்களை நான் கேட்கலாம். ஆனால் நான்

உங்களை என் கணவராக ஏற்கிறேன். ஒரு பெண்பாதிரி யாருக்கு முன் செல்லும் பொழுது அவளது சிந்தனை யானது செயலைவிட விரைந்து ஓடும்.

ஆர்லா : அப்படித்தான் எல்லா எண்ணங்களும்...அவற் றிற்கு இறக்கை உண்டு.

ரோச : இப்பொழுது சொல்லுங்கள். அவளைப் பெற்ற தும் எவ்வளவு காலம் அவளைப் பேணி வைத்திருப் பீர்கள்?

ஆர்லா : "என்றும்" வைத்திருப்பேன். மேலும் "ஒரு நாள்" வைத்திருப்பேன்.

ரோச : "என்றும்" என்பதை விட்டுவிட்டு "ஒரு நாள்" என்பதை மட்டும் சொல்லுங்கள். இல்லை இல்லை. ஆர்லாண்டோ! மனிதர்கள் காதலிக்கும் பொழுது ஏப்ரல்! திருமணம் புரியும்பொழுது டிசம்பர்! பெண்கள் கன்னியாக இருக்கும் பொழுது மே! மனைவியாக ஆகும் பொழுது வானம் மாறுகிறது! பெண்புறாவை அடைந்த ஆண்புறாவைவிட, நான் உங்கள் மீது பொறாமைப் படுகிறேன். மழைகண்டு மொழியும் கிளியை விட நான் பொழிகிறேன். புதியன காணத் துள்ளும் குரங்கைவிட நான் துடிக்கிறேன். ஊற்றில் டயானா உருவம் நீர் கொட்டுவதைப் போல, நான் ஒன்றுமில்லாததற்கு அழுவேன். அதுவும் நீங்கள் களிப்பாக இருக்கும் பொழுது நான் கண்ணீர் சிந்துவேன். நீங்கள் உறங்க முனையும் பொழுது நான் சிரிப்பேன்.

ஆர்லா : ஆனால் என் ரோசலிண்ட் அவ்வாறு செய்வாளா?

ரோச : என் உயிர்மீது ஆணை! நான் செய்வது போலவே அவளும் செய்வாள்!

ஆர்லா : ஆனால் அவள் அறிவாளி!...

ரோச : ...இல்லாவிட்டால் இவ்வாறு செய்வாளா? அறிவு வழி ஆக்கும்! ஒரு பெண்ணின் அறிவை அடைத்து வையுங்கள். அது ஜன்னல் வழியே வெளியேறும். ஜன்னலை அடையுங்கள் : சாவித்துளை வழியே வெளியேறும். அதனையும் அடையுங்கள்; புகை போக்கி வழியே புகையுடன் வெளியேறும்.

ஆர்லா : சரி ... ரோசலிண்ட்! நான் உன்னிடமிருந்து இன்னும் இரண்டு மணி நேரம் பிரிந்திருக்க வேண்டும்.

ரோச : ஆ! அன்பே! இரண்டு மணிநேரம் என்னால் பிரிந்திருக்க முடியாதே.

ஆர்லா : பேரரசருடன் நான் விருந்தில் கலந்து கொள்ள வேண்டும். மீண்டும் இரண்டு மணி அளவில் நான் வந்தடைவேன்.

ரோச : ஆ! போங்கள்! போங்கள்! உங்கள் செய்கை எனக்கு முன்பே தெரியும். என் தோழிகள் நிறையச் சொன்னார்கள். ஆனால் நான் குறைவாக நினைக்க

வில்லை. உங்கள் புகழ் மொழி என்னை அடிமை கொண்டது. பரவாயில்லை... வா! சாவே வா! இரண்டு மணிதான் உன் மணி!

ஆர்லா : ஆ! அன்பே! ரோசலிண்ட்!

ரோச : உண்மையாகச் சொல்கிறேன். உங்கள் உறுதி மொழியை நீங்கள் மீறி, குறிப்பிட்ட நேரத்தை விட ஒரு நிமிடம் தாமதமாக வந்தாலும், உங்களைச் சத்தியம் முறிப்பவராக, வெற்றுக் காதலராக, நீங்கள் அழைக்கும் கற்பரசியான ரோசலிண்டுக்குத் தகுதியற்றவராக உங்களை நான் கொள்வேன். ஆகவே என் நிலையை உணருங்கள்; உறுதிமொழியைக் காப்பாற்றுங்கள்.

ஆர்லா : மதபக்திபோல் நான் சொல்வது உறுதி; ரோசலிண்ட்! வருகிறேன்.

ரோச : நல்லது. குற்றவாளிகளைக் காலம்தான் தீர்மானிக்கும் நீதிபதியாகும்! காலம் சோதிக்கட்டும்... போய் வாருங்கள்... வணக்கம்!

(ஆர்லாண்டோ செல்கிறான்)

சீலியா : உனது காதற்பேச்சில் நீ தவறு செய்து விட்டாய். உனது ஆண் ஆடையை நீக்கி, நீ பெண்ணுலகை எவ்வளவு தூரம் வஞ்சித்து வசைமொழி கூறியிருக்கிறாய் என்பதை வெட்ட வெளிச்சமாக்கி இருக்க வேண்டும்.

ரோச : சகோதரி! சகோதரி! எனது காதல் எவ்வளவு ஆழமானது என்பதை நீ நன்கு அறிவாய். ஆனால் அதனை வர்ணிக்க முடியாது. போர்த்துக்கல் கடல் போல எனது காதல் அடிநிலம் காண முடியா ஆழமுடையது.

சீலியா : அதற்கு அடிநிலமே கிடையாது. உன் காதல் கூடக் கூட ஆழமும் கூடும்.

ரோச : இல்லை. காதல் தெய்வமான "குப்பிட்டுக்கு" (Cupid) கண் இல்லை. அவனுக்குத் தெரியும் எனது காதலின் ஆழம்! ஏலியானா! உனக்குச் சொல்கிறேன். ஆர்லாண்டோவைக் காணாமல் என்னால் இருக்க இயலாது. நான் போய், நிழலில் அமர்ந்து, அவர் திரும்பும்வரை பெருமூச்சு விடப்போகிறேன்.

சீலியா : அதுவரை நான் தூங்கப் போகிறேன்.

(இருவரும் செல்கின்றனர்)

காட்சி 2

இடம் : காட்டின் மற்றொரு பகுதி

(ஜெக்குவஸ், பிரபுக்கள், வேட்டுவர்கள் ஆகியோர் வருகின்றனர்)

ஜெக்குவஸ் : மானைக் கொன்றவர் யார்?

ஒரு பிரபு : நான்தான் கொன்றேன்.

ஜேக்குவஸ் : ரோமானிய வெற்றி வீரனைப்போல நாம் இவரைப் பேரரசர் திருமுன் அழைத்துச் செல்வோம். வெற்றிச் சின்னமாக மான் கொம்பை இவர் தலையில் கட்டுவது பொருத்தமாக இருக்கும். இதற்கேற்ற பொருத்தமான பாடல் இருக்கிறதா வேட்டுவ!

வேட்டுவன் : ஆம், ஐயா! இருக்கிறது.

ஜேக்குவஸ் : பாடு — ராகம் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. ஏதாவது சத்தமாக இருந்தால் சரி தான்.

பாட்டு

வேட்டுவன் : (பாடுகிறான்)

மானைக் கொன்றவன் என்ன பெறுவான்?
மானின் தோலும் கொம்பும் அணிவான்
அவனை வீட்டிற் கழைத்து வருக!

(மற்றோர் மானைத் தூக்கி வருக)

கொம்பை அணிய வெட்கம் கொள்ளேல்!
பண்டு தொட்டு அது பெருமைச் சின்னம்
உன்றன் பாட்டன் அதனை அணிந்தார்!
உன்றன் தந்தையும் அதனை அணிந்தார்!
நல்ல கொம்பது நாணப் பொருளோ!

(செல்கின்றனர்)

காட்சி — 3

இடம்: காட்டின் மற்றொரு பகுதி

(ரோசலிண்ட், சீலியா இருவரும் வருகின்றனர்)

ரோசலிண்ட்: எப்படிச் சொல்கிறாய்? இரண்டு மணி ஆகி விட்டது இல்லையா? இன்னும் ஆர்லாண்டோவைக் காணோமே?

சீலியா: உன்னை எச்சரிக்கிறேன். தூய அன்போடும், குழம்பிய மனத்தோடும் அவர் வில்லையும் அம்பையும் எடுத்துக் கொண்டு... தூங்கச் சென்று விட்டாரோ என்று எண்ணுகிறேன்... அதோ பார்... யார் வருகிறது?

(சில்வியஸ் வருகிறான்)

சில்வியஸ்: அழகிய இளைஞனே! நான் இங்கு வந்துள்ள காரணம், என் பீபி என்னை இங்கு தூதாக அனுப்பி இதனை உங்களிடம் கொடுக்கச் சொன்னாள். (ஒரு கடிதத்தை ரோசலிண்டிடம் கொடுக்கிறான்) இக் கடிதத்திலுள்ள பொருள் எனக்குத் தெரியாது. ஆனால் அவள் இதனை எழுதிய பொழுது அவளது வளைந்த புருவத்தையும், கோப உணர்ச்சியையும் கூர்ந்து கவனித்தேன். எனவே இதில் அவளது சினத்தை நீங்கள் காண்பீர்கள். என்னை மன்னியுங்கள். நான் குற்றமற்ற தூதன்.

ரோசலிண்ட்: இந்தக் கடிதம் பொறுமை என்னும் நங்கையையே பொறுமை இழக்கச் செய்யும். அவள் எழுதுகிறாள்... நான் அழகில்லையாம்.

நாகரிகம் இல்லையாம். அறிவில்லையாம்; ஆணவம் பிடித்து அலைகிறேனாம். அரேபியாவின் "போனிக்ஸ்" என்னும் ஒற்றைப் பறவையைப் போல உலகிலேயே நான் ஒருவன்தான் ஆடவனாக இருப்பினும் அவளால் என்னைக் காதலிக்க இயலாதாம்... சரிதான். இடையனே! சரிதான்...இந்தக் கடிதம் உன் திட்டப்படி எழுதப்பட்டிருக்கிறது.

இல்லியஸ் : இல்லை, நான் மறுக்கிறேன். கடிதத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்றே எனக்குத் தெரியாது. பீபியே இதனை எழுதினாள்.

ரோசா : அப்படியா. வா வா, நீ ஒரு காதல் முட்டாள்! நான் அவள் கையைப் பார்த்தேன். அவை கனத்த தோலையும், கல்லான நிலையையும் பெற்றிருந்தன. எனவே அவை வீட்டு வேலை பார்த்துக் காய்த்துப் போன குடும்பப் பெண்ணின் கையைப் போன்றன. அதைப் பற்றிப் பரவாயில்லை. இந்தக் கடிதப் பொருளை அவளால் உருவாக்க முடியாது. இது ஒரு மனிதனின் கண்டுபிடிப்பே! அவனது கை வண்ணமே!

இல்லியஸ் : உறுதியாகச் சொல்கிறேன் ... அவள்தான் எழுதினாள்.

ரோசா : ஏன் இக்கடிதம் கனலும் கந்தகமும் கலந்த கொடிய நடையில் அமைந்துள்ளது? சவால் விடுக்கும் வாசகம்! துருக்கியர் ஒருவர் கிறிஸ்தவர் ஒருவருக்குச் சவால் விடுக்கும் முறையில் அவள் எனக்கு எழுதுகிறாள். பெண்களின் இளகிய மூளை இத்தகு வாசகங்களைக்

கண்டு பிடிக்க முடியாது. முகத்தில் அல்லாமல் அகத்தைச் சுடும் இத்தகு கடுஞ் சொற்களைக் கையாள முடியாது. இக்கடிதத்தை நான் படிக்கிறேன், கேட்கிறாயா?

சில்வியஸ் : நான் அதனை அறியேன். தங்கள் விருப்பம் போல் செய்க. ஆனால் பீபியின் எல்லை கடந்த கொடுமையை உணர்ந்து கொண்டேன்.

ரோச : அவள் நடிக்கிறாள். அந்தக் கொடியவள் எப்படி எழுதுகிறாள் பார்...

(கடிதத்தைப் படிக்கிறாள்)

"நீங்கள் இடையனாக வடிவெடுத்த இறைவனா? நங்கையின் உள்ளம் கவர்ந்த நாயகனா?"—இப்படி ஒரு பெண் வசைபாடலாமா?

சில்வியஸ் : இது வசவா?

ரோச : (படித்தல்) உங்கள் தெய்வீகத் தன்மை ஒதுங்கி விட்டதா? அதை வல்லப் பெண்ணின் இதயம் கொண்டு போராடுகிறீர்களா?

இது போன்ற வசவைக் கேட்டுள்ளாயா?

"ஆடவன் கண்கள் அன்புமொழி பேசும் பொழுது அதனால் எனக்குக் காயம் உண்டாகாது."

என்னை மிருகம் என்கிறாள்.

"தங்கள் ஒளி வீசும் கண்களின் வெறுப்பு என் உள்ளத்தில் இத்தகு காதலை உருவாக்க முடியுமானால்;

கடவுளே! தங்கள் கருணை நோக்கு என் நிலையை என்னவாக்கும்? தாங்கள் என்னைக் கண்டித்தீர்கள்? நான் காதலித்தேன். அப்படியானால் தங்கள் இன்மொழி என்னை என்ன பாடுபடுத்தும்? இக்காதல் கடிதத்தைக் கொண்டு வருபவன், தங்கள்மீது நான் கொண்டுள்ள காதலை அறியமாட்டான். அவன் மூலமாகத் தங்கள் உள்ளத்திரையைத் திறந்து காட்டுங்கள். தங்கள் இளமைக்கும் கருணைக்கும் என்னையும் என் உடைமையையும் ஏற்றுக் கொள்ளுங் கள். இன்றேல் நான் சாகும் வழியை நாட நேரிடும்.''

சில்வியஸ் : இதையா வசவு என்கிறீர்கள்?

சீலியா : ஐயோ! பாவம், முட்டாள் இடையன்!

ரோச : இவனுக்காக இரக்கப்படுகிறாயா? வேண்டாம். இவன் இரங்கத் தக்கவனல்ல. (சில்வியசிடம்) இத்தகு பெண்ணை நீ காதலிக்கலாமா? எப்படி? உன்னையே கருவியாகக் கொண்டு பகடை ஆடுகிறாள். இதைப் பொறுக்கலாகாது. சரி...செல். காதல் உன்னைக் கண் மூடியாக்கி விட்டது. அவளிடம் இதைச் சொல். அவள் என்னைக் காதலித்தால் நான் அவளை உன்னைக் காதலிக்க ஆணையிடுவதாகச் சொல். அதை அவள் மறுத்தால் அவளை நான் என்றுமே ஏற்க முடியாது. நீ அவளுக்காக வாதாடினால் ஒழிய! நீ ஒரு உண்மைக் காதலனாக இருந்தால் ஒரு வார்த்தையும் பேசாமல் உடனே செல்...அதோ யாரோ வருகிறார்கள்... (சில்வியஸ் செல்கிறான். ஆலிவர் வருகிறான்.)

ஆலிவர் : வணக்கம். அழகானவர்களே! உங்களை வேண்டு கிறேன். இந்தக் காட்டில் ஆலிவ் மர வேலி சூழ்ந்து ஆட்டுப்பண்ணை உள்ளதாமே, உங்களுக்குத் தெரியுமா?

சீலியா : இங்கிருந்து மேற்கே அருகில் உள்ளது. ஓடையின் பக்கம், உங்கள் வலது புறமாக உள்ளது. ஆனால் அங்கே வீட்டில் இப்பொழுது யாரும் இல்லை.

ஆலிவர் : வார்த்தைகளைக் கொண்டு வடிவத்தை அறியும் ஆற்றல் கண்களுக்கு இருக்குமே ஆனால், வர்ணனை களிலிருந்து உங்களை நான் அறிய வேண்டும். அதே ஆடைகள்; அதே வயது... "பையன் அழகு... பெண்ணின் தோற்றம்; சகோதரனாக அல்லாமல் மூத்த சகோதரி போல் நடக்கும் பண்பு; தங்கையோ அண்ணனைவிடக் குட்டை; கருமை..." நான் விசாரிக்கும் அந்த ஆட்கள், வீட்டுக்கு உரியவர்கள் நீங்கள்தாமே?

சீலியா : கர்வமாக அல்ல; கேட்பதால் சொல்கிறோம்; நாங்கள்தாம்.

ஆலிவர் : ஆர்லாண்டோ உங்கள் இருவருக்கும் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறான். அவன் ரோசலிண்ட் என்று அழைக்கும் அந்த இளைஞனுக்கு இந்த இரத்தக்கறை படிந்த கைக்குட்டையை அனுப்பியிருக் கிறான். (ரோசலிண்டிடம்) அவன் நீதானா?

ரோச : ஆம். நான்தான். இதன் அர்த்தம் என்ன?

ஆலிவர் : நாணத்தக்க என் செய்கை!...நீங்கள் என்னை யார், எத்தகையவன் என்று அறிந்தால், இந்தக் கைக்குட்டையில் ஏன், எங்கு இரத்தம் படிந்தது என்பதை அறிவீர்கள்.

சீலியா : உங்களை வேண்டுகிறேன். விளக்கமாகச் சொல்லுங்கள்.

ஆலிவர் : இறுதியாக உங்களை விட்டு ஆர்லாண்டோ பிரிந்தபொழுது மீண்டும் ஒரு மணி நேரத்தில் உங்களிடம் வருவதாகக் கூறிச்சென்றான். அவன் காட்டு வழியே சென்ற பொழுது அவன் கண்கள் பாதையின் ஓரத்தில் பாய்ந்தன. அங்கே ஓரிடத்தில் மரத்தின் கீழே கயவன் ஒருவன் தூங்கக் கண்டான். அவன் கழுத்தைச் சுற்றி ஒரு பாம்பு சூழ்ந்து, கொத்தத் தன் தலையைத் தூக்கியது. ஆனால் திடீரென்று ஆர்லாண்டோவைப் பார்த்ததும் அது அஞ்சி ஓடிப் புதருக்குள் மறைந்தது. அந்தப் புதருக்குள் ஒரு சிங்கம் பசியோடு காத்திருந்தது. தூங்கும் மனிதன் எப்பொழுது எழுவான் என்று பூனை போல் கவனித்திருந்தது. செத்தது போல் கிடக்கும் எந்தப் பொருளையும் தீண்டுவது சிங்கத்தின் பண்பன்று. இந்த நிலை கண்ட ஆர்லாண்டோ, தூங்கும் மனிதனின் அருகில் சென்றான்! அவன் தன் அண்ணனாய் இருக்கக் கண்டான்.

சீலியா : அவர் தன் அண்ணனைப் பற்றிக் கூற நான் கேட்டிருக்கிறேன். மனித இனத்திலேயே அன்பற்ற பிறவி அவர்!

ஆலிவர் : ஆம்...இயற்கைக்கு மாறானவன்.

ரோச : ஆனால்...ஆர்லாண்டோ அவரைச் சிங்கத்திற்கு இரையாக விட்டு விட்டாரா?

ஆலிவர் : இருமுறை அவன் அவ்வாறு விட நினைத்துத் திரும்பினான். ஆனால் அன்பும், பழிவாங்க நினையாப் பண்பும், சந்தர்ப்பத்தை மீறிய கருணைத் தன்மையும் அவனைச் சிங்கத்தோடு போராடச் செய்தன. அப்பொழுது ஏற்பட்ட சந்தடியில் நான் விழித்துக் கொண்டேன்.

சீலியா : நீங்கள்தான் அவரது அண்ணனா?

ரோச : அவர் காப்பாற்றியது தங்களைத்தானா?

ஆலிவர் : ஆம், அவன் நான்தான்...ஆனால் இப்பொழுது இருக்கும் நான் அல்ல; பழைய நான். அதுபற்றி நான் வெட்கப்படவில்லை. ஏனென்றால் இப்பொழுது நான் மாறிவிட்டேன்.

ரோச : அந்த இரத்தக் கறைபடிந்த கைக்குட்டையின் பொருளென்ன?

ஆலிவர் : சொல்கிறேன்...நாங்கள் சமாதானம் ஆனதும் கண்ணீரோடு எங்கள் கதைகளை முதலிலிருந்து இறுதி வரை கூறிக் கொண்டோம். சுருக்கமாகச் சொன்னால் அவன் என்னைப் பேரரசரிடம் அழைத்துச் சென்றான். அவர் என்னை அன்போடு கவனிக்கும்படி ஆர்லாண்டோவுக்கு ஆணையிட்டார். அவன் என்னைத் தன் குகைக்கு அழைத்துச் சென்றான். தன் மேலாடையைக் களைந்தான். அவன் கையில் ஒரு பகுதிச்சதையைச்

சிங்கம் கடித்து விட்டதால் இரத்தம் கொட்டிக் கொண் டிருந்தது. அதனால் அவன் மயங்கி விழுந்தான். அப்பொழுதும் ரோசலிண்ட் என்று முனகினான். விரைவில் அவனை மூர்ச்சை தெளித்தேன். காயத்தைக் கட்டினேன். சற்று நேரத்திற்குப் பிறகு மனதி தெம்போடு, அவன் என்னை இங்கு அனுப்பினான்... இந்தக் கதையைச் சொல்லும் நான் புதியவன் ஆகை யால் அவனது வாக்குத் தவறியதற்காக அவனை மன்னிக்க வேண்டிக் கொண்டான். இரத்தம் தோய்ந்த இந்தக் கைக்குட்டையை அதற்குச் சாட்சியாக அவனது ரோசலிண்டிடம் கொடுக்கச் சொன்னான். (ரோசலிண்ட் மயங்கி விழுகிறாள்)

சீலியா : என்ன? என்ன? கனிமீடு! கனிமீடு!

ஆலிவர் : இரத்தத்தைப் பார்த்தாலே சில பேர் மயக்கம் போடுவர்.

சீலியா : இதில் இன்னும் பொருள் இருக்கிறது...கனிமீடு! கனிமீடு!

ஆலிவர் : அதோ! பார் அவனுக்கு நினைவு வருகிறது.

ரோச : (நினைவு வந்து)...நான் வீட்டில் இருக்க விரும்பு கிறேன்...

சீலியா : அங்கே உன்னை அழைத்துச் செல்கிறோம்... (ஆலிவரிடம்) ஐயா! உங்களை வேண்டுகிறேன். இவன்

கையைப் பிடித்து அழைத்துச் செல்ல உதவி செய்கிறீர்களா?

ஆலிவர் : மகிழ்ச்சியாக உதவுகிறேன் (ரோசலிண்டிடம்) இளைஞனே! நீ ஓர் ஆடவன்! ஆனால் உனக்கு ஆண்மையான இதயம் தேவைப்படுகிறது.

ரோச : ஆம்...ஒப்புக் கொள்கிறேன். (சீலியாவிடம்) சகோதரி! எப்படி என் நடிப்பு!...(ஆலிவரிடம்) உங்களை வேண்டுகிறேன்...உங்கள் சகோதரரிடம் நான் எப்படி நடித்தேன் என்று சொல்லுங்கள்.

ஆலிவர் : இது நடிப்பல்ல. உங்கள் முக வெளுப்பும், தோற்றமும் உங்கள் மயக்கம் உண்மையானது என்பதைப் பறைசாற்றும்.

ரோச : இல்லை. அது நடிப்பே! இது உறுதி!

ஆலிவர் : அப்படியானால் சரி...இனிமேல் நல்ல இதயம் பெற்று மனிதனாக நடி...

ரோச : அப்படியே செய்கிறேன்...ஆனால் நான் நடவடிக்கையில் ஒரு பெண்.

சீலியா : வா...உன் முகம் மேலும் வெளுக்கிறது. வீடு நோக்கி நட, (ஆலிவரிடம்) ஐயா! நீங்களும் எங்களுடன் வருக...

ஆலிவர் : அப்படியே செய்கிறேன்...நான் பதில் கொண்டு செல்ல வேண்டும். என் சகோதரனை நீ எப்படி மன்னித்தாய் ரோசலிண்ட்!

ரோச : நான் ஏதாவது கண்டு பிடிக்க வேண்டும்...ஆனால் உங்களை வேண்டுகிறேன்...எனது நடிப்பைப் பற்றி அவரிடம் சொல்லுங்கள். போகலாமா (செல்கின்றனர்)

களம் 5 காட்சி—1

இடம் : ஆர்டன் காடு.

(டச்ஸ்டோன், ஆட்ரி ஆகிய இருவரும் வருகின்றனர்.)

டச்ஸ்டோன் : திருமணம் செய்து கொள்ள நான் குறிப் போம். பொறுமையாக இரு ஆட்ரி.

ஆட்ரி : உண்மையில் பாதிரியார் நல்லவர்தான்.

டச் : அவர் பொல்லாதவர்...ஆனால் ஆட்ரி, இந்தக் காட்டில் உள்ள ஓர் இளைஞன் உன்மீது உரிமை கொண்டாடுகிறான்.

ஆட்ரி : அவன் யாரென்று எனக்குத் தெரிகிறது. அவ னுக்கு என்மீது எந்த உரிமையும் இல்லை. நீங்கள் குறிப்பிடும் அந்த மனிதன் அதோ வருகிறான்.

டச் : ஒரு முட்டாளைப் பார்ப்பது எனக்கு விருந்து உண்பதுபோல! நாம் ஒரு ஒருவரை ஒருவர் கேலி செய்யும் வாய்ப்புக் கிடைத்தால் இழக்க மாட்டோம்.

(வில்லியம் வருகிறான்)

வில்லியம் : வணக்கம் ஆட்ரி!

ஆட்ரி : வணக்கம் வில்லியம்!

வில்லியம் : வணக்கம் ஐயா!

டச் : வணக்கம் நண்பரே! உங்கள் குல்லாவை மாட்டிக் கொள்ளுங்கள்...உங்கள் வயது என்ன நண்பரே?

வில்லியம் : ஐந்தும் இருபதும் ஐயா!

டச் : முதிர்ந்த வயதுதான்...உங்கள் பெயர் வில்லியமா?

வில்லியம் : ஆம்.

டச் : நல்ல பெயர். நீங்கள் இந்தக் காட்டில்தான் பிறந்தீர்களா?

வில்லியம் : ஆம். அதற்காகக் கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்.

டச் : நல்லது...நீங்கள் பணக்காரரா?

வில்லியம் : ஆம் அப்படித்தான்.

டச் : சரி சரி...நீங்கள் அறிவுள்ளவரா?

வில்லியம் : ஆம், பேரறிவு உடையவன்.

டச் : அப்படியா? எனக்கு ஒரு பழமொழி நினைவுக்கு வருகிறது. "முட்டாள் தன்னை அறிவாளி என்று நினைக்கிறான். சாதாரண தத்துவ ஞானி ஒருவன்

திராட்சைப் பழத்தைத் தின்ன வாயருகே கொண்டு போகும்பொழுது உதடுகளைத் திறக்கிறான். அதாவது திராட்சைகள் தின்பதற்காகவும், உதடுகள் திறப்பதற்காகவுமே படைக்கப்பட்டன என்பது அவனது தத்துவம்...நீங்கள் இந்தப் பெண்ணைக் காதலிக்கிறீர்களா?

வில்லியம் : ஆம் ஐயா!

டச் : உங்கள் கையை நீட்டுங்கள். (நாம் நண்பர்களாக இருப்போம்). நீங்கள் படுத்திருக்கிறீர்களா?

வில்லியம் : இல்லை ஐயா!

டச் : அப்படியானால் இதை என்னிடமிருந்து தெரிந்து கொள்ளுங்கள். பெறுவதைப் பெற வேண்டும். ஒருவன் மது ஊற்ற இன்னொருவன் பருகுவான். ''இப்ஸ்'' என்ற இலத்தீன் வார்த்தைக்கு ''அவன்'' என்பது பொருள் என்று எல்லா எழுத்தாளர்களும் ஒப்புக் கொள்ளுகின்றனர். இப்பொழுது நீங்கள் ''இப்ஸ்'' அல்ல! நான்தான் அவன்.

வில்லியம் : எந்த அவன்? ஐயா.

டச் : அவன்...இந்தப் பெண்ணை மணக்க வேண்டியவன். ஆகவே, முட்டாள்! விட்டுவிடு...இவள் தொடர்பை விட்டுவிடு...இல்லாவிட்டால் நீ அழிவாய். நன்கு புரிந்து கொள். நீ சாவாய்...நான் உன்னைக் கொல்வேன்! உன் வாழ்வை மரணமாக மாற்றிவிடுவேன், உன் உரிமையை அடிமையாக ஆக்கி விடுவேன். நஞ்சு அல்லது கம்பு;

அல்லது இரும்பு, அல்லது சூழ்ச்சி, அல்லது இது போல் நூற்றைம்பது வழிகளால் உன்னைக் கொல்வேன், ஆகவே நடுங்கு...ஓடு.

ஆட்ரி : அங்ஙனமே செய் வில்லியம்!

வில்லியம் : கடவுள் உங்களுக்கு அருள் புரியட்டும்...நான் வருகிறேன். (செல்கிறான்)

(கோரின் வருகிறான்)

கோரின் : என் தலைவரும், தலைவியும் உங்களைத் தேடுகிறார்கள். வாருங்கள் வாருங்கள்.

டச் : வா ஆட்ரி, வா...நான் செல்கிறேன்! நீயும் வா. (செல்லுதல்)

காட்சி—2

இடம் : காட்டின் மற்றொரு பகுதி.

(ஆர்லாண்டோ, ஆலிவர் இருவரும் வருகின்றனர்)

ஆர்லாண்டோ : (ஆலிவர் சீலியாவைக் காதலிக்கும் செய்தி அறிந்து வியந்து)இவ்வளவு சிறிய சந்திப்பிலேயே அவளைக் காதலிப்பது என்பது இயல்வதா? பார்த்ததும் காதலா? காதலித்ததும் ஆசையா? ஆசைப்பட்டால் அவள் இசைய வேண்டும்.

ஆலிவர் : காதல் வேகம் பற்றிக் கேள்விகள் கேட்காதே. நான் ஏலியானாவைக் காதலிக்கிறேன் என்று

அவனிடம் சொல். அவள் என்னைக் காதலிக்கிறாள் என்று என்னிடம் சொல். இருவரையும் இசைய வைத்து இன்புற வை. அது உன் நற்பண்புக்கு ஏற்றதே. நம் தந்தையின் சொத்து முழுவதையும் நான் உன்னிடம் தந்து நான் இங்கேயே ஓர் இடையனாக வாழ்ந்து சாகிறேன்.

ஆர்றா : உங்களுக்கு என் இசைவு உண்டு. உங்கள் திருமணம் நாளை நடக்கும். அதற்குப் பேரரசரையும் மற்றவர்களையும் அழைக்கப் போகிறேன். நீங்கள் போய் ஏலியானாவைத் தயார் செய்யுங்கள். அதோ என் ரோசலிண்டு வருகிறாள்.

(ரோசலிண்டு வருதல்)

ரோசலிண்டு : (ஆலிவரிடம்) சகோதரரே! கடவுள் உங்களைக் காக்கட்டும்!

ஆலிவர் : சகோதரி! உங்களுக்கும் என் வாழ்த்துக்கள்!

(போகிறான்)

ரோச : அன்பான ஆர்லாண்டோ! (அவனது காயத்தை நோக்கி) தங்கள் இதயத்தை ஒரு துணியால் கட்டி யிருப்பதைப் பார்த்து நான் எவ்வளவு வருந்துகிறேன் தெரியுமா?

ஆர்லா : அது என் கை.

ரோச : தங்கள் இதயம்தான் சிங்கத்தின் நகங்களால் புண்படுத்தப்பட்டு விட்டதாக நினைத்தேன்.

ஆர்லா : காயம்...அது ஒரு பெண்ணின் கண்களால் ஏற்படுகிறது...

ரோ : தங்கள் கைக்குட்டையைத் தங்கள் சகோதரர் காட்டியபொழுது நான் எவ்வாறு போலியாக மூர்ச்சை அடைந்தேன் என்பது பற்றி அவர் தங்களிடம் சொன்னாரா?

ஆர்லா : சொன்னார். அதற்கு மேலும் ஆச்சரியமானது பற்றியும் சொன்னார்.

சோச ; ஓ! புரிகிறது. நீங்கள் சொல்வது புரிகிறது... இல்லை. அது உண்மைதான்...அதுபோலத் திடீரென்று ஏற்பட்டது வேறு எதுவுமில்லை. சீசரின் ''வந்தேன், கண்டேன். வென்றேன்'' என்பதைத் தவிர, என் சகோதரியும் உங்கள் சகோதரரும் ஒருவரை ஒருவர் கண்டதும் கவனித்தனர்! கவனித்ததும் காதலித்தனர்! காதலித்ததும் பெருமூச்சு விட்டனர்; பெருமூச்சு விட்டதும் ஒருவரை ஒருவர் காரணம் கேட்டனர்! காரணம் அறிந்ததும் மருந்தைக் கண்டு பிடித்தனர்! திருமண ஜோடி ஆகிவிட்டனர். இனி அவர்களை எதுவும் பிரிக்க முடியாது.

ஆர்லா : அவர்களுக்கு நாளை திருமணம் நடக்கும். பேரரசர் தலைமை தாங்குவார்...நாம் அடைய முடியாத இன்பத்தைப் பிறர் அனுபவிக்கப் பார்ப்பது எவ்வளவு கசப்பானது! என் அண்ணனின் மகிழ்ச்சியை நாளை நான் காணும்பொழுது என் துயரம் உச்ச கட்டத்தை அடையும்.

ரோச : ஏன் நாளை நான் உங்கள் ரோசலிண்டாக நடிக்க முடியாதா?

ஆர்லா : கற்பனையிலேயே நான் நீண்ட நாள் வாழ முடியாது.

ரோச : வெற்று வார்த்தைகளால் நானும் உங்களை நீண்ட நாள் சலிப்படையச் செய்யேன். நான் சொல்லப் போவது விளையாட்டன்று; உண்மை, எனக்குச் சில மந்திர ஜாலங்கள் தெரியும். நான் மூன்று வயதாக இருந்த காலத்திலிருந்தே ஒரு மந்திரவாதியிடம் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது. அவர் தம் கலையில் வல்லவர். நீங்கள் ரோசலிண்டை இதய பூர்வமாக நேசிப்பது உண்மையானால், நாளை உங்கள் சகோதரர் ஏலியானாவைத் திருமணம் செய்துகொள்ளும்பொழுது; நீங்கள் ரோசலிண்டைத் திருமணம் செய்து கொள்வீர் கள். அவள் எவ்வளவு இக்கட்டான நிலையில் இருக் கிறாள் என்பது எனக்குத் தெரியும். நாளை அவளை உங்கள் கண்முன் ஆபத்தின்றி வரவழைக்கப் போகிறேன்.

ஆர்லா : உண்மையாகத்தான் சொல்கிறாயா?

ரோச : இது சத்தியம்! நான் ஒரு மந்திரவாதி! ஆகவே நாளை நீங்கள் உங்களது சிறப்பான உடைகளை அணிந்து கொள்ளுங்கள். உங்கள் நண்பர்களை எல்லாம் அழையுங்கள். நாளை ரோசலிண்டுடன் உங்கள் திருமணம் நடக்கும்... அதோ பாருங்கள்... என்னைக் காதலிக்கும் ஒருத்தியும், அவளைக் காதலிக்கும்

ஒருவனும் வருகின்றனர். (சில்வியஸ், பீபி ஆகிய இருவரும் வருகின்றனர்)

பீபி : (ரோசலிண்டிடம்) இளைஞரே! நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தைக் காட்டி எனக்குத் தீமை புரிந்து விட்டீர்கள்.

ரோச : அதற்காக நான் கவலைப்படவில்லை. உன்னிடம் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும் என்பதே என் நோக்கம். உன்னை ஓர் நம்பிக்கையான இடையன் பின் தொடர்கிறான். அவனைப் பார். அவனைக் காதலி. அவன் உன்னை வழிபடுகிறான்.

பீபி : (சில்வியசிடம்) நல்ல இடையரே! காதல் என்றால் என்ன என்று இந்த இளைஞரிடம் சொல்லும்.

சில்வியஸ் : காதல் என்பது கண்ணீரும் பெருமூச்சும் கலந்த கலவை! நான் பீபியைக் காதலிக்கிறேன்.

பீபி : நான் கனிமீடைக் காதலிக்கிறேன்.

ஆர்லா : நான் ரோசலிண்டைக் காதலிக்கிறேன்.

ரோச : நான் எந்தப் பெண்ணையும் காதலிக்கவில்லை.

சில்வியஸ் : காதல் என்பது நம்பிக்கையும் சேவையும் கலந்தது. நான் பீபியைக் காதலிக்கிறேன்.

பீபி : நான் கனிமீடைக் காதலிக்கிறேன்.

ஆர்லா : நான் ரோசலிண்டைக் காதலிக்கிறேன்.

ரோச : நான் எந்தப் பெண்ணையும் காதலிக்கவில்லை.

சில்வியஸ் : காதல் என்பது கற்பனை, உணர்ச்சி, ஆசை, அலங்காரம், கடமை, காட்சி, பணிவு, பொறுமை, பொறுமையின்மை, தூய்மை, சோதனை ஆகியவற்றால் ஆனது. நான் பீபியைக் காதலிக்கிறேன்.

பீபி : நான் கனிமீடைக் காதலிக்கிறேன்.

ஆர்லா : நான் ரோசலிண்டைக் காதலிக்கிறேன்.

ரோச : நான் எந்தப் பெண்ணையும் காதலிக்கவில்லை.

பீபி : (ரோசலிண்டிடம்) அப்படியானால் நான் உன்னைக் காதலிப்பதாக நீ ஏன் என்னைத் திட்டுகிறாய்?

சில்வியஸ் : (பீபியிடம்) அப்படியானால் நான் உன்னைக் காதலிப்பதற்காக நீ ஏன் என்னைத் திட்டுகிறாய்?

ஆர்லா : அப்படியானால் நான் உன்னைக் காதலிப்பதற்காக நீ ஏன் என்னைத் திட்டுகிறாய்?

ரோச : யாரிடம் அவ்வாறு கூறுகிறீர்கள்?

ஆர்லா : இங்கில்லாத, கேளாத, அவளிடம் நான் கூறுகிறேன்.

ரோச : உங்களை எல்லாம் வேண்டுகிறேன். இனி இந்தப் பேச்சு வேண்டாம். இது சந்திரனை நோக்கி ஐரிஷ் ஓநாய்கள் ஊளையிடுவதற்குச் சமமாகும்...(சில்வியஸிடம்) என்னால் இயலுமானால் நான் உனக்கு

உதவுவேன். (பீபியிடம்) என்னால் இயலுமானால் நான் உன்னைக் காதலிப்பேன். நாளை எல்லோரும் என்னைச் சந்தியுங்கள். (பீபியிடம்) நான் எந்தப் பெண்ணையாவது திருமணம் செய்து கொண்டால் உன்னைத் திருமணம் செய்து கொள்வேன். நாளை என் திருமணம் நடக்கும்... (ஆர்லாண்டோவிடம்) நான் எப்பொழுதாவது ஆடவனைத் திருப்தி செய்தால் உங்களைத் திருப்தி செய்வேன். நாளை உங்கள் திருமணம் நடக்கும். (சில்வியசிடம்) உன்னை எது திருப்தி செய்யுமோ அதனால் உன்னை நான் திருப்தி செய்வேன். நாளை உன் திருமணம் நடக்கும்... (ஆர்லாண்டோவிடம்) நீங்கள் ரோசலிண்டை நேசிப்பதால் நாளை சந்திக்கவும். (சில்வியசிடம்) நீ பீபியை நேசிப்பதால் சந்திக்கவும். நான் எந்தப் பெண்ணையும் நேசிக்காததால் நானும் சந்திக்கிறேன். உங்கள் அனைவருக்கும் வணக்கம். உங்களுக்கு நான் இட்டிருப்பது ஆணை! நினைவிருக்கட்டும்.

சில்வியஸ் : நான் அதனை மறவேன்! தவறேன், உயிரோடிருந்தால்.

பீபி : நானும்தான்.

ஆர்லாண்டோ : நானும்தான். (செல்கின்றனர்)

காட்சி—3

இடம் : காட்டின் மற்றொரு பகுதி.

(டச்ஸ்டோன், ஆட்ரி ஆகிய இருவரும் வருகின்றனர்)

டச்ஸ்டோன் : நாளை நமக்கு மிக மகிழ்ச்சியான நாள்.

ஆட்ரி : நாளை நாம் திருமணத்தால் இணைவோம்.

ஆட்ரி : நான் அதனை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அதில் ஒன்றும் தவறில்லை...அதோ...பேரரசரின் இளம் பணியாள் இருவர் வருகின்றனர். (இளம் பணியாள் இருவர் வருகின்றனர்.)

முதல் பணியாள் : பெரியீர்! நல்ல சந்திப்பு.

டச்ஸ்டோன் : ஆம்; நல்ல சந்திப்பு! வருக! அமர்க. ஒரு பாட்டுப் பாடுக!

இரண்டாம் பணியாள் : உங்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தயார். நடுவில் அமர்கிறோம்.

முதல் பணியாள் : இருமாமல் செருமாமல் உடனே பாடுவோமா?

இ. பணியாள் : உண்மை; உண்மை. ஒரு குதிரை மீது சவாரி செய்யும் இரண்டு நாடோடிகள் போல ஒரே பண்ணில் இணைந்து பாடுவோம்.

பாடல்

காதலன் ஒருவனும் அவன்கா தலியும்
வயலின் வழியே வந்துகொண் டிருந்தார்.

வசந்த காலம்; எழிலின் கோலம்!
இனிய காதலர் விரும்பும் காலம்!
வயலின் நடுவே காதலர் அமர்ந்தார்.
இந்தப் பாடலை அந்தச் சமயம்
பாடினர் அந்த வாழ்க்கைப் பூக்கள்!
எனவே இந்தக் காலம் ஏற்பீர்!
வசந்த காலம் காதற் கீரிடம்!

டச்ஸ்டோன் : உண்மைதான்! நல்லோய்! இந்தப் பாடலில் ஒன்றும் பெரிய கருத்து இல்லாவிடினும், இராகமும் இசைவாக இல்லை.

முதல் பணியாள் : ஐயா! நீங்கள் ஏமாந்து போனீர்கள். நாங்கள் நேரத்தைப் பயன்படுத்தினோம். எங்கள் நேரத்தை நாங்கள் வீணாக்கவில்லை.

டச் : ஆம். இத்தகைய முட்டாள் தனமான பாட்டைக் கேட்டதால் எனது நேரம் வீணாகி விட்டதாகவே நான் கருதுகிறேன். கடவுள் உங்களுக்கு அருள் புரியட்டும்! உங்கள் குரலைச் சரி செய்யட்டும்! வா ஆட்ரி! போகலாம். (செல்கின்றனர்)

காட்சி—4

இடம் : காட்டின் வேறொரு பகுதி.

[பேரரசர், ஏமியன்ஸ், ஜேக்குவஸ், ஆர்லாண்டோ, ஆலிவர், சீலியா ஆகியோர் வருகின்றனர்.]

பேரரசர் : ஆர்லாண்டோ! அந்த இளைஞன் கூறியுள்ளபடி எல்லாவற்றையும் நிறைவேற்றுவான் என்று நம்புகிறாயா?

ஆர்லாண்டோ : சிலர் சில சமயம் தம் நம்பிக்கையை எண்ணி அஞ்சுவதையும், பிறகு அச்சத்தை உணர்வதையும் போல நானும் சில சமயம் நம்புகிறேன். சில சமயம் நம்பிக்கை இழக்கிறேன்.

(ரோசலிண்டு, சில்வியஸ், பீபி ஆகியோர் வருகின்றனர்.)

ரோசலிண்டு : பொறுமை கொள்ளுங்கள்...மீண்டும் தம் ஒப்பந்தத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். (பேரரசரிடம்) நான் ரோசலிண்டை இங்கு கொண்டு வந்தால் நீங்கள் அவளை ஆர்லாண்டோவுக்குக் கொடுக்க இசைகிறீர்கள் இல்லையா?

பேரரசர் : ஆம்...அங்ஙனமே செய்வேன்...நாடுகள் எனக்கு இருந்து அவற்றை அவளுக்கு வழங்க நேரினும் அவ்வாறே செய்வேன்.

ரோச : (ஆர்லாண்டோவிடம்) நான் அவளை இங்கு கொண்டு வந்தால் நீங்கள் அவளை ஏற்க இசைகிறீர்கள் இல்லையா?

ஆர்லாண்டோ : அங்ஙனமே செய்வேன், நான் எல்லா நாடுகளின் மாமன்னனாக இருப்பினும்...

ரோச : (பீபியிடம்) நான் விரும்பினால் நீ என்னை மணம் செய்து கொள்வாய் இல்லையா?

பீபி : ஆம்...அவ்வாறே செய்வேன். அடுத்த மணியில் இறக்க நேர்ந்தாலும்.

ரோச : ஆனால் நீ என்னை மணக்க மறுத்தால், இந்த நம்பிக்கையான இடையனை மணக்க இசைவாய் இல்லையா?

பீபி : ஆம், அதுதான் நம் பேரம்!

ரோச : (சில்வியசிடம்) பீபி உன்னை மணக்க இசைந்தால் நீ ஏற்றுக் கொள்வாய். இல்லையா?

சில்வியஸ் : ஆம். அவளை ஏற்பதும் சாவும் ஒன்றாக இருப்பினும் அவ்வாறே செய்வேன்.

ரோச : இவற்றைச் சரியாக நிறைவேற்ற நான் சத்தியம் செய்துள்ளேன். பேரரசர் அவர்களே! உங்கள் மகளை வழங்க உறுதி கொள்க. ஆர்லாண்டோ! அவளை ஏற்க உறுதி கொள். பீபி என்னை மணம் புரியத் தயாராகு. இல்லாவிட்டால், மறுத்தால் இந்த இடையனை மணக்க உறுதி கொள். சில்வியஸ்! அவள் என்னை மணக்க மறுத்தால் நீ அவளை மணக்க உறுதி கொள். உங்கள் ஐயங்களைத் தீர்க்க வழி காண நான் செல்கிறேன். (ரோசலிண்டு, சீலியா ஆகிய இருவரும் செல்கின்றனர்.)

பேரரசர் : இந்த இடைக்குல இளைஞனின் தோற்றத்தில் என் மகளின் சில சாயலை நான் காண்கிறேன்.

ஆர்லாண்டோ : அரசே! அவனை நான் முதலில் சந்தித்த பொழுது அவளை உங்கள் மகனென்று சந்தேகித்தேன். ஆனால் அரசே! இவன் காட்டில் பிறந்தவன். காட்டில் வசித்த இவனது மந்திரவாதி மாமனால் வளர்க்கப் பெற்றவன். (டச்ஸ்டோன், ஆட்ரி ஆகிய இருவரும் வருகின்றனர்.)

ஜேக்குவஸ் : ஊழி வெள்ளத்தில் கரையேறும் கப்பலைப் போல இதோ இன்னொரு ஜோடி வருகிறது. இது ஒரு அதிசயமான மிருக ஜோடி! முழு முட்டாள் ஜோடி!

டச்ஸ்டோன் : அனைவருக்கும் வணக்கம்!

ஜேக்குவஸ் : பேரரசே! அவனை வரவேற்க முயலுங்கள். நான் அடிக்கடி காட்டில் சந்தித்த முட்டாள் அவன் தான். அவன் ஒரு அரண்மனைவாசி என்று சத்தியம் செய்கிறான்.

டச்ஸ்டோன் : யாராவது ஐயுற்றால் அதனைத் தீர்க்கத் தயார். நான் நடனம் ஆடியுள்ளேன்; நண்பனை வஞ்சித்துள்ளேன். பகைவனோடு இனிமையாகப் பழகியுள்ளேன். மூன்று தையற்காரர்களுக்குக் கூலி கொடாமல் அலைய வைத்துள்ளேன். நான்கு பேருடன் சச்சரவிட்டுள்ளேன். ஒருவருடன் சண்டை போட்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

ஜேக்குவஸ் ; அது எப்படி?

டச் : நாங்கள் சந்தித்தோம், சச்சரவானது ஏழாவது காரணத்திற்காக ஏற்பட்டது.

ஜேக்குவஸ் : அது எப்படி ஏழாவது காரணம் பேரரசே! இவனை விரும்புகிறீர்களா?

பேரரசர் : இவனை நான் மிகவும் விரும்புகிறேன்.

டச் : கடவுள் உங்களுக்கு அருள் புரிவார். ஐயா! நானும் உங்களை விரும்புகிறேன். ஐயா! இங்குள்ள மற்ற ஜோடிகளைப் போல நானும் திருமண உறுதிமொழி எடுக்கவும், முறிக்கவும் உறுதி கூறுகிறேன். திருமணம் இணைக்கிறது; உணர்ச்சி முறிக்கிறது. இவள் ஒரு ஏழைக்கன்னி. சாதாரணமானவள்! ஆனால் எனக்கே

உரியவள். எனது கற்பனை...இவளை எவனும் ஏலான்... முத்தானது. எப்படி மோசமான சிப்பியில் வாழ்கிறதோ, அது போல் நாணமும் கற்பும் இந்த அழகற்ற நங்கையிடம் வாழ்கின்றன.

பேரரசர் : இவன் மிக விரைவாகவும் அழகாகவும் பேசுகிறான்.

டச் : முட்டாளின் தாழ்ப்பாள் விரைவில் திறக்கும்.

ஜேக்குவஸ் : ஆனால் அந்த ஏழாவது காரணம்...அதன் மீது எப்படி சச்சரவு ஏற்பட்டது.

டச் : ஏழுமுறை விலக்கப்பட்ட பொய்மீது சண்டை ஏற்பட்டது. ஆட்ரி...ஒழுங்காக நில். ஐயா... ஏழாவது காரணத்தை விளக்குகிறேன் கேளுங்கள். அரண்மனை வாசி ஒருவனின் தாடிவெட்டை நான் விரும்பவில்லை. அது சரியாக வெட்டப்படவில்லை என்று நான் கூறியதற்கு அவன் அது சரியாக வெட்டப்பட்டிருப்ப தாகக் கூறினான். இதற்கு நாகரிகப் பதில் என்றுபெயர். அது சரியாக வெட்டப்படவில்லை என்று நான் மீண்டும் செய்தி அனுப்பினால், அது அவன் திருப்திக்காக வெட்டப்பட்டிருப்பதாக அவன் பதில் அனுப்புவான். இதற்குக் கிண்டல் பதில் என்று பெயர். மீண்டும் நான் அது சரியாக வெட்டப்படவில்லை என்று செய்தி அனுப்பினால் அவன் எனது தீர்ப்பு தகுதியற்றது என்பான். இதற்கு அநாகரிகப் பதில் என்று பெயர். மீண்டும் நான் செய்தி அனுப்பினால் நான் உண்மை பேசவில்லை என்று அவன் சொல்வான். இதற்குத் தாக்குதல் என்று பெயர். மீண்டும் நான் செய்தி அனுப்பினால் நான் பொய் சொல்வதாகச் சொல்வான். இதற்குத் தடைச் சண்டை என்று பெயர். அதற்கு அடுத்துத், தருவது பொய்ச் சூழ்நிலை இறுதியாக ஏழாவதாக வருவது நேரடிப் பொய் ஆகும்.

ஜேக்குவஸ் : அவனது தாடி சரியாக வெட்டப்படவில்லை என்று நீ எப்படிச் சொன்னாய்?

டச் : பொய்ச் சூழ்நிலைக் கட்டத்திற்கு மேல் போக நான் விரும்பவில்லை. அவனும் எனக்கு நேரடிப் பொய் வாய்ப்பைத் தரத் துணியவில்லை. ஆகவே நாங்கள் எங்கள் வாள்களின் நீளத்தை அளந்து சரிபார்த்து விட்டு பிரிந்தோம்.

ஜேக்குவஸ் : பொய்யின் நிலைகளைக் கட்டம் கட்டமாக விளக்க முடியுமா?

டச் : முடியும்...நாகரிகப் பழக்கங்களை விளக்கப் புத்தகம் இருப்பது போலப் பொய்யை விளக்கவும் புத்தகம் உள்ளது. முதலாவது நாகரிகப்பதில், இரண்டாவது கிண்டல், மூன்றாவது அநாகரிப்பதில், நான்காவது தாக்குதல், ஐந்தாவது தடைச்சண்டை, ஆறாவது பொய்சூழ்நிலை; ஏழாவது 'நேரடிப் பொய்'. இதில் நேரடிப் பொய்யைத்தவிர மற்ற அனைத்தையும் நீங்கள் தவிர்க்கலாம். அதனையும் நீங்கள் தவிர்க்கலாம். அதனையும் கூட நீங்கள் "ஆல்" என்ற அடைச் சொல் போட்டுத் தவிர்க்கலாம். சண்டை ஏற்பட இருந்த ஒரு சமயத்தில் ஒருவர் "ஆல்" என்ற அடைச் சொல்லைப் பயன்படுத்தி, "நீ இப்படிச் சொன்னதால் நான் அப்படிச் சொன்னேன்" என்றார். உடனே அவர்களது சச்சரவு தீர்ந்து கைகுலுக்கி நண்பர்களாயினர். "ஆல்" என்பது அமைதித் தூதன்! பண்புச் சின்னம்!

ஜேக்குவஸ் : பேரரசே! இவன் ஓர் அரிய மனிதன் இல்லையா? இவன் எல்லாவற்றிலும் தன் திறமையைக் காட்டுகிறான்; இருந்தும் முட்டாள்!

பேரரசர் : இவன் தன் அறிவைப் பொய்க்கால் குதிரை போல் மூடியாகப் பயன்படுத்தி வெற்றியை எய்கிறான்.

(திருமணத் தெய்வமான ஹைமன், ரோசலிண்டு, சீலியா ஆகியோர் வருகின்றனர்.)

இனிய பாடல் ஒலிக்கிறது

ஹைமன் : சொர்க்கம் முழுதும் மகிழ்ச்சி ஓசை!
உலகப் பொருள்கள் கூடும் போது!
நல்ல அரசே மகளை ஏற்க!
திருமணத் தெய்வம் அவளைக் கொணர்ந்தது
அவளைக் கவர்ந்த இதயத் தோனின்
கையை அவளது கைகள் ஏற்க!

ரோச : (பேரரசரிடம்) நான் உங்களைச் சேர்ந்தவள். ஆகையால், நான் என்னை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

(ஆர்லாண்டோவிடம்) நான் உங்களைச் சேர்ந்தவள். ஆகையால், நான் உன்னை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.

பேரரசர் : நான் காண்பது நனவானால் நீ என் மகள் தான்.

ஆர்லாண்டோ : நான் காண்பது நனவானால் நீ என் ரோசலிண்டுதான்!

பீபி : காட்சியும் உருவமும் உண்மையானால் பிறகு என்ன? என் காதலுக்கு விடை கொடுக்கிறேன்.

ரோச : (பேரரசரிடம்) நீங்கள் இல்லாவிட்டால் எனக்குத் தந்தையே வேண்டாம்... (ஆர்லாண்டோவிடம்)... நீங்கள் இல்லாவிட்டால் எனக்குக் கணவனே வேண்டாம். (பீபியிடம்) நீ இல்லாவிட்டால் எனக்கு மனைவியே வேண்டாம்.

ஹைமன் : அமைதி! அமைதி! குழப்பம் திரும்!
முடிவை நானே உரைப்பன் கேளீர்!
இங்கே எண்மர் இணைந்து சேர்வீர்!
ஹைமன் முன்னே கரங்கள் கோப்பீர்!
(ஆர்லாண்டோவையும் ரோசலிண்டையும் நோக்கி)
எந்தத் துயரும் உங்களைப் பிரிக்கா.
(ஆலிவர் சீலியா ஜோடியிடம்)
உங்கள் இதயம் ஒன்றாய் உறைக!
(பீபியை நோக்கி)
இந்த இடையனை ஏற்றுக் கொள்க.
இன்றேல் பெண்ணை ஏற்க நேரும்.
(டச்ஸ்டோன் ஆட்ரி ஜோடியிடம்)
நீங்கள் இருவீர் இணைப்பும் உறுதி!
காலக் குளிரும் பனியும் போல!
திருமணப் பாடல் இணைந்து பாடுவோம்.
இந்த நிகழ்ச்சிப் போக்கு பற்றி
வினாக்கள் கேட்டு மகிழ்வீர் நீரே!

பாடல்

திருமணம் என்பது ஜூனோவின் திருமுடி
ஆண்பெண் இணைக்கும் புனித இணைப்பு
ஹைமன் மணத்தால் நகரை வளர்க்கும்
ஆதலால் மணத்தை மதிக்க வேண்டும்.
மதிப்பு மதிப்பு மாபெரும் புகழ்
ஹைமன் வாழ்க! நகர் இறை வாழ்க!

பேரரசர் : (சீலியாவிடம்) தம்பி மகளே! உன் வரவு நல்வரவாகுக! என் மகளுக்கு இணையாக உன்னையும் வரவேற்கிறேன்.

பீபி : நான் என் வாக்குத் தவற மாட்டேன். (சில்விய சிடம்) இப்பொழுது நீங்கள் எனக்கு உரியவர். உங்கள் நம்பிக்கை என் அன்பை உங்களுடன் இணைக்கிறது)

(ஆலிவரின் தம்பியாகிய ஜேக்குவஸ் டீ பாய்ஸ் என்பவன் வருகிறான்)

ஜேக்குவஸ் டீ பாய்ஸ் : உங்கள் முன் சிலவார்த்தைகள் கூற அனுமதிக்க வேண்டுகிறேன். சர்ரோலண்டின் இரண்டாம் மகன் நான், சில செய்திகளைச் சொல்ல வந்திருக்கிறேன். தகுதி வாய்ந்த தலைமையினர் எல்லாம் ஒருவர் பின் ஒருவராக இந்தக் காட்டுக்கு ஓடி வந்த செய்தி கேட்டுச் சினம் கொண்ட பிரடரிக் அரசர் மாபெரும் படையைத் தயாரித்தார். அவர் தானே தலைமை தாங்கி அதனை இக்காடு நோக்கி நடத்தி வந்தார். தன் அண்ணனின் தலையைக் கொய்ய வேண்டும் என்பதே அவரது நோக்கம். இந்தக் காட்டின் எல்லையில் நுழைந்தார். அப்பொழுது ஒரு மகானைச் சந்தித்தார். அவரோடு உரையாடிய பிறகு அவர் தன் கொலை முயற்சியைத் துறந்ததோடு, இந்த உலகத்தின் மீதுள்ள பந்த பாசத்தையும் துறந்தார். தனது அரசை நாடுகடத்தப்பட்ட தன் அண்ணனுக்கு வழங்கியுள்ளார். அவரோடு ஓடி வந்துள்ள பிரபுக்களிடமிருந்து பறித்துக் கொண்ட அவர் தம் உடைமைகளையும் திருப்பி வழங்கியுள்ளார். நான் சொல்வது முக்காலும் உண்மை! என் உயிர் மீது ஆணை! இது சத்தியம்!

பேரரசர் : இளைஞனே! வருக! நீ உன் சகோதரர்களின் திருமணச் சமயத்தில் சரியாக வந்துள்ளாய். ஆலிவருக்கு அவனது சொத்துக்கள் திருப்பி வழங்கப்படு கின்றன. எனக்குப் பரந்த நாடே வழங்கப்படுகிறது. முதலில் நாம் இங்கு நன்கு தொடங்கிய நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவோம். பிறகு நம்மோடு பல துயர்களை அனுபவித்த நம் நண்பர்களோடு நமது புதிய அதிர்ஷ்

டத்தைப் பகிர்ந்து கொள்வோம். இதற்கிடையில் புதிய அதிர்ஷ்டத்தை மறப்போம். இடையர்களின் மகிழ்ச்சியில் இணைவோம். இசை முழங்கட்டும். மண மக்கள் அனைவரும் இணைந்து நடனம் ஆடட்டும்.

ஜெக்குவஸ் : பேரரசே! மன்னிக்கவும் ஐயா. (ஜேக்குவஸ் டீபாய்சிடம்) பிரடரிக் அரசர் நாடு துறந்து மத வாழ்வில் இறங்கிவிட்டாரா?

ஜேக்குவஸ் டீ பாய்ஸ் : ஆம்.

ஜேக்குவஸ் : அவரிடம் நான் செல்கிறேன். இந்தப் புது உடைமையாளர்களைத் துறக்கிறேன். அவரிடம் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது. (பேரரசரிடம்) நான் செல்கிறேன். ஆனால் நீங்கள் உங்களது பழைய மாண்புமிக்க பதவியை அடையுங்கள். உங்கள் பொறுமைக்கும் உயர்பண்புக்கும் அது ஏற்றதே. (ஆர்லாண்டோவிடம்) உன் அன்புக்கு ஏற்ற அழகிய மனைவியை நீ அடைக. (ஆலிவரிடம்) நீங்கள் உங்களது பழைய சொத்துக்களையும், இனிய மனைவி யையும் புதிய நண்பர்களையும் அடைக. (சில்வியசிடம்) நீண்ட இனிய மணவாழ்வு உனக்கு அமையட்டும் (டச்ஸ் டோனிடம்) உனக்குச் சச்சரவான வாழ்க்கை அமை யட்டும். உனது காதல் பயணம் இருமாத அளவினதே. உங்கள் அனைவர்க்கும் இன்ப வாழ்வு அமையட்டும். எனது பாதை முற்றிலும் வேறானது.

பேரரசர் : தங்குக ஜேக்குவஸ் தங்குக!

ஜேக்குவஸ் : உங்களது இன்ப நிகழ்ச்சிகளைக் காண நான் விரும்பவில்லை. தாங்கள் நாடு திரும்புவதற்காக இங்கு புறக்கணித்துள்ள காட்டுக் குகையில் நான் தங்கி உங்களது கருத்துக்களை அறிவேன்.

(செல்கிறான்)

பேரரசர் : சரி சரி...போ...போ...நாங்கள் இந்தச் சடங்குகளைத் தொடங்குகிறோம். இது அனைவர்க்கும் மகிழ்ச்சி அளிக்கும். (நடனம் தொடங்குகிறது. அனைவர்க்கும் திருமணம் நடக்கிறது)

முடிவுரை

ரோசலிண்ட் : ஒரு பெண் முடிவுரை வழங்குவது மரபன்று. என்றாலும் ஒரு பிரபு வழங்குவதைவிட அது தாழ்ந்த தன்று. நல்ல பொருளுக்கு விளம்பரம் தேவையில்லை. அதுபோல் நல்ல நாடகத்துக்கு முடிவுரை தேவையில்லை. இருந்தாலும் விளம்பரத்தால் நல்ல பொருள் பொலிவடைகிறது. அதுபோல் நல்ல நாடகமும் முடிவுரையால் விளக்கமடைகிறது. என் நிலை இங்கு என்ன? நல்ல முடிவுரை வழங்குவதும் அன்று; நல்ல நாடகத்தை வழங்கியதும் அன்று. நான் ஒரு பிச்சைக் காரனாக வேடம் தரிக்கவில்லை. எனவே யாசிப்பது எனக்குப் பொருந்தாது. எனது வழி உங்களிடம் வேண்டுவதே ஆகும். நான் முதலில் பெண்களிடமிருந்து தொடங்குகிறேன். ஏ பெண்களே! நீங்கள் ஆண்களிடம் கொண்டுள்ள காதலுக்காகவும் ஏ ஆண்களே! நீங்கள் பெண்களிடம் கொண்டுள்ள காதலுக்காகவும் உங்கள் மீது குற்றம் சாட்டுகிறேன். இந்த நாடகம் உங்களை மகிழ்விக்கும். நான் ஒரு பெண்ணாக இருந்தால் நான் உங்களில் பலரை இயன்றவரை முத்தமிட்டுக் களிப் பூட்டுவேன். (அக்காலத்தில் ஆண்கள்தான் பெண் வேடம் போட்டனர்) நீங்களும் அதற்குப் பதில் எனக்கு அன்பாக விடை கூறி அனுப்புவீர்களாக! (செல்கிறாள்)

—திரை—

பொன்முடி பதிப்பகம்

(தோற்றம் : 3—6—1963)

123, முத்துப்பட்டணம் III தெரு, காரைக்குடி-623001

போன் : 2124

"பொற்கிழிக் கவிஞர்" அரு. சோமசுந்தரன் நூல்கள்

மலேசியா	20 00
சிங்கப்பூர்	20 00
ஹாங்காங்	15 00
தாய்லாந்து	20 00
பிலிப்பைன்சு	20 00
இந்தியா	20 00
இலங்கை	20 00
நேபாளம்	16 00
பிரிட்டன்	15 00
பிரான்சு	15 00
ஜெர்மனி (மேற்கு)	15 00
சுவிட்சர்லாந்து	15 00
இத்தாலி	20 00
பெல்ஜியம்	15 00
ஹாலந்து	15 00
ஆஸ்திரியா	15 00
வாட்டிகன்	15 00
ஐரோப்பா	18 00
வள்ளல் அழகப்பர்	10 00
ஆங்கில அருங் கதைகள்	10 00
கவியரங்கில் கவிஞர் சோமசுந்தரன்	6 50
திருமுறைகள் விட்டு நூல்	15 00
பொற்கிழிக் கவிஞர் சோம சுந்தரன் கவிதைகள்	11 00
கட்டுரைக் கற்கண்டு	5 00
கட்டுரைப் பெட்டகம்	9 00
கட்டுரைக் கற்பகம்	15 00
கட்டுரை இலக்கியம்	20 00
கட்டுரைக் கதம்பம்	10 00
ஷேக்ஸ்பியரின்	
மாக்பெத்	16 00
மன்னன் லியர்	20 00
பன்னிரண்டாம் இரவு	14 00
ஒதெல்லோ	25 00
எண்ணிய எண்ணியாங்கு	18 00
அந்தோணியும் கிளியோபாட்ராவும்	25 00
இரண்டாம் ரிச்சர்டு	14 00
வெனிஸ் வியாபாரி	22 00
ஜூலியஸ் சீசர்	16 00
புயல்	16 00
ஹாம்லெட்	25 00
கார் காலக்கதை	25 00
மூல பவுத்திர நோய்	4 00
மாணவர் பட்டி மன்றம்	7 00
பாரதியாரின் இராணுவ சிந்தனை	8 00
கவிதை வானில்	9 00
கவிதை மண்ணில்	24 00
கவிதைக் கடலில்	25 00
கவிதை ஆற்றில்	25 00
சுதந்திர தாகம்	5 50
அழகிய உளவாளி	20 00
சர்க்கஸ் அரசி	20 00
வேனின் முனை	10 00
தியாகக் குடும்பம்	10 00

MK Colour Process, Madras-14.

Designed by P. N. Anandan